கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(04.11.2018 - 04 கார்த்திகை 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 195, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018

**திருத்தந்தையின் இம்மாத கருத்து**

அமைதிக்கான பணிக்கு அன்பு மற்றும் உரையாடல் மொழியே எப்போதும் மேலாதிக்கம் செய்யும்படியாக திருத்தந்தையோடு சேர்ந்து செபிப்போம்.

ஞான ஒளி

ඥාන ඔළි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

# எமது நாட்டின் எதிர்கால நலன் கருதி சிந்தித்து செயல்படுவோம்

## இலங்கையில் நிலவுகின்ற சூழ்நிலைக் குறித்து, இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையால் வெளியிடப்படும் விசேட அறிவித்தல்.

எம் நாட்டின் நிகழ்கால சூழ்நிலைக் குறித்து இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அவதானம் ஈர்க்கப்பட்டுள்ளது. இச்சீர்குலைக்கப்பட்டுள்ள அரசியல் செயற்பாடுகளினால் ஏற்படுகின்ற விளைவுகள் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பது நாட்டு மக்களே என்பதை அனைவரும் நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும்.

எனவே, எம் நாட்டின் அனைத்து அரசியல் தலைவர்களிடமிருந்தும் நாம் வேண்டிக் கொள்வது, குறுகிய மனப்பான்மையுடன் பலனற்ற விதத்தில் சிந்திக்காது, நாட்டின் எதிர்கால நலன்கருதி, இப்போது உருவெடுத்துள்ள கிளர்ச்சிகரமான நிலைக்கு தீர்வு காண்பதற்கு இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு யாப்புக்கு ஏற்ப செயற்பட வேண்டும் என்பதாகும். எம் நாட்டில் இறந்தகால வரலாற்றை பின்நோக்கும்போது, நாம் முகங்கொடுத்த விடயங்கள் இரத்தம் சிந்தப்பட்ட நிலைகளே எம் கண்முன் நிற்கின்றது. இதன் நிமித்தம் அனைவரிடம் இருந்தும் நாம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்வது எம் நாட்டின் மற்றும் மக்களின் நலனுக்காக மதிநுட்பத்துடனும், கட்டுப்பாட்டுடனும் பணியாற்ற வேண்டும் என்பதேயாகும். இந்நிலையில் எடுக்கும் எந்தவித தீர்மானமாக இருப்பினும், அது நீதிக்கும் சட்டதிட்டங்களுக்கும் ஏற்ப அவற்றை கடைப்பிடித்தல் அவசியம். இதன் முக்கிய விடயமாவது, பதவியில் நிலைத்திருப்பது இல்லையேல் பதவியிலிருந்து நீங்குவது அல்ல, மக்களுக்குள்ள சக்தியையும் எம் நாட்டு பூமித்தாய்க்கு இயற்கையிலேயே கிடைக்கப்பெற்ற கொடைகளுக்கும் இடையூறு விளைவிக்காது, நாட்டின் முன்னேற்றத்தை நோக்கிப் பயணிப்பதாகும். எனவே அனைவரும் ஞானத்துடனும், நல்லறிவுடனும், செயற்படுவதற்கான இறையாசீர் வேண்டுமெனவும் எம் நாட்டினை ஆசீர்வதிக்குமாறும் இறைவனிடம் நாம் பிரார்த்திக்கின்றோம்.

**29ம் திகதி ஐப்பசி 2018**

மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS,
தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

மேதகு ஆயர் டி. வலன்ஸ் மென்டிஸ்
பிரதம செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

## கொழும்பு உயர்மறைமாவட்ட மறைக்கல்விப் பணியக அறிவித்தல்.

**2018 வருட இறுதி மறைக்கல்வித் தேர்வின் விசேட அறிவித்தல்**

2018ம் ஆண்டு கார்த்திகை மாதம் 3ம் திகதி திட்டமிட்டபடி மறைக்கல்வித் தேர்வு சகல மறைப்பாடசாலைகளிலும் நடைபெற்றது. ஆனால் இவ்வருடம் மார்கழி மாதம் நடைபெறவிருக்கும் கல்விப் பொதுத்தராதர பரீட்சையின் ஒரு சில பாடங்களுக்கான செயல்முறை பரீட்சைகள் நடைபெறவிருப்பதால் தரம் 11ற்காக மறைக்கல்வித் தேர்வு மாத்திரம் கார்த்திகை மாதம் 10ம் திகதி காலை 9.00 மணிக்கு நடைபெறும். தயவுசெய்து இவ்வறிவித்தலை பங்குத்தந்தை, உதவிப்பங்குத்தந்தை, வட்டார இயக்குனர்கள் மற்றும் பொறுப்பு மறைப்பணியாளர்கள் கருத்திற்கொண்டு செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

15




## இறைப்பணியாளர் குறே ஆண்டகை திருச்சபையை புதுப்பித்த காலத்தின் நபராகும்.

இறைப்பணியாளரான அதிமேதகு. தோமஸ் கர்தினால் குறே (அ.ம.தி) ஆண்டகையின் 30வது நினைவஞ்சலி தின திருப்பலி

"சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு அல்ல, சேவையாற்றுவதற்கு...." என்ற ஆயர்த்துவக் கருப்பொருளுக்கு இணங்க தம் மந்தைகளை தூய்மைபடுத்த மற்றும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்து வாழும் கொள்கைகளை கடைபிடித்த 'காலத்தின் நபராக' இறைபணியாளராக அதிமேதகு தோமஸ் கர்தினால் குறே (அ.ம.தி) ஆண்டகை விளங்கினார் என இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவரான பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு. வின்ஸ்டன் ஜே. பர்னாந்து ஆண்டகை...

15




## தேவமாதா திருச்செபமாலையை கையிலேந்தி கொண்டு சகல தீமைகளில் இருந்தும் எம்மை பாதுகாக்கின்றார்.

**அருட்பணி. பிரசாத் ஹர்ஷன் அடிகளார் தேவத்தையில் நடைபெற்ற செபமாலை பவனியின் போது தெரிவித்தார்.**



"தேவமாதா, அலகையிடமிருந்து எம்மை மீட்கச் செய்யும் போராட்டத்தில் நாமும் பங்குகொள்ள தினந்தோறும் எச்சந்தர்ப்பத்திலும் செபமாலையை உச்சரிப்பது சாலச்சிறந்த விடயமாகும்" என விசுவாச முயற்சி குருவானவர்கள் சபையின் அருட்பணி. பிரசாத் ஹர்ஷன் அடிகளார் 24.10.2018 அன்று..

15

## புனித அக்குவைனாஸ் உயர்கல்வி நிறுவனமானது இந்நாட்டிலுள்ள கல்வி நிறுவனங்களில் உயரிய மதிப்பீடுகளையும், சிறந்த கல்வி நடவடிக்கைகளையும் வெளிப்படுத்தும் கல்வி நிறுவனமாகும்.

**உயர்கல்வி அமைச்சர் திரு. விஜேதாச ராஜபக்ஷ அவர்கள் இக்கல்வி நிறுவனத்தின் வருடாந்த பட்டமளிப்பு தினத்தின்போது தெரிவித்தார்.**

"இவர் இக்கருத்துக்களை கடந்த வாரம் கொழும்பு பொரளை புனித அக்குவைனாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் வருடாந்த டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..



**என் ஆற்றலாகிய ஆண்டவரே உம்மிடம் நான் அன்பு கூர்கின்றேன் (தி.பா 18)**

# மரியாயின் சேனையாளர்களின் வருடாந்த திருச்செமாலைப் பேரணி 2018

கொழும்பு உயர் மறைமாவட்டத்திலுள்ள மரியாயின் சேனையாளர்களும் மறைமாவட்டப் பங்கு இறைமக்களும் ஒன்றிணைந்து நடாத்திய திருச்செபமாலைப் பேரணி கடந்த 24.10.2018 ராகம, தேவத்தையில் உள்ள இலங்கை நாயகி பசிலிக்கா தேவாலயத்தில் நடாத்தப்பட்டது.

மறைமாவட்டத்தின் பங்குகளில் இயங்கும், மரியாயின் சேனையின் அடிப்படை குழுமமான வளர்ந்தோர் பிரசீடியங்கள், பங்குகளிலும், பாடசாலைகளிலும், துறவற பயிற்சி நிலையங்கள், சிறுவர் இல்லங்களில் இயங்கும் சிறுவர் பிரசிடியங்களையும் அச்சிறுவர் பிரசீடியங்களை நிர்வகிக்கும் சிறுவர் கியூறியாக்கள் (Junior Curiae) ஆகியவற்றை மொழி அடிப்படையில் நிர்வகித்துவரும் அவற்றின் மேற்சபைகளான - பரிகார மாதா கொமிசியம் (தமிழ்), லங்கா கொமிசியம் (சிங்களம்), கொழும்புக் கொமிசியம் (ஆங்கிலம்), ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து அகில இலங்கை செனாத்துஸ் சபை (சேனையின் இலங்கைக்கான அதியுயர் மேற்சபை) அச்சபையின் தேசிய ஆன்ம இயக்குனராக அருட்பணி இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம், திருயாத்திரைக்கான ஆயர் இல்ல தொடர்பாளர் அருட்பணி பொன்சியஸ் றொனி பெரேரா ஆகியோரின் வழிநடத்தலின் கீழ் இத்திருயாத்திரை ஒழுங்குபடுதப்பட்டிருந்தது.

அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு றாகமை தேவத்தை புனித யோசவ்வாஸ் திருச்சுரூபத்தின் அருகில் உயர் மறைமாவட்டத்தின் பங்கு மக்களும், சேனையாளர்களும் ஒன்றிணைந்து சேனை தொடக்கச்செபம், திருச்செமாலையுடன் இத்திருயாத்திரையை ஆரம்பித்திருந்தனர். கிறிஸ்துவின் நண்பர்களாக சகோதரர்களாக ஒரே மக்களாக ஒன்றிணைந்து மரியன்னையின் தலைமையில் வழிநடந்து சென்று இந்நாட்டையும் குடும்பங்களையும் அருள் வழங்களை அள்ளி வழங்கும் மத்தியஸ்தையாகிய அன்னை மரியிடம் ஒப்படைத்து செல்ல வேண்டியதன் அவசியத்தை அருட்பணி பொன்சியஸ் றொனி பெரேரா அடிகள் தேவத்தை தேவாலயம் கட்டப்பட்ட வரலாற்று நிகழ்வுகளைக் குறிப்பிட்டுத் தெளிவுபடுத்தியதுடன் திருயாத்திரை ஆரம்பமானது.

பவனி பசிலிக்காவை வந்தடைந்ததும் துணைஆயர் மேதகு மெக்ஸ்வெல் சில்வா, ஆன்ம இயக்குனர், பங்குத்தளக் குருக்கள் சகிதம் அவர்கள் தமிழ்க்கலாச்சார முறைப்படி மாலையிட்டு ஆராத்தியெடுத்து வரவேற்கப்பட்டதுடன் கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

கன்னிமரியாயே இறைவனின் தாயாரே நாம் உமக்கே சொந்தம் (Vergin Mary Mother of God We Are Yours) என்ற சேனை ஆச்சேஸ் விழா ஒப்புக்கொடுத்தல் வார்த்தையைத் கருப்பொருளாகக் கொண்ட பதாதைகள், சேனை விருதுக்கொடிகள் என்பனவற்றைத் தாங்கிய இறைமக்கள் தத்தமது மொழிகளில் திருச்செபமாலை பாடல்கள் ஆர்ப்பரிப்புக்கள் பக்தியோடு பங்குபற்றும் விதத்தில் திருச்சுரூபப் பாதையில் ஒலிபெருக்கி வசதிகள் செய்யப்பட்டிருந்தமையும் சுரூபம் தாங்கிய ஊர்தியில் அன்னை மரியாயின் முக்கிய வாழ்க்கை..

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# நாட்டில் சமாதானத்தையும் ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்புவதற்கு நான் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டேன்

## பேராயர் ஆண்டகை குருக்களுக்கான 2ம் அமர்வின் போது தெரிவித்தார்.

"இந்நாட்டில் சமாதானத்தையும் ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்புவதற்கு நான் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட வேளை பல சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டன. பல கருத்துவாதங்களுக்கு எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. எனினும் இவற்றிற்கு முகங்கொடுக்கையில் நான் எனது மனசாட்சிக்கு ஏற்ப செயற்பட முன்வந்தேன்." என பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, கடந்த தினம் பேராயர் இல்லத்தின் மண்டபத்தில் இடம்பெற்ற 2018ம் ஆண்டிற்கான குருக்களுக்கான 2ம் அமர்வின் போது தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், கடந்த இருபத்தேழு வருடங்கள் அவரது பணிக்காலத்தில் ஓர் நல்ல ஆயராக மக்களின் நலன்கருதி அவர்களது ஆன்மீக வளர்ச்சிக்காக செயற்பட்டார் எனவும், அவை அனைத்தும் தன்னலம் பாராது செய்தார் எனவும் அவற்றை வரிசைப்படுத்தி கூறவேண்டிய அவசியம் இல்லை எனவும் தெரிவித்தார். சில சமயங்களில் நான் அமைதி காத்தது அத்தருணத்தில் அதுவே பொருத்தமானது என்பதனாலேயே. அவர் பல சந்தர்ப்பங்களில், எமது திருச்சபைக்காகவும், அதன் தலைவர்களுக்காகவும், திருச்சபையின் படிப்பினைகள் மற்றும் கலாச்சாரங்களை பாதுகாப்பதற்காகவும் தைரியத்துடன் முன்நின்று செயற்பட்டது, குரல் கொடுத்தது, அவரது ஆயத்துவப்பணியை செவ்வனே நிறைவேற்றுவதற்காகும் எனத் தெரிவித்தார். அத்துடன் உயர்மறைமாவட்ட வடபிரிவு கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் கத்தோலிக்க மக்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ள பிரச்சினைகள் குறித்து, உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை கருத்துக்களை முன்வைத்ததோடு அருட்பணி. மெல்கம் பெரேரா அடிகளாரால் "இளைஞர் ஆண்டு" பற்றியும், அதி.வண. அருட்பணி. பிரான்சிஸ் நிக்லஸ் சேனாநாயக்க அவர்களால் "திருப்பலியின் காணிக்கைகள்" குறித்தும் கருத்துக்களை முன்வைத்தார்கள்.

தகவல் : T. சுனில் பர்னாந்து

## பாரத பெண்கள் ஒன்றிய கூட்டம்

பாரத பெண்கள் ஒன்றிய (AGM) கூட்டம் கார்த்திகை 10ம் திகதி சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு YWCH (Rotunda Gradens) கொழும்பு 3ல் நடைபெறும். அனைத்து பெண்களும் எம்மோடு வந்து இணையுமாறு அழைப்பு விடுக்கின்றோம். எமது சமூகத்தை பாதுகாக்க நாம் முன்வருவோம். கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்புகொண்டு உங்கள் இருக்கைகளை பதிவு செய்து கொள்ளவும். 0777289750 அல்லது 0773000716 அனுமதி இலவசம்

தகவல் : ஒக்லி ராயர்.



13.10.2018 அன்று புனித சூசையப்பர் ஆலயத்தில் முதல்நன்மை திருப்பலி நடைபெற்றது. இதனை பங்குதந்தை சுனில் குமார பீரீஸ் தலைமையின் கீழ் மறையாசிரியா திருமதி. பிலோமீனா சால்ஸ்டன் ஒத்துழைப்புடன் 150வது ஆண்டில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. இதன் திருப்பலியை அருட்பணி தேவசீலன் அடிகளார் ஒப்புகொடுத்தார்.

தகவல் :றொக் பர்னாந்து

## நத்தார் கரோல் கீதப் (பக்திப் பாடல்கள்) போட்டி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சிங்கள தேசிய சேவை வருடாந்தம் நடாத்தும் கே.பிரான்சிஸ் ஞாபகார்த்த பக்தி கீதப் போட்டி இவ்வருடமும் இடம்பெறவுள்ளது. இதில் உங்கள் பக்திப் பாடல் குழுவும் பங்குபற்ற முடியும். மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

திரு. லூகஸ் திருச்செல்வம் 0771856675

தகவல் : இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

# கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆலயத்தில் நற்கருணைப் பெருவிழா



150வது ஜுபிலி ஆண்டின் நற்கருணை திருவிழா 21-10-2018 அன்று மாலை 4.30 மணியலவில் கிரான்ட்பாஸ் புனித சூசையப்பர் ஆலயத்திலிருந்து நகலாம் வீதி வழியாக தொட்டலங்க வழியாக சென்று மாவத்தை புனித அன்தோனியார் ஆலயத்தில் இறுதி ஆசீர்வாதத்துடன் நிறைவுபெற்றது.

தகவல் :றொக் பர்னாந்து

# வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலயத்தில் நற்கருணைப் பெருவிழா



வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலயத்தில் ஐப்பசி 21ம் திகதி, மாலை 5 மணிக்கு நற்கருணை சுற்றுப்பிரகாரமும் அதனைத் தொடர்ந்து மாலை 6.00 மணிக்கு மும்மொழியில் திருப்பலியும் பங்குமக்களோடு வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. திருப்பலியை கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தல பரிபாலகர் அருட்பணி. ஜூட்ராஜ் அடிகளாருடன் இணைந்து எமது பங்கு தந்தை மனோகுமரன் நாகரத்தினம் அடிகளார், உதவி பங்குத்தந்தை புத்திக ஜயமான அடிகளார், மையூரபிரதேச புனித அந்தோனியார் ஆலயத்தின் அருட்பணி. ஜூட் கிரிசாந்த ஆகியோர் ஒப்புக்கொடுத்தனர்.

தகவல் : மைக்கல் பர்னாந்து புள்ளே

# யாழ்ப்பான மறைமாவட்ட, முல்லைத்தீவு வட்டார தர்மபுரத்தில், புனித பிரான்சிஸ் சவேரியாரின் ஆலயத்தை ஆசீர்வதித்தல்



இவ் ஆலயமானது, புனித பிரான்சிஸ் சவேரியாருக்கு அர்ப்பணிக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டது. பங்குத் தந்தையான அருட்பணி. என்னி வின்சன்ட் அவர்களின் அழைப்பிற்கு இணங்க, யாழ்ப்பான மறைமாவட்ட மேதகு ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை இந்நிகழ்வில் கலந்து கொண்டு ஆலயத்தினை ஆசீர்வதித்து, திருப்பலி நிறைவேற்றினார்.

தகவல் : சரத் அதுகோரல.

ஞான ஒளி
GNANA OLI ඥාන ඔලි
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
04 கார்த்திகை, 2018 ஞாயிற்றுக்கிழமை.

## “பிறருக்காகவும் கடவுளுக்காகவும் மட்டும் வாழ்ந்தவர்கள் புனிதர்கள்”

பரிசுத்த திருச்சபையானது இம்மாதம் 1ம் திகதி சகல தூயவர்களின் தினத்தையும், 2ம் திகதி தொடக்கம் ஏனைய நாட்கள் அனைத்தையும் சகல ஆன்மாக்களையும் நினைவுகூர்ந்து நிற்கின்றது. புனிதர்கள் என்பவர்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகவும், பிற தெய்வங்களை மறுத்ததற்காகவும் கொல்லப்பட்டவர்கள், வாளால் அறுப்பட்டோர், சிரச்சேதம் செய்யப்பட்டோர், நெருப்பில் தூக்கி எறியப்பட்டோர் இப்படி பல உபாதைகளை அனுபவித்தவர்கள். இவர்கள் யாரும் புனிதர்களாக பிறப்பதில்லை, மனிதர்களாகப் பிறந்து புனித நிலைக்குத் தங்களையே மாற்றிக் கொண்டவர்கள். இவர்கள் தங்கள் வாழ்வை இறைவனுக்காக அர்ப்பணித்து, கிறிஸ்தவ விசுவாசத்தில் ஊறிநின்று, ஒரு எடுத்துக்காட்டான வாழ்வு வாழ்ந்தவர்கள். புனிதர்கள் தவறு செய்தவர்கள் தான். ஆனால் உணர்ந்து திருந்தியவர்கள். ஒரேயடியாக வீழ்ந்துவிடவில்லை. வீழ்ந்தாலும் எழுந்தவர்கள். தனக்காகவும், பிறருக்காகவும் வாழ்கிறவன் தான் மனிதன், பிறருக்காகவும் கடவுளுக்காகவும் மட்டும் வாழ்கிறவன் புனிதன். நாம் ஒவ்வொருவரும் புனிதர்களாக வாழ இன்றைய நாள் அழைப்புவிடுக்கின்றது.

மேலும் இம்மாதம் முழுவதும் இறந்த ஆன்மாக்களை நினைவுகூரவும், அவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக செபிக்கவும் அன்னையாம் திருச்சபை எமக்கு அழைப்பு விடுக்கின்றது. எனவே கத்தோலிக்கர்களாகிய நாம் அனைவரும் இதனை ஏற்று, இம்மாதம் முழுவதும் இறந்த ஆன்மாக்களின் கல்லறைகளை தரிசிப்பதும், அவர்களுக்காக திருப்பலி ஒப்புக்கொடுப்பதும், தான தருமங்கள் செய்வது என பல காரியங்களில் ஈடுபடுகின்றோம். அத்தோடு யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக நாம் வேண்டும்பொழுது, நாம் நினைத்துப் பார்க்காத ஆபத்து காலங்களிலே அவர்கள் நமக்கு உதவுவார்கள்.

புனித அல்போன்ஸ் லிகோரியார் பின்வருமாறு கூறுகின்றார்; “தூய ஆன்மாக்களுக்கு தங்களுக்காக எதையும் செய்ய முடியாவிட்டாலும், எங்களுக்கு பல வரப்பிரசாதங்களை பெற்றுத்தரமுடியும். அவர்களை புனிதர்களைப் போல பரிந்துரையாளர்கள் எனச்சொல்ல முடியாவிடினும், கடவுளின் மதுரமான பராமரிப்பின் பொருட்டு பல்வேறு நன்மைகளையும், தீமைகளிலிருந்தும், நோய்களிலிருந்தும், பயங்கரங்களிலிருந்தும் விடுதலையையும் எமக்குப் பெற்றுத்தர வல்லன” என்கின்றார். எனவே நாம் வாழும் காலத்தில் அவர்களுக்காக செபிக்கும்போது, நாம் மறு உலகிற்கு போகும்போது எமக்காக இறைவனிடம் பரிந்துரைப்பவர்களாக அவ்வான்மாக்கள் இருப்பார்கள். நாம் இவ்வுலகில் வாழும்போதே மறு உலகுக்கு ஏற்றவாறு வாழ்ந்தால், நம் இறப்பு நமக்குச் சிறப்பாக இருக்கும். உலகப் போக்குகளுக்கு அடிமையாகி மூவொரு கடவுளை மறந்து வாழ்வோமாயின் நமது முடிவு கவலைக்குரியதாகவே இருக்கும். எனவே விழித்துக்கொள்வோம். இறந்தோரிடம் இருந்து கற்றுக்கொள்வோம். இறந்தோரைக் கைவிடாது இக்காலத்தில் அவர்களைக் கைதூக்கி விடுவோம்.

இம்மாதம் முழுவதும் எமது குடும்பத்தில் மற்றும் குடும்ப உறவுகளில் மரித்தவர்களுக்காக மட்டும் மன்றாடுவது போதுமானது என்று எண்ணாது சகல மரித்த ஆன்மாக்களுக்காகவும் மற்றும் யாரும் நினையாத மறக்கப்பட்ட ஆன்மாக்களுக்காகவும் மன்றாடுவது இறைமக்களாகிய எமது கடமையும் பொறுப்புமாக இருக்கின்றது என்பதை எமது பரிசுத்த திருச்சபை நினைவூட்டுகின்றது.

**இறையாசீருடன் ஆசிரியர்**



# யார் புனிதர்

## சகல புனிதர்கள் தினம் - காாத்திகை 01

புனிதம் என்பதற்கான ஆங்கில வார்த்தை Holiness என்பதாகும். Holiness என்ற வார்த்தைக்கும் Wholess (முழுத்தன்மை) என்கிற வார்த்தைக்கும் தொடர்பு உண்டு. அதாவது புனிதம் என்பது வாழ்வின் முழுமையைக் கண்டு கொள்வதாகும். புனிதர்கள் என்பவர்கள் வாழ்வை முழுமையாக வாழ்கிறவர்கள். அதாவது இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றுவதையே தங்கள் இலக்காகக் கொண்டு அதன் பொருட்டுத் துன்பங்களை சந்தித்து, உயிரையும் தியாகம் செய்து, இயேசுவின் சாட்சிகளாக இம்மையில் வாழ்ந்து மறுமையில் அவருடன் இணைந்து வளமாக்கப்படுபவர்களாக உயர்ந்தவர்கள் புனிதர்கள் இவர்கள் வாழ்ந்த பயணத்திற்கு பாதைகள் பல உண்டு. நம் வாழ்க்கை பயணத்தை நாம் தான் தீர்மானித்து தொடர்கின்றோம். நம்மில் பலர், பயணம் செய்த பாதைகளையே தெரிவு செய்வார்.

யாரும் பயணம் செய்யாத பாதைகளை வெகு சிலரே தேர்ந்தெடுத்து விசுவாசப் பயணத்திற்கு அடிகோலிடுவர். இப்பாதை கல்லும், முள்ளும் நிறைந்த கரடு, முரடானதும், சஞ்சலங்களும், சவால்களும் நிறைந்தது.

சோதனைகள் அனைத்தையும் சாதகமாக்கிட புதிய விடியலாக கத்தோலிக்க விசுவாசத்தில், இறைகூவலாகி, தடம்பதித்த அம்‘மா’ மனிதர்களை நம் திருச்சபை புனிதர்கள் என அழைக்கின்றது.

துன்பத்தை மகிழ்வோடு ஏற்றுக்கொண்டு, இன்னும் துன்பம் வேண்டும் என்று அருளுக்காக, நற்செய்தியை போதிப்பதற்காக ஏழ்மையை அணிகலன்களாக எடுத்த உத்தமர்கள். கிறிஸ்துவை பிரதிபலித்தவர்கள். “கிறிஸ்துவின் வழியை தேர்வு செய்தவர்கள். இடுக்கமான பாதையில் விரும்பி நடந்தவர்கள்”.

“புனிதர்களின் சமூக உறவையும், விசுவசிக்கின்றேன்” என்ற விசுவாச பிரமாண அறிக்கையில் நாம் புனிதர்களின் பாதைகளை நமது வாழ்வின் வழித்தடமாக நமக்கு பாதுகாவலாக ஏற்றுக்கொள்வது மறக்க முடியாத, மறுக்க முடியாத உண்மை.

அரிது அரிது கிறிஸ்தவராகப் பிறத்தல் அரிது கத்தோலிக்க கிறிஸ்தவராகப் பிறத்தல் அதனிலும் அரிது.

நாம் எங்கே சென்றாலும் அங்கெல்லாம் நம்முடன் காவல்தூதர்கள் எப்போதும் இருக்கிறார்கள் என்கிறார் புனித அகுஸ்தீனார்.

நாம் ஒவ்வொருவரும் புனிதராக வாழ வேண்டும் என்பதே நமக்கு இறைவன் விடுத்துள்ள அழைப்பு. இந்த அழைப்புக்கு ஏற்றவாறு வாழ்ந்திட நம்முள் புதைந்திருக்கும் புனிதத்தை வெளிக்கொணர்ந்து அதற்கேற்ப வாழ்வு வாழ்ந்தால் நாமும் புனிதர்களாகலாம். இதற்கு அடித்தளம், இறையன்பு, பிறரன்பு இறைவனைப் பற்றி பிடித்தல், சுயநலம் தவிர்த்து பிறர்நலம் காத்து, உதவிகரம் நீட்டி வாழும்போதே புனிதர்களாக வாழுவோம். மனிதநேயத்தை மதித்து, புனிதத்தைப் பெறுவோம். புனிதத்துவம் எங்கிருந்தோ பெறப்படுவதல்ல அது நமக்குள்ளேயே இருக்கிறது. அதைத் தோண்டி எடுத்து அது காட்டும் பாதையில் நாமும் நடந்தால் நாமும் புனிதமாகலாம்.

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# விசுவாச வாழ்வு

விசுவாசம் என்பது கடவுளின் கொடை. கடவுள் எமக்கு கொடையாக தந்திருக்கும் விசுவாசத்தை வாழ, பேணிக்காக்க அழைக்கப்படுகின்றோம். இன்றைய உலகம் கடவுள் ஒருவர் இருக்கிறார், இவ்வுலகமானது கடவுளின் வழிநடத்தலிலேயே இயங்குகின்றது என்று அதனுடைய அனுபவத்தினூடாக சொல்கிறது. ஏதோ ஒரு சக்தி எம்மை வழிநடத்துகிறது என்பதை முழுமையாக இல்லாவிட்டாலும் பெருமளவில் ஏற்றுக்கொள்கின்றது. இருப்பினும் அன்றாடம் வாழும்போது ஏதோ கடவுளே இல்லாதது போல் வாழ்கின்றது. கடவுளின் நியமங்களை ஏற்றுவாழ பின்னடிக்கின்றது. இது ஒரு சங்கடமான விடயமாக இருந்தாலும் இது தான் உண்மை.

இது ஒரு புறம் இருக்க நாங்கள் விசுவாசிகள், திருப்பலி செல்கிறோம், பரம்பரை கிறிஸ்தவர்கள், திருநாட்கள் கொண்டாடுகின்றோம் என்று பெருமிதத்தோடு மார்பைத் தட்டிக் கொள்பவர்கள் கடவுளின் கட்டளைகள், நியமங்கள் என்று வரும்போது அவற்றை வாழ தயங்குபவர்கள் பலர். இன்னுமாக நாங்கள் சரியானதைச் செய்கின்றோம், மனச்சாட்சிக்கு அமைவாக வாழ்கின்றோம் எமக்கு கோயில் தேவையில்லை, திருப்பலி தேவையில்லை, திருவருட்சாதனங்கள் தேவையில்லை என்று கூறுபவர்களும் இருக்கின்றார்கள்.




இன்னுமாக கடவுள் இருந்தாலும் ஒன்றும் இல்லாவிட்டாலும் ஒன்று. இவ்வுலகில் வாழும் மட்டும் சந்தோஷமாக வாழ வேண்டும் என்று வாழும் சமூகமும் இல்லாமலும் இல்லை.

அதேவேளை கிறிஸ்து யார்? கிறிஸ்துவின் நற்செய்தி என்ன? என்று அறியாமல் அவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்காமல் இருக்கும் மக்களும் ஆயிரக்கணக்கானோர் இவ்வுலகிலே இருக்கின்றார்கள்.

இன்னும் பலவித மதக்கொள்கைகளோடும், சமூகக் கொள்கைகளோடும், நாஸ்திகத்தோடும், பலவித இயல்புகளோடு மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அத்தோடு இயேசுக்கிறிஸ்து ஒருவரே எமது மீட்பர், கடவுளே எமது வாழ்வின் அச்சாரம். அவருடைய கட்டளைகளும் நியமங்களுமே எமது வாழ்வின் அடித்தளம் என்றோ ஒரு நாள் நாம் கடவுளோடு போய் சேருவோம் என்ற விசுவாசத்திலே கடவுளின் கட்டளைகளை ஏற்று வாழ்பவர்களும் அதை மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இவ்வாறான ஒரு உலகத்தில் திருமுழுக்கு பெற்ற கிறிஸ்தவன், கிறிஸ்தவள் என்று கிறிஸ்துவை உரிமை கொண்டாடும் எமக்கு ஒரு பெரிய பொறுப்பு, கடமை உள்ளது.

1. நாம் உரிமை கொண்டாடும் கிறிஸ்துவைப் பற்றி முழுமையாக அறிய வேண்டும்.
2. நாம் பெற்ற அறிவை மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும்.

இயேசு கூறுகிறார்

**"உலகெங்கும் சென்று நற்செய்தியை பறைசாற்றுங்கள்" மாற்கு 16:15**

புனித பவுல் கூறுகின்றார்

**"நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்கு கேடு" 1கொரி. 9:16**

**எவ்வாறு கிறிஸ்துவை அறியலாம்?**

1. இறைவார்த்தையை வாசிப்பதனூடாக
2. திருவருட்சாதனங்களில் பங்குபெறுவதினூடாக
3. மறை அறிவை கற்றுக்கொள்வதனூடாக

**பெற்ற அறிவை எவ்வாறு மற்றவர்களுக்கு கொடுக்கலாம்?**

1. இயேசுவின் படிப்பினைகளுக்கு அமைவாக முன்மாதிரி வாழ்க்கை.
2. தங்களது தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப இயேசுவை ஏனையோருக்கு அறிமுகப்படுத்துதல்.

மேற்குறிப்பிட்டவை ஒரு சில விடயங்கள் தான். ஆனால் கடவுளை அறிவதற்காக கடவுளை பற்றி மற்றவர்களுக்கு கொடுப்பதற்காக நாம் செய்யும் எல்லா நல்ல காரியங்களும் நாம் கிறிஸ்துவை அறியவும் மற்றவர்களுக்கு கொடுக்கவும் உதவியாக இருக்கும்.

அன்று ஆதிக்கிறிஸ்தவர்கள் என்னையும் உங்களையும் போன்ற சாதாரண மனிதர்கள் தாம் பெற்ற விசுவாசத்தை ஆழப்படுத்துவதற்காகவும் அவ்விசுவாசத்தை ஏனையோருக்கு சொல்லிக் கொடுப்பதற்கும், பேணிக்காப்பதற்கும் எடுத்த முயற்சிகள், பட்ட வேதனைகள், சிந்திய இரத்தத்துளிகள் பற்பல. இறுதியில் பலர் தங்கள் உயிரையே துறந்தார்கள். அவர்கள் எமக்குச் சொல்லித்தந்த விசுவாசத்தைத்தான் நாம் இன்று அனுபவிக்கின்றோம். இவ்வாறிருக்க அவ்விசுவாசத்தை வரப்பிரசாதத்தின் ஊற்றாக நாம் மென்மேலும் அறிவதும், எமது விசுவாசத்தை ஆழப்படுத்துவதும் மற்றவர்களுக்கு சொல்லிக்கொடுப்பதும் முக்கியமானதாகும். எம்முடைய முன்னோர் எமக்கு சொல்லித்தந்த விசுவாசத்தினால் நாங்கள் வாழ்கின்றோம். நாம் சொல்லிக்கொடுக்கும் விசுவாசத்தினால் தான் எதிர்கால சந்ததியினரின் விசுவாசம் தங்கியிருக்கிறது.

விசுவாசத்தை அறிந்து கொள்வதும், பாதுகாப்பதும் ஏனையோருக்கு சொல்லிக் கொடுப்பதும் திருத்தந்தை, ஆயர், குருக்கள், துறவியரின் கடமை மட்டமல்ல. அவர்களின் வழிகாட்டல்கள் மட்டும். கிறிஸ்தவர், கிறிஸ்தவள் ஆகிய எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். திருச்சபையில் சிறுவர், சிறுமியர் கூட இயேசுவுக்காக நற்செய்திக்காக இரத்தம் சிந்திய வரலாறு உள்ளது.

ஆண்டவர் இயேசு எம்மை இன்று அவருக்காக இரத்தம் சிந்தக் கேட்கவில்லை, உயிரைக் கேட்கவில்லை. மாறாக குறைந்த பட்சம் எமது ஒரு நாளில் 24 மணித்தியாளங்களில் 1440 நிமிடங்களில் ஒரு சில நிமிடங்களை கேட்கிறார். எம்மிடமிருக்கும் சொத்தோ, காசோ, நிலத்தையோ கேட்கவில்லை. மாறாக நொறுங்கிய பாவப்பட்ட இதயத்தையே கேட்கிறார்.

உலக அறிவை, கதைகளை சொல்லிக்கொடுக்க 2 வயது தொடக்கம் பிள்ளைகளை வகுப்புகளுக்கு அனுப்புகிறோம். எல்லாப் பாடங்களுக்கும் வகுப்புகளுக்கு காசு கொடுத்து அனுப்புகிறோம். காசு செலவழிக்கிறோம். கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுக்கிறோம். இவையெல்லாம் ஒருநாள் மண்ணோடு மண்ணாகிவிடும். இருந்தாலும் பரவாயில்லை இவ்வுலகில் வாழ தேவை. அதே ஆர்வத்தோடு ஆண்டவரைப் பற்றி சொல்லிக்கொடுக்க ஆர்வமாய் இருக்கிறோமா? நேரம் செலவழிக்கிறோமா? காசு செலவழிக்கிறோமா? பிள்ளைகளோடு ஆண்டவரைப் பற்றி கதைக்கிறோமா? குடும்ப செபம் சொல்கிறோமா? திருப்பலிக்கு கூட்டிச் செல்கிறோமா? ஆண்டவருக்காக செய்வது ஒருபோதும் மண்ணோடு மண்ணாகப் போகாது.

இன்று எத்தனை தந்தையர்கள், இளைஞர்கள் ஞாயிறு திருப்பலிக்கு செல்வதில்லை. காரணம் வேலை. கடவுளை விட்டுவிட்டு சம்பாதிக்கும் ஒரு சதம் கூட எமது சந்தோஷத்தை அதிகரிக்குமா என்பது பெரிய கேள்விக்குறியே. இறுதியில் சொல்லுவோம் கடவுள் எங்களை புரிந்து கொள்வார். அன்று யூதாஸ் 30 வெள்ளிக்காசுக்கு ஒரு தடவை மட்டுமே காட்டிக் கொடுத்தான். இன்று நாம்...

குடும்பமாக தொலைக்காட்சி பார்க்க நேரம் உண்டு, பிறந்தநாள் விழாக்கள், திருமண விழாக்கள் செய்ய நேரம் உண்டு. குடும்பமாக சேர்ந்து ஒரு 15 நிமிடம் செபம் செய்ய நேரமில்லை. அப்பாவிற்கு



வேலைக் களைப்பு, சாப்பிட களைப்பில்லை, தொலைக்காட்சி பார்க்க களைப்பில்லை, கணினி பார்க்க களைப்பில்லை. செபம் செய்யத்தான் களைப்பு. இயேசுவே கூறுகிறார் "சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்கள். உங்களுக்கு நான் இளைப்பாற்றி தருவேன்"

இன்றைய காலப்பிள்ளைகளுக்கு செபங்கள் தெரியாது. மூவேளைச் செபம் தெரியாது, 10 கட்டளைகள் தெரியாது, கோயிலுக்கு எப்படி ஆடை அணியவேண்டும் என்று தெரியாது. கேட்டால் "இந்தக் காலத்து பிள்ளைகள் அப்படித்தான் என்ன செய்ய" சொல்லிக்கொடுத்தால் தானே தெரிவதற்கு. கடுகை விதைத்து நெல்லை எதிர்பார்கலாமா?

எங்களுடைய விசுவாசம் எங்கே செல்கிறது??? எமக்கு எல்லாவற்றையும் தந்த இறைவனை விட்டுவிட்டு இறைவன் எமக்கு தந்தவற்றிற்கு பின்னால் போகின்றோமா?

இன்று எத்தனையோ பிள்ளைகளுக்கு, வளர்ந்தோருக்கு சிலுவை அடையாளம் வரைய வெட்கம், முழந்தாழ் படியிட வெட்கம், கோயிலுக்குள்ளே இருந்து திருப்பலி பார்க்க வெட்கம், சத்தமாக செபம் சொல்ல வெட்கம், திருப்பலியில் பொறுப்புக்களை ஏற்பதில் வெட்கம். ஆனால் அன்று இயேசு தனது வெட்கத்தை துறந்து கதறி அழுது ஒட்டு துணியில்லாமல் சிலுவையில் எமக்காக வேதனைபட்டு மரித்தார் என்பதை மறந்து விடுகிறோம்.

ஆக்கம்:-
அருட்தந்தை ஒனாசிஸ்



## சிந்தியுங்கள்

**குடி குடியைக் கெடுக்கும் சன் டீவி**
**குடும்பத்தைக் கெடுக்கும்**

***

**ஒருவரை காயப்படுத்துவதற்கு முன்**
**அந்த இடத்தில்**
**நீயும் ஒரு நாள் வருவாய் என்பதை**
**நினைத்துக்கொள்**

***

**மன்னிக்க மட்டும் கற்றுக்கொள்**
**ஏனென்றால்**
**நம்மை ஏமாற்றியவர்கள் நம்மால்**
**நேசிக்கப்பட்டவர்கள்**

***

**வாழ்க்கை ஒரு நிமிடத்தில் மாறுமா**
**என்று தெரியவில்லை**
**ஆனால் ஒரு நிமிடத்தில் எடுக்கும் முடிவு**
**நம் வாழ்க்கையை மாற்றிவிடும்**

***

**வாழ்க்கையில் ஜெயிக்கனும்னா அடுத்து**
**என்ன பண்ணலாம்னு பார்க்கனும்**
**அடுத்தவர்கள் என்ன பண்றாங்கனு**
**பார்க்கக் கூடாது.**

***

**துன்பங்களுக்கு இடையில் தான்**
**வாய்ப்புக்கள் ஒளிந்திருக்கின்றன.**

***

**இரவு இல்லையெனில் நட்சத்திரம்**
**ஜொலிப்பது தெரியாது.**
**கஷ்டம் இல்லையெனில் சந்தோஷத்தின்**
**அருமை தெரியாது.**

***

**யாரிடமும் அதிகமாக அன்பு வைக்காதே**
**யாரையும் அதிகமாக நம்பாதே**
**அவரவர் தேவைகள் முடிந்த பின்**
**தூக்கியெறியப்படுவாய்.**

***




# உத்தரிக்கும் ஆன்மாக்களுக்கு உண்மையான அஞ்சலி

## எமது செபங்களும் பரித்தியாகங்களுமே!



✠. அருட்தந்தை. றமேஸ் அமதி

மரணம் என்கின்ற இவ்வுலகப் பிரிவுடன் ஒரு மனிதனுடைய வாழ்வு முடிவடைந்து விடுவதில்லை மாறாக அங்கேதான் உண்மை வாழ்வு பிறக்கிறது. மனிதனுடைய வாழ்வில் மரணம் கடைசிக் கதியல்ல. அது ஒரு வாசல். அதன் வழியாகத்தான் நாம் மகிமை பொருந்திய பூரணமான வாழ்வை நோக்கி பயணிக்க முடியும் என்பது எமது நம்பிக்கை. கார்த்திகை பிறந்துவிட்டால் எங்கள் மனத்திரையில் வருவது கல்லறைகளும், பிரிந்து சென்ற எம்மவர்களைப் பற்றிய சிந்தனைகளுமே! அதனாலேயே அன்னையாம் திருச்சபை கார்த்திகை 2ம் நாளை மட்டுமல்ல மாதம் முழுவதையுமே இறந்த எம் உறவுகளை எம் மனத்திரையில் இருத்தி, இறைவனின் இரக்கத்தினால் அவர்கள் நித்திய வாழ்வுக்குள் நுழைய நாமெல்லோரும் சேர்ந்து செபிப்பதற்கென ஒதுக்கி வைத்துள்ளது. இறந்து போனவர்கள் இத்துப்போனவர்கள் அல்ல மாறாக மறுபடி உயிருடன் எழும்பும் வித்துப் போன்றவர்கள், மாட்சிமைக்குரியவர்கள். இறைமகன் இயேசுவின் உயிர்ப்பு இதற்கு ஆதாரமும் அடித்தளமுமாகவுள்ளது. எனவே கார்த்திகை மாதம் கதறியளும் காலமல்ல மாறாக ஆன்மாக்களை வேதனைத் தீயிலிருந்து இறைவன் தனது ஆனந்த மாளிகைக்கு அணைத்தெடுக்க, எம் எல்லோரையும் அவர்களுக்காக செபிக்கத் தூண்டும் பொற்காலமாகும்.

சாவுக்குப் பின் தீர்வை நடக்கும் என்பது உறுதி. இந்தத் தீர்வையிலிருந்து தப்பிப்போக எவராலும் முடியாது. அந்த நாள் நெருப்பு மயமாய் வெளிப்படும் (1கொரி 3: 13) இந்தத் தீர்வையிலே தான் ஆண்டவருடைய நீதிக்கண் திறக்கப்பட நாம் இவ்வுலகில் நிகழ்த்திய நாடகத்திற்கு ஏற்ற பெறுபேறு எமக்குத் தரப்படும். பரலோக இராச்சியத்திற்கு அனுமதிக்கப்பட்டவர்களுக்கு எமது செபம் தேவையில்லை ஏனெனில் அவர்கள் எங்களுக்காக இறைவனிடம் பரிந்துரைக்கும் வரம் பெறுகிறார்கள். நரகத்திற்கு அனுமதிக்கப்பட்டவர்களுக்காக நாம் ஒன்றும் செய்ய இயலாது (லூக் 16: 19-26).

தமது பாவங்களுக்கு கழுவாய் தேடி பரலோகத்திற்கு செல்லுவதற்கு தங்களை ஆயத்தப்படுத்தும் உத்தரிப்பு ஸ்தல ஆன்மாக்களின் வேதனை நீங்கவும், குறைக்கவும் எமது செபங்களாலும் பரித்தியாகங்களாலும் மட்டுமே முடியும். உத்தரிக்கும் ஆன்மாக்கள் தங்கள் வேதனையைக் குறைக்க எதுவித பரிகாரமும் செய்ய இயலாத நிலையில் அவர்கள் எமது உதவியை மிகவும் ஆதங்கத்துடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். அவர்கள் பரலோகத்திற்கு செல்வது உறுதி. ஆனால் குறிப்பிட்ட காலம் அவர்கள் கொடிய வேதனைகளை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். "நெருப்பில் இருந்து தப்பியவர் போல் அவர் மீட்கப்படுவார்" (1கொரி 3: 15). இவ்வுலக துன்பங்கள் அனைத்தையும் ஒன்று திரட்டினாலும் அவ்வேதனைக்கு நிகராகாது என்று புனித அகுஸ்தீனார் அக்கொடும் துன்பத்தைப் பற்றி கூறுகிறார். இறந்தவர்களுக்காக பலி ஒப்புக்கொடுத்து செபிக்கும் வழக்கம் ஆரம்பத்திலிருந்து வருவதனை திருவிவிலியத்திலும், திருச்சபையின் படிப்பினைகளிலும் காண முடிகிறது. (2மக்கபேயர் 12: 42 - 45).



உத்தரிக்கும் எமது உறவுகள் அனைவரும் எம்மையே உற்று நோக்கி கதறி அழுகிறார்கள். கொடிய வேதனை நெருப்பில் அந்தரிக்கும் அவர்களுக்கு ஆறுதல் கிடைக்கும் வண்ணம் பரித்தியாகங்கள் செய்யுமாறு எங்களை மன்றாடுகிறார்கள். தங்களது பாவப் பரிகார கடன் தீர தங்களுக்காக திருப்பலி ஒப்புக் கொடுத்து இறைவனின் இரக்கம் தங்களுக்கு கிடைக்க தமக்காக இறைவனிடம் வேண்டும் வண்ணம் எங்களைக் கெஞ்சுகிறார்கள். தமது விடுதலைக்காகக் காத்திருக்கும் அவர்களுக்கு நாம் செய்யப் போவது என்ன?

குறிப்பாக இவ்வுலகில் பயணம் செய்யும் ஒவ்வொருவரும் உத்தரிக்கும் ஆன்மாக்களுக்காக செபிக்க கடமைப்பட்டவர்கள். ஏனெனில் வேதனைக் காலத்தில் அதிலிருந்து தப்பிக்க அவர்களால் முடியாது மாறாக எமது செபம் அவர்களுக்கு ஆறுதல் கொடுக்க வல்லது என்பது அன்னையாம் திருச்சபையின் நம்பிக்கை. உத்தரிக்கும் ஆன்மாக்களின் விடுதலைக்காக திருச்சபைத் தாய் எவற்றையெல்லாம் செய்யும் வண்ணம் எமக்கு அழைப்பு விடுக்கிறாளோ அவற்றையெல்லாம் நல்ல மனத்துடன் செய்ய வேண்டியது எம் எல்லோரினதும் தார்மீகப் பொறுப்பு என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது.

இன்று பல்வேறுபட்ட நெருக்கடிகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் சற்று சிந்திக்கின்ற பொழுது நாம் யாருக்காக? எப்படி? எதற்காக செபிக்க வேண்டும் என்பதே ஒரு குழப்பமாக இருக்கிறது என்று நாம் எண்ணலாம். ஏனெனில் எங்களது தனிப்பட்ட துன்பங்களும், வேதனைகளும், வாழ்க்கைச் சுமைகளும் ஒரு புறம் எம்மை அழுத்த, இவ்வுலகில் வாழும் எம் உறவுகள் நாள் தோறும் உடலாலும் உள்ளத்தாலும் சோர்வடைந்து, வாழ்வைக் காணாது சாவை நோக்கி, அமைதி இழந்து, நிம்மதியைப் பறி கொடுத்து நடைப்பிணங்களாக வாழும் நிலையில் இறந்தவர்ளை எப்படி நினைக்க முடியும். அவர்களுக்காக எப்படி செபிக்க முடியும் என்றும் நாம் சிந்திக்கலாம். உண்மையில் இவ்வுலகில் வாழும் நாம் அனைவரும் ஏதோ ஒரு வகையில் எமது துன்பங்களைத் தீர்த்துக் கொள்ள முடியும். எங்களுக்காக இறைவனிடம் நாங்களே மன்றாடி இறையருளைப் பெற்றுக் கொள்ள முடியும். எமது பாவங்களுக்கும் இவ்வுலகில் இருக்கும் போதே நாம் பரிகாரம் தேட முடியும். மனம் திருந்தி இறைவனின் அன்பை சுவைக்க புறப்பட முடியும். ஆனால் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டு உத்தரிப்பு ஸ்தலத்திலே வேதனைப்படும் எமது உறவுகளுக்கு சுகம் கொடுப்பது எமது செபங்கள் மட்டும் தான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

செம்பொன் உலையில் சுத்தமாகிறது போல இந்த ஆன்மாக்களின் குற்றங்களெல்லாம் கழுவப்பட்டு, செஞ்சுடர் போல் ஒளிர்ந்து அவர்கள் பரலோக இராட்சியத்தை சுதந்தரித்தக் கொள்ளவும், மனித உணர்ச்சியினால் பெறமுடியாத முடிவில்லா வாழ்வை, இறைவனின் அன்பைப் பெறுவதன் மூலம் அடைய முடியும் என்பதனையும், உணர்ந்து இறந்த எம் உறவுகளின் பாவங்களுக்காக இறைவனிடம் பரிகார முயற்சி செய்வோம். அதுவே உண்மையான அஞ்சலியாகும்.

# இறந்த ஆன்மாக்களின் விழா

உலகில் தோன்றுகின்ற ஒவ்வொன்றும் மறையதான் வேண்டும். உலகில் முளைக்கின்ற ஒவ்வொன்றும் மடியத்தான் வேண்டும். இது இயற்கையின் நியதி. அதுபோல் உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் இறக்கத்தான் வேண்டும். இதிலிருந்து யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. அது ஆண்டவரே என்றாலும் மானிட உடல் கொண்டு இந்த உலகத்தில் பிறந்தால் அவருக்கும் இறப்பு உண்டு. இது நம் பெருமான் இயேசுவின் வாழ்வின் உண்மை. எது உறுதியோ இல்லையோ ஆனால் சாவு என்பது உறுதி. இதுதான் வாழ்வின் தத்துவம். இதுதான் உலகின் நிலையாமை. இந்த நிலையாமையை எண்ணி வாழ்வே மாயம் வாழ்வே பொய் என்று வெட்டியாய் வாழ்வை கழிப்போமா? இல்லவே இல்லை. இறப்பு என்பது இயற்கையின் நியதி என்றாலும், அது ஒரு முடிவல்ல, மாறாக அது ஒரு நுழைவாயில். நாம் முடிவில்லாத வாழ்வை, நிறை வாழ்வை பெறுவதற்கு இறப்பே ஒரு நுழைவாயில்.

இதையே எல்லா மதங்களும் கூறுகின்றது. எனவே இறந்தவர் ஒவ்வொருவரும் இறுதியில் உயிர்பெற்று மோட்சம் அடைய வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நமக்கு இயேசு இவ்வாறு கூறுகிறார். "நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள். என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன. நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன். காரணம் வழியும், உண்மையும், வாழ்வும் நானே. என் வழியாயன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை.

கிறிஸ்தவர்களாகிய நமக்கு இறப்பு என்பது சருகாக அல்ல விதையாக மடிந்து முளைக்கவேண்டும். இதற்கு நிலையில்லாத் தவைகளைப் பற்றிக் கொண்டிருப்பதை விட்டு நிலையான இயேசுவின் விழுமியங்களை (வாழ்வின் மதிப்பீடுகளை) பற்றிக்கொள்வோம். விண்ணுலக வாழ்க்கைக்கு ஆயத்தமாக மண்ணுலகில் வாழ்வோம்.

சிறப்பான வாழ்வே அர்த்தமுள்ள இறப்புக்கு ஒரே வழி. வாழ்க்கைக்கு அர்த்தம் இருக்குமானால், இறப்புக்கு அர்த்தம் உண்டு. எனவே இறப்பை நினைத்து கவலைப்பட வேண்டாம். இயேசு சாவை வென்று வெற்றி வீரராக உயிர்த்தார். ஆகவே நமக்கும் இறப்புக்குப் பின் உயிர்ப்பு உண்டு என்பதை இயேசு விளங்கச் செய்திருக்கிறார்.

ஆகவே நான் சாயும் போதும் காப்பதும் நீயே, நான் மாண்ட பின்பும் உயிர்ப்பதும் நீயே என்று கடவுளில் நம்பிக்கை கொள்வோம்.





# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

164

## பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கிடையிலும் உள்ள உறவு.

பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் இன்று நல்ல உறவைக் காண்பது மிகவும் குறைவாகவே உள்ளது எனலாம். அதனால் பிள்ளைகளது ஆளுமை நல்ல நிலையில் அமைவதில்லை. பிற்காலத்தில் நல்லவர்களாக வாழ இது தடையாக உள்ளது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளோடு நல்ல உறவை ஏற்படுத்த என்ன செய்ய வேண்டும்?

முதலில் பெற்றோர் தமக்கிடையில் நல்ல உறவை ஏற்படுத்த வேண்டும். இருவருக்கிடையிலும் நல்ல உறவை ஏற்படுத்த முன்பு தாம் தம்முடன் நல்ல உறவை ஏற்படுத்த வேண்டும். பெற்றோர் தம்முடன் தான் நல்ல உறவை ஏற்படுத்தியுள்ளோமா என்பதைச் சோதித்துப் பாருங்கள். என்னை நான் அன்பு செய்கிறேனா? என்பதைச் சோதித்துப் பார்க்கப் பின்வரும் கேள்விகளுக்கு ஆம் என்று பதில் வந்தால் நான் என்னை அன்பு செய்கிறேன் என்பது அர்த்தம்.

1. நான் எனது கொடைகள் திறமைகளை ஏற்றுக்கொள்கிறேனா? அல்லது அது இல்லை இது இல்லை ஆனால் மற்றவர்களுக்குண்டு என ஏங்குகிறேனா?
2. என்னால் செய்யக்கூடியது இவ்வளவுதான் என்பதை ஒத்துக்கொள்கிறேனா? அல்லது அதற்கு ஏன் இப்படி இப்படி எல்லாம் இருந்தேன். இப்போது என்னால் முடியவில்லை என்று கவலைப்படுகிறேனா?
3. நான் இருக்கும் நிலையை என்னால் ஏற்றுக்கொள்ள முடிகின்றதா?
4. நான் ஆணாக இருந்தால் அல்லது பெண்ணாக இருந்தால் அதை அன்போடு ஏற்றுக்கொள்ள முடிகின்றதா? அல்லது நான் பெண்ணாகப் பிறந்து விட்டேனே எனக்கவலைப்படுகின்றேனா?
5. எனது வயதை ஏற்றுக் கொள்கின்றேனா? அல்லது வயதைக்குறைத்துக்காட்ட முனைந்து தலையில் டை பூசி என்னையே நான் ஏமாற்றுகின்றேனா?
6. எனது விவாக வாழ்வை ஏற்றுக்கொள்கின்றேனா? அல்லது இவரை விட அவரைத் திருமணம் முடித்திருந்தால் இன்று நான் நல்லாய் இருந்திருப்பேனே என்று கலங்குகின்றேனா?
7. எனது பிள்ளைகளை அவர்கள் இருக்கும் நிலையில் ஏற்றுக்கொள்கின்றேனா? அல்லது எனக்கு எல்லாம் பெண்பிள்ளைகள் பிறந்துவிட்டதே என கவலைப்படுகின்றேனா?
8. எல்லாப் பிள்ளைகளையும் ஒரே விதத்தில் ஏற்றுக்கொள்கின்றேனா?
9. எனது பெற்றோரை ஏற்றுக்கொள்கின்றேனா? அல்லது எனது பெற்றோரால்தான் நான் இன்று கஷ்டப்படுகிறேன் என எண்ணுகின்றேனா?
10. எனது பொருளாதார நிலையில் திருப்தி கொள்கிறேனா? அல்லது எனக்கு அது இல்லை இது இல்லை என வேதனைப்படுகின்றேனா?
11. எனது நிறம், உருவத்தை ஏற்றுக்கொள்கின்றேனா? அல்லது நான் கறுப்பாகப் பிறந்து விட்டேன் கட்டையாகப் பிறந்து விட்டேன் எனக் கவலைப்படுகின்றேனா?

மேற்கூறப்பட்டவற்றில் சாதகமான பதில் வந்தால் நீங்கள் உங்களை ஏற்றுக்கொண்டு அன்பு செய்கிறீர்கள் என்பது அர்த்தம். தன்னை அன்பு செய்யத் தெரியாதவன் மற்றவர்களை ஒருபோதும் அன்பு செய்யமாட்டான். ஆகவே முதலில் தன்னை அன்பு செய்யப்பழகிக் கொள்ளவேண்டும்.

அதன்பின்பு கணவன், மனைவி இருவருக்கிடையிலும் நல்ல தொடர்பை ஏற்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டும். அதற்குப் பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.



1. ஒருவர் மற்றவரில் தப்பபிப்பிராயம் கொண்டால் இருவருக்கிடையிலும் நல்ல உறவை ஏற்படுத்த முடியாது.
2. சுயநலம், அல்லது தன்னை முன்கொண்டு செயல்படாது மற்றவரை முன்கொண்டு செயற்படப்பழகிக் கொள்ள வேண்டும்.
3. செவிசாய்த்தல் வேண்டும். ஒருவர் மற்றவருக்குச் செவிசாய்க்கப் பழகினால் நல்ல தொடர்பை ஏற்படுத்த முடியும்.
4. ஒருவர் மற்றவரது நல்ல செயல்களை, திறமைகளைப் பாராட்டப் பழகிக் கொள்ளவேண்டும்.
5. போலி வாழ்வு வாழாது உண்மையான வாழ்வு வாழப் பழகவேண்டும்.

கணவன் மனைவிக்கிடையில் நல்ல தொடர்பு இருந்தால் அது பிள்ளைகளின் மனவளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும். வயிற்றில் இருக்கும் காலத்தில் தாயின் மனநிலை பிள்ளையின் மனநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும். கணவன் மீது வெறுப்பும் வைராக்கியமும் கொண்டு மனைவி இருந்தால் வயிற்றில் இருக்கும் பிள்ளையின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும். பிறந்து வளரும் போது பிள்ளை தந்தையைப் புறக்கணிக்கலாம். ஆகவே பிள்ளை வயிற்றில் இருக்கும் போது கணவன் மனைவிக்கிடையில் நல்ல தொடர்பு இருப்பது முக்கியம்.

**தொடரும்**

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**

# எம் உயிரை நேசிப்போம்.

## தற்கொலை வேண்டாம்



எம் உயிரைக்
காப்போம் - நேசிப்போம்.
எம் வாழ்வைக்
காப்போம் - நேசிப்போம்.

இறைவன் தந்த உயிர்
வாழ்வு. இதை சிதைக்க
உரிமை இல்லை
எமக்கு. இதை வதைக்க
உரிமை இல்லை
எவருக்கும்.

எம் உயிரை நாமே
மாய்க்க எமக்கு
உரிமை இல்லை.
உயிரை எடுக்க
எவருக்கும் உரிமை
இல்லை. ஆகவே
தற்கொலை எண்ணம்
வேண்டாம்.

தற்கொலை எண்ணம்
அது தன்னம்பிக்கை
அற்றோரின் பரிதாப
எண்ணம்.

தலை சிறந்து வாழும்
வண்ணம் - தேவை
எமக்கு தன்னம்பிக்கை
எண்ணம் - அப்போது
தலை நிமிர்ந்து வாழ்வது
திண்ணம்.

வாருங்கள் அன்பு
மாந்தரே.
கோழைகளாய் அல்ல,
கொள்கைப்பற்றுடன்
தற்கொலையைத்
தவிர்த்திடுவீர்.
தினமும்
தன்னம்பிக்கையில்
வளர்ந்திடுவீர்.

வாழ்வில் ஓர் பிடிப்பு
வேண்டும்.
அதற்குப் படிப்பும்
வேண்டும்.

வாழ்வில் பிடிப்பு
இருந்தால்
படித்துப் படி ஏறி,
பார் போற்ற வாழலாம்.
ஆக்க சிந்தனை
இருந்தால்,
அகிலத்தையும்
ஆழலாம்.
அகமகிழ்ந்து
வாழலாம்.
சிகரம் தொட்டு
உயரலாம்.
சிறப்புற வாழலாம்.
சன்மார்க்கராய் மாறலாம்.

எம்மை வெறுப்போரும்
விரும்பும் படி வாழலாம்.
வியந்து வாயாற
வாழ்த்தும் படி
வாழலாம்.

எம்மைப் பகைப்போரும்
போற்றும் படி வாழலாம்.
புகழ்ந்து பாராட்டும் படி
வாழலாம்.

தற்கொலை எண்ணம்
தவிர்ப்போம்.
தரணி போற்றும்
வண்ணம் வாழ்வோம்.

**ஆக்கம்:**
**பென்ஜமின் சோமநாதர்.**
**தெஹிவளை.**




# கல்லறை திருநாள் தொடங்கியதன் வரலாறு

திருத்தந்தை 23ம் அருளப்பர் இவ்வாறு கூறுகிறார். “விசுவாசிகள் அனைவரின் நினைவு நிலையான மறையுண்மைகளைப் பற்றி சிந்திக்க வைக்கிறது. மறைந்துவிடக்கூடியன எவை என்றும், நிலைபெற்றிருக்கக் கூடியன எவை என்றும் நம்மை சீர்தூக்கிப் பார்க்க வைக்கிறது. கி.பி 3வது நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ஒருவர் இறந்த நாளென்றும், அதன் பிறகு ஆண்டு நினைவு நாளென்றும் அவருக்காக திருப்பலி நிறைவேற்றப்பட்டது. கி.பி 7ம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டில் இறந்த விசுவாசிகளின் நினைவுநாள் கி.பி 11ம் நூற்றாண்டில் கார்த்திகை 2ம் நாளாக மாறியது.

# சிந்தனைக்கு...


† உலகிலேயே பாதுகாப்பான இடங்கள் இரண்டு.
1. தாயின் கருவறை, 2. நம்மைத் தாங்கும் கல்லறை.
இரண்டுமே நமக்கு பிறப்பை கொடுக்கின்றன. இவ்வுலகிற்கும், மறு உலகிற்கும்.

† ஒவ்வொரு இறப்பும், ஒவ்வொரு கல்லறையும், நமக்கு சொல்லும் செய்தி “இன்று நான் நாளை நீ”

† உலகு ஒரு நாடக மேடை, அத்தனை பேரும் அதில் நடிக்கும் நடிகர்கள். நாம் ஏற்கும் கதாப்பாத்திரத்தின் பங்களிப்பு, முடிந்ததும் மேடையை விட்டு இறங்கவேண்டும் (ஷேக்ஸ்பியர்)

† நம் வாழ்க்கை புத்தகத்தின்
முதல் பக்கம் கருவறை
கடைசி பக்கம் கல்லறை
இடையில் இருக்கும் பக்கங்களை
புன்னகையால் எழுது
கண்ணீரால் நனைக்காதே





# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**பொதுக்காலத்தின் 31வது ஞாயிறு (04.11.2018)**

**▶▶ பேதுரு ◀◀**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 31வது ஞாயிறு தின திருவழிபாட்டில் பங்குகொள்ள வந்திருக்கும் இறையன்பின் உள்ளங்களே, இறைமக்களே! இறையன்பு பிறரன்பு இதுவே பத்துக்கட்டளையின் பிழிவாகும். இதையே இயேசுவும் தன் வாழ்வில் பின்பற்றினார். அன்பே உருவான இறைவன் உன் முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும் அன்பு காட்டுவாயாக. உன்மீது அன்பு காட்டுவதுபோல உன் அயலான் மீதும் அன்பு காட்டுவாயாக என்று அன்பை அச்சாரமாக்கிக்கொள்ள இன்று நம்மை அழைக்கின்றார். அன்பை பணமாக, நுகர்வுப் பொருளாக, காமமாக எண்ணி வாழும் எமக்கு இது ஒரு சவாலாக அமைந்துள்ளது. ஏனெனில் நாம் பிறர் அன்பை விட்டுவிட்டு கடவுள் அன்பை மட்டும் கடைப்பிடிக்கின்றோம். தன் கண்முன்னே உள்ள சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர் கண்முன்னே புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது. எனவே இருபெரும் கட்டளைகளை எம் வாழ்வில் கடைப்பிடித்து வாழ, செப வாழ்வில் நிலைக்க இறையருள் வேண்டுவோமாக...

**முதல் வாசகம் : இ.ச 6:2-6**

உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக.

**பதிலுரைப் பாடல் :**

என் ஆற்றலாகிய ஆண்டவரே உம்மிடம் நான் அன்பு கூர்கின்றேன்.

**இரண்டாம் வாசகம் : எபி 7:23-28**

இவரோ என்றென்றும் நிலைத்திருப்பதால் மாறாத குருத்துவப் பணியைப் பெற்றுள்ளார்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா! என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார் என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம் என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : மாற் 12:28-34**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

முழுமனதோடு மனிதரை அன்பு செய்து கடவுள் அன்பை பெற்றுக்கொள்ள எமக்கு வழிகாட்டும் திருஅவையின் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவருக்கும் உமது அன்பையும் அருளாசியையும் நிறைவாகப் பொழிந்தருள வேண்டுமென்று...

நாட்டை ஆள்வோரும், நாட்டின் நலனில் அக்கறை கொண்டோரும் மனிதனில் கடவுளைக்காண கற்றுக்கொண்டு அனைத்து மனிதரையும் சமமாக மதித்து மனித அவலங்கள் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளவும், பணியாற்றவும் வேண்டிய வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

கண்ணால் காண்கின்ற சகோதரனை அன்பு செய்ய முடியாதென்றால் கண்ணால் காணமுடியாத கடவுளை அன்பு செய்கிறோம் என்பது பொய்யாகும். இதை உணர்ந்தவர்களாக சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களையும் உதவி தேவைப்பட்டோரையும் தேடிச்சென்று அன்பு காட்டவும், உதவி புரியவும் வேண்டிய நல்மனதை தந்தருள வேண்டுமென்று...

**பொதுக்காலத்தின் 32வது ஞாயிறு (11.11.2018)**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 32வது வாரத்தில் கால்பதிக்கும் இறைமக்களாகிய நமக்கு கொடுக்கப்பட்டுள்ள இறைவார்த்தைகள் நம்மிடம் உள்ளதையும் நம்மையும் உள்ளத்திலிருந்து கொடுக்கும்போது நாம் வாழ்வு பெறுகின்றோம் என்பதை உணர்த்தி நிற்கின்றன. முதலாம் வாசகத்தில் வரும் சரேப்தா ஊர்க் கைம்பெண்ணும் நற்செய்தியில் வரும் ஏழைக் கைம்பெண்ணும் தம்மிடம் உள்ளதை உள்ளபடியே உள்ளத்திலிருந்து மனமுவந்து கொடுக்கின்றனர். பெறுவதில் இல்லை கொடுப்பதில் தான் இன்பம் இருக்கின்றது. இன்றைய உலகில் பெயருக்காகவும் புகழுக்காகவும் விளம்பரத்திற்காகவும், அரசியல் லாபத்திற்காகவும் கொடுப்பவர்கள் ஏராளமாய் வாழ்வதைப் பார்க்கின்றோம். உன்னையே கொடு உள்ளத்திலிருந்து கொடு என்பதற்கிணங்க நாமும் நம் உள்ளத்திலிருந்து கொடுத்தோமென்றால் மீட்பு பெறுவோம். இதைத்தான் இன்றைய இரண்டாம் வாசகம் எடுத்துரைக்கின்றது. இறைமகன் இயேசு தன்னையே முழுமையாக கொடுத்ததுபோல் பகிர்வு வாழ்வில் பலம் பெற்று வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : 1 அரசர் 17:10-16**

எலியா சொன்னபடியே கைம்பெண் செய்தார்.

**பதிலுரைப் பாடல் :**

என் நெஞ்சே! நீ ஆண்டவரைப் போற்றிடு.

**இரண்டாம் வாசகம் : எபி 9:24-28**

பாவங்களை போக்கும் பொருட்டு ஒரே முறை தம்மைத்தாமே பலியாகக் கொடுத்தார்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது. அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மாற் 12:38-44**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

மறையுடலாம் திருஅவையை நிறையுண்மை, நீதி, அன்பு, பகிர்வு போன்றவற்றில் வழிநடத்திச் செல்லும் திருத்தந்தை, ஆயர், அருட்பணியாளர்கள், துறவியர், இறைமக்கள் அனைவருக்கும் உமது நிறை அன்பை வழங்கி மக்கள் அனைவரும் பகிர்வு வாழ்வில் நிலைத்து வாழ வழிகாட்டும் கருவிகளாகச் செயல்பட வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

நாட்டை ஆள்வோரும் ஆள நினைப்போரும் அதிகாரத்தில் இருப்போரும் மனித நேயத்தை மதித்து பகிர்தலே வாழ்வின் ஊற்று என்பதை உணர்ந்தவர்களாக அனைத்தையும் சமமாகப் பகிர்ந்து அனைவரும் சிறந்து வாழ வழிகாட்டியருள வேண்டுமென்று...

நம்மிடம் உள்ளதையும் நம்மையும் உள்ளத்திலிருந்து கொடுக்கும் போது நாம் வாழ்வு பெறுகின்றோம் என்பதை உணர்ந்தவர்களாக ஏழைக் கைம்பெண்ணைப்போல் தன்னிலை உணர்ந்தவர்களாக எம்மை பிறருக்கு கொடுக்கவும், பேருக்காக புகழுக்காக விளம்பரத்திற்காக எதையும் செய்யாமல் வாழத் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

# அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக பணிபுரியும் குருத்துவ, துறவற மற்றும் பொதுநிலையினர்களின் கவனத்திற்கு...

இலங்கையில் பாடசாலை அதிபர்களின் பணிக்கு (SLPS) தெரிவு செய்தல் தொடர்பான வர்தமானி பத்திரிகை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்த விடயமாகும். அதற்காக விண்ணப்பிப்பதற்குத் தகுதியானவர்கள், வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேலதிகத் தகவல்களை பெற்றுக்கொள்ளவும். எமது கத்தோலிக்கப் பாடசாலைகளின் அதிபர்களாக நியமனம் பெற்று, உங்களது பெறுமதிமிக்க சேவையில் ஈடுபடுவதற்காக உங்களது தகமைகளை பூர்த்தி செய்வதற்கு ஆர்வமூட்டுவதோடு, உந்து சக்தியை வழங்குவதன் நோக்குடனே நான் இதனைத் தெரிவிக்கின்றேன்.

### கீழே குறிப்பிடப்படும் கருத்துக்களில் அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

1. அரசின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் எமது கத்தோலிக்கப் பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்கும் போது இங்கே குறிப்பிடப்படும் தகமைகளை பெற்றிருப்பது அவசியம்.

2. வரலாற்றிலும் நிகழ்காலத்திலும் குருத்துவ துறவறத்தினரால் நிர்வகிக்கப்பட்ட பாடசாலைகளுக்கும், குருத்துவ மற்றும் துறவறத்தினருள் நியமனங்களை வழங்குகின்ற போது, அதற்கான தகுந்த நியமனங்களை பூர்த்தி செய்யாமல் இருந்த காரணத்தினால் அந்நியமனங்களை வழங்கும்போது பல சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டன.

3. வரலாற்றில் குருத்துவ துறவறத்தினர் பரிபாலனம் செய்திருந்த போது, சில பாடசாலைகளில் தகமைகள் இல்லாத, அதனை பூர்த்தி செய்யாத அதிபர்கள் இருந்தமையால், பொதுநிலை அதிபர்களுக்கு இப்பதவிகள் கையளிக்கப்பட்டன.

4. தகமையற்ற நிலையில் அதிபர்களை நியமிக்கும்போது, அவர்கள் "பெயரளவில் அதிபர்கள்" எனும் ரீதியில் இருப்பதோடு, அப்பாடசாலைகளில் தகுந்த தகமை நிலையில் இருக்கும் ஆசிரியர்களை பதவிற்கு நியமிக்கையில், இப்பெயரளவிலான அதிபர்கள் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

5. எமது கத்தோலிக்கப் பாடசாலைகளில், கத்தோலிக்கர்களுக்குரிய மதிப்பீடுகளை பாதுகாத்துக் கொள்வதற்காக தகுந்த முறையிலான தகமைகளுள்ள அதிபர்கள் தேவைப்படுகின்ற காலகட்டத்திலே இன்று நாம் இருக்கின்றோம்.

இத்தகவல்களைக் கருத்திற்கொண்டு, மேற்குறிப்பிட்ட பரீட்சைக்காக விண்ணப்பிப்பதோடு அதற்காக தகுந்த முறையில், அர்ப்பணிப்புடன் தம்மை தயார் செய்து கொள்ளுமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன். எமது கத்தோலிக்க பாடசாலைகளில் எமது சமய விழுமியங்களையும் மதிப்பீடுகளையும் பாதுகாத்துக் கொண்டு, எமது பிள்ளைகளுக்குரிய சேவையாற்றுவதற்கு ஆசிரியர்களாகிய உங்களுக்கு விசேட அழைப்பு விடுக்கப்படுகின்றது. எனவே இவ்விடயம் குறித்து கூடிய கவனமெடுக்கவும். கொழும்பு உயர்மறைமாவட்ட கல்விப் பணியகத்தினால் இத்தேர்வுக்கான விசேட ஆயத்த கருத்தரங்குகள் எதிர்காலத்தில் ஒழுங்குசெய்யப்படும் என்பதையும் அவை குறித்த தகவல்கள் அறிவிக்கப்படும் என்பதையும் வெகுவிரைவில் அறியத் தருகின்றோம்.

கத்தோலிக்கர்களாகிய நாம் எமது கத்தோலிக்க பாடசாலைகளில் அதிபர் பதவியை ஏற்கவேண்டிய முக்கிய காலகட்டத்தில் இருக்கின்றோம் என்பதும் இது காலத்தின் தேவையுமாக உள்ளது என்பதனையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

### இலங்கையில் அதிபர்களுக்கான பணிக்கு தெரிவு செய்வதற்கான தேர்வுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கையில் கருத்திற் கொள்ளப்பட வேண்டியவை:

1. விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2018.11.19ம் திகதி ஆகும்.

2. மேலதிகத் தகமைகள் குறித்த விடயங்களை 2018.10.19ம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் இல 20194இல் இருந்து பெற்றுக்கொள்ளவும், மேலும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள கொழும்பு உயர்மறைமாவட்ட கத்தோலிக்க கல்விப் பணியகத்தினைத் தொடர்பு கொள்ளவும்.

**அருட்பணி. ஜவன் பெரேரா**
**கொழும்பு உயர்மறைமாவட்ட கல்விப் பணியக இயக்குனர்.**
**தொலைபேசி இல : 011-2699129**

# இறந்தோர் வாழ்வு ஒளி பெறவே இறைவா உம்மிடம் வந்தடைக!



## தொடக்கமாக

இயற்கையில் மனிதப் பிறப்பு வாழ்வின் தொடக்கமாக இருக்கிறது. இறப்பு முடிவாக இருக்கின்றது. இரண்டுமே மனித வரலாற்றை உருவாக்குகின்றன. பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே உள்ள வாழ்வை இறைவனின் கொடையாக கருதும் மனிதர் அவ்வாழ்வு பிறருக்குப் பல பயன்களை விளைவிக்க வேண்டுமென முயல்கின்றனர். “பிறர்க்கென்று வாழா நாள் பிறவா நாளே” என்ற எண்ணமும், மனநிலையும், செயல்பாடுமே நம்மைப் புனிதர்களாக வாழச் செய்யும்.

## தமிழர் புரிதலில் இறப்பு

தமிழ் மக்களாகிய நாம் மனித உறவுக்கென்று வாழ்வில் மிகச் சிறப்பான இடத்தைத் தருகின்றோம். அந்த உறவுக்கு அடித்தளமாக உணவு இருப்பதையும் நாம் நன்கு அறிவோம். நம் உடலை வளர்த்து அதனால் நம் உயிரை வளர்க்க உதவும் உணவைச் சத்துணவு என்று அழைக்கின்றோம். வீட்டுக்கு வந்த விருந்தினருக்கு அளிக்கும் உணவை விருந்துணவு என்றும், இறந்தோருக்குப் படைக்கும் உணவை படையல் உணவென்றும் அழைக்கின்றோம். இறந்தோருக்கு உணவளிக்கும் பழக்கம் நம் பண்பாட்டில் இருப்பதால், இறப்பால் ஒருவரின் உறவு எந்தவிதத்திலும் முறிவடைவதில்லை என்பதையே நம் பண்பாடு வெளிப்படுத்துகின்றது. உணவின் வழியாக இறைவனோடு உறவு கொள்ளும் நாம், இறந்தபின் இறைவனோடு ஒன்றாகிவிட்ட நமது உறவினரோடும் அதே உணவின் வழியாக உறவு கொள்கிறோம். இவ்வாறு இறப்பிற்குப் பின்பும் மனித உறவு தொடர்கிறது. நீங்காத நினைவாக அது என்றும் நிலைத்துநிற்கிறது.

## பழைய ஏற்பாட்டில் இறப்பு

மனிதருக்கு வாழ்வைத் தந்த கடவுள் (தொ.நூ 2:7) மனிதருக்குச் சாவு எதனால் வரும் என்பதையும் முழுவதுமாக அறிந்திருந்தார். சாவு பற்றி தனக்குள்ள ஞானத்தை மனிதரோடு பகிர்ந்து கொள்ளும் அளவுக்கு கடவுள் மனிதரோடு நெருங்கிய உறவும், நட்பும் கொண்டிருந்தார். (தொ.நூ 2:17) ஆனால் மனிதனோ கடவுளின் அறிவுரையைக் கேட்டு வாழ விரும்பாமல் சாவைத் தேர்ந்தெடுத்தான். கடவுளுக்கு கீழ்ப்படியாமல் மனிதன் பாவம் செய்கிறான். இவ்வாறு மனித பாவத்தினால் சாவு உலகிற்குள் நுழைகின்றது. (தொ.நூ 3:1-19) இதைத்தான் சபை உரையாளர், “கடவுள் மனிதரை நேர்மையுள்ளவராகவே படைத்தார். ஆனால் வாழ்க்கைச் சிக்கல்கள் அனைத்தும் மனிதர் தேடிக்கொண்டவையே” (ச.உ 7:29) என்றுரைக்கின்றார்.

இணைச்சட்டம், பிரிவு 30இல் கடவுள், தான் படைத்த மனிதரின் முன்பாக வாழ்வையும், சாவையும், நன்மையையும், தீமையையும் வைத்து, மனிதரே தம் சுதந்திரத்தில் தேர்ந்து வாழ்ந்திட அழைக்கிறார். மனிதர் தெளிந்த தேர்ந்திட வாழ்வு, சாவு பற்றி கடவுளே விளக்கமும் தருகிறார். மனிதர் கடவுளை அன்பு செய்து, அவரைப் பின்பற்றி வாழ்ந்தால் வாழ்வையும், மாறாக உயிருள்ள கடவுளை மறந்து போலித் தெய்வங்களைப் பின்பற்றி வாழ்ந்தால் செத்தொழிந்து போவர் என்பதையும் விளக்குகிறார் (இ.ச 30:16-18)

விடுதலைப்பயண நூலில் பிரிவு 21 மற்றும் 22ல் எந்தெந்த குற்றங்களுக்காக மனிதர்கள் சாகடிக்கப்பட வேண்டும் என்ற நீண்டதொரு பட்டியல் தரப்பட்டுள்ளது. பிறருக்கு துன்பங்களையும் சாவையும் கொணர்பவர்கள் சாகவேண்டும் என்பதை அப்பட்டியலில் காண்கின்றோம். மேலும் எண்ணிக்கையில் பிரிவு 35:16-34லும் யார், யார் எப்போது சாகடிக்கப்பட வேண்டும் என்ற செய்தி தரப்பட்டுள்ளது. பிற மனிதரைக் கொன்றவர்களைக் கொல்வது நீதியாகும், அதுவே கடவுள் மோசே வழியாகத் தந்த சட்டத்தை நிறைவேற்றுவதாகும் என்று முதல் ஏற்பாட்டு யூதர்கள் நம்பினார்கள்.

மனித வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் நடக்கும் வாழ்வுப் போராட்டத்தில், நம் கண்ணீரையெல்லாம் இறுதியில் துடைத்து சாவுக்கு சாவுமணி அடிப்பவர் இறைவன்தான் (எசா 25:8) அதைத் தன் துன்புறும் ஊழியர் வழியாகச் சாதிப்பார் என்பதை எசாயா இறைவாக்காகச் சொல்கிறார் (எசா 52:13-53:12). எசாயா முன்னுரைத்த துன்புறும் ஊழியன் நான்தான் என்பதை இரண்டாம் ஏற்பாட்டில் இயேசுவின் வாழ்வில் காண்கின்றோம்.

## புதிய ஏற்பாட்டில் இறப்பு

புதிய ஏற்பாட்டு இறை வார்த்தைகளிலும், பழைய ஏற்பாட்டுப் புரிதலிலும் சாவுக்கு காரணம் மனித பாவமே என்பது தெளிவாகச் சொல்லப்படுகிறது (யோவா 5:14, உரோ 6:23). மனிதப் பாவங்களைப் போக்கி மீண்டும் மனிதருக்கு நிறை வாழ்வைத் தர வந்தவரே இயேசுகிறிஸ்து என்பதை புதிய ஏற்பாடு உலகிற்குத் தெளிவாக அறிவிக்கின்றது. இயேசுவின் பிறப்பிற்கு முன்னதாகவே, இயேசுவின் பாவம் போக்கும் பணியைப் பற்றி தாவீதின் மகனாகிய யோசேப்புக்கு வானதூதர் அறிவித்தார். “அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்” (மத் 1:21)

இயேசு தனது பணிவாழ்வைத் தொடங்குமுன் அவரை திருமுழுக்கு யோவான், உலகின் பாவங்களைப் போக்குகின்றவராகவே அறிமுகப்படுத்தி வைக்கிறார் (யோவா 1:29). மேலும் நற்செய்தியில் இயேசு பாவிகளை அழைக்கவே வந்தார் (மத் 9:13) என்றும், பலரின் பாவங்களை மன்னித்து நலம் தரும் வாழ்வைத் தந்தார் என்றும், மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க தனக்கு அதிகாரம் உண்டு என்பதை நிரூபித்தார் (மத் 9:6, லூக் 5:24) என்றும் மனிதரும் ஒருவர் மற்றவரின் பாவங்களை மன்னிக்கவேண்டும் எனப் போதித்தார் (மத் 6, 15; 18, 15) என்றும், மக்களின் பாவங்களை மன்னிக்க தம் சீடர்களுக்கும் அதிகாரம் அளித்தார் (யோவா 20, 23) என்றும், பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமை எனச் சொல்லியும், அடிமைப்பட்டவருக்குத் தான் வழங்கும் விடுதலை உண்மையான விடுதலை (யோவா 8:34-36) எனவும் போதித்தார் என்றும் வாசிக்கின்றோம். இவ்வாறு கடவுளின் திருமகனான இயேசு கிறிஸ்துவே சாவுக்குக் காரணமான பாவங்களிலிருந்து நம்மை மீட்டு, சாவையும் ஒழித்து, நிறை வாழ்வைத் தருபவர் என்பதை புதிய ஏற்பாடு அறிவிக்கின்றது.

## திருத்தூதரின் புரிதலில் இறப்பு

நாம் இப்போது வாழும் வாழ்வானது பாவத்திற்கு இறந்த வாழ்வு என்கிறார் பவுலடியார் (உரோ 6:11, எபே 2:1). மேலும் “இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அவரே முதலில் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகிறது. ஒரு மனிதர் வழியாகச் சாவு வந்ததுபோல ஒரு மனிதர் வழியாகவே இறந்தோர் உயிர்த்தெழுகின்றனர். ஆதாமை முன்னிட்டு அனைவரும் சாவுக்குள்ளானது போலக் கிறிஸ்துவை முன்னிட்டு அனைவரும் உயிர் பெறுவர்” (1கொரி 15, 20-22, 1தெச 4, 16). “நம் மீட்பராகிய கிறிஸ்து இயேசு உலகில் தோன்றியதன் மூலம் இப்போது அருள் வெளிப்பட்டுள்ளது. அவர் சாவை அழித்து, அழியா வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச் செய்தார். (2 திமொ 1,10) இறைமகனைக் கொண்டிருப்போர் வாழ்வைக் கொண்டுள்ளனர். அவரைக் கொண்டிராதோர் வாழ்வைக் கொண்டிரார் (1யோவா 5, 12). இறுதியாக, யோவானுக்கு அருளப்பெற்ற திருவெளிப்பாட்டில் “அவர்களுடைய கண்ணீர் அனைத்தையும் அவர் துடைத்துவிடுவார். இனிமேல் சாவு இராது, துயரம் இராது, அழுகை இராது, துன்பம் இராது” (யோவா 21, 4) என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த இறைவனின் வாக்கு நிறைவேறி புதிய விண்ணகமும், புதிய மண்ணகமும் பிறக்கும் வரை நாம் நம்பிக்கையோடு வாழ்ந்து வருகிறோம்.....

## புனிதர்களின் உறவை நம்புகிறோம்

கிறிஸ்தவப் பாரம்பரியத்தில் உருவாக சமயக் கோட்பாட்டில் ஒன்று “புனிதர்களின் உறவை நம்புகிறோம்” என்பதாகும். திருச்சபையால் புனிதர்கள் என்று வெளிப்படையாக அறிவிக்கப்பட்ட மற்றும் அறிவிக்கப்படாத எல்லாப் புனிதர்களோடும் உயிர் வாழும் நமக்கு நெருங்கிய உறவுண்டு என்பது இதன் பொருள் ஆகும். மேலும் இறைவனின் நித்திய ஒளியில் வாழும் அவர்கள் நமக்காக இறைவனிடம் மன்றாடுகிறார்கள் எனவும், நாம் அப்புனிதர்களிடம் செபித்துக் கேட்பதையெல்லாம் அவர்கள் இறைவனிடம் பெற்றுத் தருகிறார்கள் என்பதும் அந்த நம்பிக்கையாகும். இப்புனிதர்களெல்லாம் இறந்தபின்பு இறைவனோடு வாழ்வதால், இவர்கள் இன்னும் தங்களின் உடலோடு உயிர்க்கவில்லை...

தொடர்ச்சி 15ம் பக்கம்..




கார்த்திகை மாதம், ஒளியின் விழாவாகிய தீபாவளியைக் கொண்டாடுகின்றோம். தீமையை வென்று அறத்தை நிலைநாட்டியதைத் திருநாளாகக் நம் இந்து சகோதர சகோதரர்கள் இதை கொண்டாடுகின்றனர். கத்தோலிக்கராகிய நாம், தீபத் திருநாளாக இதைக் கொண்டாடுவதற்குக் காரணம் இருளிலும் இறப்பின் பிடியிலும், இருப்போர்க்கு ஒளிதர விண்ணிலிருந்து நம்மைத் தேடி வந்த விடியல் என்று செக்கரியா மனுவுரு எடுத்த இயேசுவைப் புகழ்கின்றார் (லூக் 1:75) அதாவது பாவம் சூழ்ந்த இருள் வாழ்விலிருந்து நம்மை மீட்ட இயேசு கிறிஸ்துவை அகத்தின் இருளை அகற்றும் அருட்பெருந்சோதியாக நாம் அனுபவிக்கின்றோம், எனவே தான் நாம் இத்திருநாளைக் கொண்டாடுகின்றோம்.

## இத்திருநாள் நமக்கு உணர்த்துவது என்ன?

பாவ இருள் சூழ்ந்த உலகம் இருக்கும் நிலைகண்டு அதை உருவாக்கிய இறைவனே. இருள் போக்கும் ஒளியாக இவ்வுலகிற்கு வந்தார். அவரைத்தான் யோவான் தொடக்கத்தில் வாக்கு இருந்தது.... அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது (யோவா 1:1). அவரிடம் வாழ்வு இருந்தது. அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது. அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது. இருள் அதன்மேல் வெற்றிக்கொள்ளவில்லை" என்கிறார் (யோவா 1:4-5). இவர் எல்லா மனிதர்களுக்கும் உரியவர். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் பிறந்தாலும், ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் வளர்ந்திருந்தாலும் இவர் எல்லா மனிதருக்கும் சொந்தக்காரர். இதை உணர்ந்த லூக்கா தனது நற்செய்தியில் இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடும் அருளும்.. என்கிறார் (லூக் 2:32)

## நானே உலகின் ஒளி

வாழ்வைத் தருபவரும், வாழ்வுக்கு ஆதாரமாக இருப்பவரும், வாழ்வை வளர்த்தெழுப்பவரும், வாழ்வினைப் பற்றி என்றும் பேசி, வரலாற்றில் வாழ்வை இழந்து தவிப்பவர் பக்கம் நின்று அவர்கள் இழந்த வாழ்வை மீண்டும் விடுதலை வாழ்வாகப் பெற்றுத் தருபவரும் இறைவன் ஒருவரே. ஒளியான அவர் இந்த உலகில் இருந்தபோது நானே உலகின் ஒளி என்றார் (யோவா 8,12:9,5:12-46). அவருடைய சொல்லிலும், செயலிலும், வாழ்விலும், சாவிலும், உயிர்ப்பிலும், விண்ணேற்பிலும், அவர் உலகின் ஒளியாக இருந்தார், இருக்கிறார்.

## நீங்கள் உலகின் ஒளி

நானே உலகின் ஒளியென்றவர், நாம் அனைவரும் அவரைப்போல் இவ்வுலகின் ஒளியாகத் திகழ வேண்டுமென்றார் (மத் 5:14) ஒளியென்றால் உண்மையில் என்ன பொருள், மத்தேயு நற்செய்தியை நாம் தொடர்ந்து வாசிக்கின்றபோது நாம் பிறருக்குச் செய்யும் நற்செயல்களின் வழியாக நாம் உலகில் ஒளிர்ந்திடவும், நம் நல்ல செயல்களைப் பார்ப்பவர்கள் வானகத் தந்தையை வாழ்த்த வேண்டும் என்பதுதான் (மத் 5:16) இறைமகன் இயேசு கிறிஸ்துவின் விருப்பம்.



## இதயத்திலிருந்து இருளா ஒளியா?

நம் வீடுகளில் நாம் உபயோகிக்கும் எல்லாப் பாத்திரங்களுக்கும் இருபக்கங்கள் உண்டு. ஒன்று உள்பக்கம், மற்றொன்று வெளிப்பக்கம். இயேசுவின் போதனைகளில் மனிதருக்கும் இதேபோல் உள்பக்கம், வெளிப்பக்கம் உண்டு என்கிறார் (லூக் 6:45) அவருடைய மக்கள் அனுபவத்தில் மக்கள் அதிகம் முக்கியத்துவம் தருவது வெளிப்பக்கத்திற்கு மட்டுமே என்பதை உணர்ந்தார்.

இந்தத் தவறைச் சுட்டிக்காட்டி ஒவ்வொரு மனிதரும் தனது உள்பக்கத்தை தூய்மையாக வைத்துக்கொள்ள இயேசு அழைக்கிறார் (லூக் 11:38-41). அவ்வாறு தூயதாக்கப்பட்ட உள்ளங்களில் ஒளி குடிகொள்ளும் (மத் 6:22). ஒவ்வொரு நாளும் உடைகளை மாற்றி, நன்றாகக் குளித்து உடலைத் தூய்மையாக வைக்கும் நாம் உள்ளத்தில் மண்டிக்கிடக்கும் இருளென்னும் பாவக் குப்பைகளைக் கூட்டி அள்ளி வெளியே வீசியெறிய மனமில்லாமல் ஏன் வாழ்கிறோம்?

## விரும்புவது ஒளியா? இருளா?

நம் இதயங்களில் ஒளியேற்ற இறைவன் என்றென்றும் விரும்புகிறார். அவ்வொளியை அவர் நமக்கு இலவசமாகத் தந்து ஒளிரச் செய்திருக்கிறார் (2 கொரி 4:6). நம் வாழ்வில் புயல் வீசலாம், பெரும் வெள்ளம் அடித்துச் செல்லலாம், ஏன் பூகம்ப அதிர்வில் நாம் தடுமாறலாம், ஆனால் அந்த வல்லமைமிக்க இறை ஒளி நம்மிடம் இருக்கும்போதே நாம் பயணித்தால் (யோவா 12:35), எந்தத் தீமையும் நம்மை அணுகாதபடி அந்த ஒளிவடிவான தெய்வமே நம்மை பாதுகாத்து வழிநடத்துவார். எனவே நம்மைப் பொறுத்தவரை என்றும் நம் இதயங்களில் இருள்சார்ந்த அனைத்தையும் அகற்றி, ஒளிசார்ந்த வாழ்வுண்மைகளோடு நம் இதயங்களை துடிக்கச் செய்வோம். ஆனால் புனித யோவானின் மனிதர் பற்றிய அனுபவம் இதற்கு முற்றிலும் மாறுபட்டே இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஒளி இருளில் ஒளிர்கின்றது (யோவா 1:5). ஆனால், மனிதர்கள் ஒளியைவிட இருளை நேசித்தார்கள் என்கிறார் அவர் (யோவா 3:19).

சகமனிதரை மதித்து, மனித மாண்போடு அவர்களை அன்பு செய்து வாழாதவர் தீமையை நேசிக்கிறவர்கள். தீமையைச் செய்யும் ஒவ்வொரு மனிதரும் ஒளியை வெறுக்கிறார் (யோவா 3:20). இதற்கு மாறாக என்றும் நம்மையை நாடி வாழ்பவர்கள், நன்மையை பிறருக்குச் செய்து வாழ்பவர்கள், ஏன் தமக்குத் தீமை செய்தாருக்கும் நன்மையை மட்டும் திரும்பச் செய்பவர்கள் ஒளியை நேசிக்கிறார்கள். இவர்கள் இறைவனை அறிந்தவர்கள். இறைவனில் வாழ்பவர்கள். மனிதர் நடுவிலேயே உயிர்வாழும் இறைவனின் பிரசன்னத்தை அறிந்துணர்ந்து கொண்டாடுபவர்கள். இவர்கள் இறைவனிடம் இருந்தே புறப்பட்டு வந்தவர்கள், இறைவனின் திட்டத்தை எங்கும் எதிலும் நிறைவேற்றி, இறைவனை நோக்கி என்றும் பயணிப்பவர்கள். இவர்கள் வாழ்வில் நிறைவு பெற்றவர்கள். விண்ணக வாழ்வை ஏற்கனவே மண்ணகத்தில் சுவைத்தவர்கள். எனவேதான் இவர்களால் இறைவனிலும் காணமுடிகிறது. இவர்களைப்போல் நாமும் உருவாகிட இத்தகைய ஒளி விழாக்களை நாம் கொண்டாடி மகிழ்வோம்.



**தீமையை நன்மை ஆட்கொண்டு, புனிதம் எங்கும் நிறைந்து, எங்கும் மகிழ்ச்சி பொங்க, இனிய தீபாவளி வாழ்த்துக்கள்**

# ஞான ஒளி கிறிஸ்மஸ் பத்திரிகை



கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் ஒரே தமிழ் பத்திரிகையாகிய "ஞான ஒளி" தனது சிறந்த கட்டுரைகளாலும், ஆக்கங்களாலும் சிறுவர் முதல் முதியோர் வரை நல்ல கத்தோலிக்க சமூக, மருத்துவ நிகழ்வுகளை படைத்து வருகின்றது.கொழும்பில் மட்டுமல்ல ஏனைய மறைமாவட்டங்கள், பங்குகள் பாடசாலைகள், கன்னியர் இல்லங்கள் என்று பல தளங்களில் ஞான ஒளி சென்றடைகின்றது.

ஆன்மீகம், சமூக கட்டுரைகள், சிறுவர் ஆக்கங்கள், மாணவர் உளவியல், வத்திக்கான் செய்திகள், கொழும்பு மறைமாவட்ட பங்கு செய்திகள், ஏனைய மறைமாவட்ட செய்திகள் ஞாயிறு மறையுரை போன்ற விடயங்களை உள்ளடக்கிய ஞானஒளி பத்திரிகை, தமிழ் மக்கள் அனைவருக்கும் கிடைக்கும் ஒரு வரப்பிரசாதமே இந் ஞான ஒளி பத்திரிகை.

உலகமே கொண்டாடும், கிறிஸ்மஸ் பெருவிழாவில் உங்கள் விளம்பரங்களைத் தந்து இப்பத்திரிகையை முன்னேற்றவும், அத்தோடு கிறிஸ்மஸ் ஆக்கங்கள் அதாவது கட்டுரை, கதைகள், கவிதைகள், சிறுகதைகள், சித்திரங்கள் என்பவற்றை எமக்கு நேரகாலத்தோடு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். சிறப்பாக கிறிஸ்மஸ் பிறப்பு பத்திரிகையாக வெளிவர எமக்கு உதவுங்கள். கார்த்திகை இறுதிக்குள் அல்லது மார்கழி முதல் வாரத்திற்குள் உங்கள் ஆக்கங்கள் எமக்கு கிடைக்கும்படியாக அனுப்புங்கள்.

நன்றி




மாணவர்களே! உங்களது ஆக்கங்களை வரைந்து வர்ணம் தீட்டி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர், ஞான ஒளி,
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08.

## தொடர்பு படுத்துக

| | |
|---|---|
| ஆபிரகாம் | யாக்கோபின் மகன் |
| மரியாள் | இயேசுவின் சீடர் |
| யோசேப்பு | எலிசபெத்தின் மகன் |
| திருமுழுக்கு யோவான் | விசுவாசத்தின் தந்தை |
| பேதுரு | இறைவனின் தாய் |

# தாயன்பு தனியன்பு



களைப்பின் மிகுதியால் ஒரு தாய் தன் குழந்தையின் அருகில் தூங்கிக்கொண்டிருந்தாள். அவளது இல்லத்தை அடுத்துச் செல்லும் நெடுங்சாலையில் பலத்த இரைச்சலுடனும் அதிர்ச்சியுடனும் லாரிகள் சென்றுகொண்டிருந்தன. என்றாலும், அவள் விழித்தெழவில்லை. வீட்டின் மறுபக்கத்தில் செல்லும் புகைவண்டியின் இரைச்சலிலும் அவள் அயர்ந்து தூங்கினாள்.

அடுத்து சில மணி நேரம் மழை 'சோ' வென்று கொண்டியது. பக்கத்து வீடு பலத்த மழையினால் புயலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இடிந்து விழுந்தது. அந்த இரைச்சலிலும் அவள் அசையவில்லை. இடியும் மின்னலும் தொடர்ந்து முழங்கின. இருப்பினும் அவள் நிம்மதியாகத் தூங்கினாள்.

ஆனால் அருகில் படுத்திருந்த குழந்தை சிறிது நெளிந்து மென்மையான குரலில் 'அம்மா' எனச் சொல்லி அழ ஆரம்பித்தது. உடனே அக்குழந்தையை அன்னையின் கரம் அணைத்துத் தேற்றியது. தாயன்பு, தனியன்பு. இறையன்பு இதைவிடச் சிறந்தது.

**"பெற்ற தாய்க்கு அன்பு வற்றிப்போகுமா? பால் குடிக்கும் குழந்தையை அவள் மறப்பதுண்டோ? அப்படியே பெற்றவள் தன் பிள்ளையை மறந்து விட்டாலும் நாம் உன்னை ஒருபோதும் மறக்கமாட்டேன்".**

**(எசா. 49:15)**

# 4. தனிச் செபப் பழக்கம்

## 3. துயரத்தின் மறைநிகழ்வுகள்

### 4. இயேசு சிலுவையைச் சுமக்கின்றார்

வானகத் தந்தையே அப்பா!

வதைப்போர் உம் மகனின் தோளில் சிலுவையைச் சுமத்தி கொலைசெய்யக் கொண்டுபோனார்கள். அன்னை மரியாவின் பரிந்துரையால் வாழ்வின் சுமைகளைத் தாங்க எனக்கு உதவிசெய்யும்.

**பரலோகத்தில் இருக்கின்ற....**

இயேசு சிலுவையை ஏந்துகின்றார். **அருள் நிறை**
தோள்மீது சிலுவையைத் தாங்குகின்றார். **அருள் நிறை**
தாயாரைச் சந்திக்கின்றார். **அருள் நிறை**
சிலுவையுடன் கீழே விழுகின்றார். **அருள் நிறை**
சீமோன் கைகொடுத்து உதவுகின்றார். **அருள் நிறை**
வெரோணிக்கா முகத்தைத் துடைக்கின்றார். **அருள் நிறை**
தாய்மாருக்கு ஆறுதல் சொல்லுகின்றார். **அருள் நிறை**
தனக்காக அழவேண்டாம் என்கின்றார். **அருள் நிறை**
மலை உச்சியை அடைகின்றார். **அருள் நிறை**
சிலுவை மரத்தை இறக்குகின்றார்கள். **அருள் நிறை**

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நாங்கள் நரக நெருப்புக்குள் செல்லாதவாறு எங்களைக் காப்பாற்றும். எல்லா மக்களையும் விண்ணகப் பாதையிலே வழிநடத்தும். உம் இரக்கம் அதிகம் தேவைப்படுவோருக்கு சிறப்பாக உதவி செய்யும்.

### 5. இயேசு சிலுவையில் உயிர்விடுகின்றார்

வானகத் தந்தையே அப்பா!

உம் மகன் சிலுவையில் நட்டுவைக்கப்பட்டு, மூன்று ஆணிகளில் தொங்கியவாறு இறந்தார். அன்னை மரியாவின் பரிந்துரையால் சுயநலனுக்கு இறக்க எனக்கு உதவிசெய்யும்..

**பரலோகத்தில் இருக்கின்ற....**

இயேசு ஆடை உரியப்படுகின்றார். **அருள் நிறை**
சிலுவையிலே அறையப்படுகின்றார். **அருள் நிறை**
பூமியிலே நட்டுவைக்கப்படுகின்றார். **அருள் நிறை**
ஏளனம் செய்யப்படுகின்றார். **அருள் நிறை**
தாயை யோவானிடம் ஒப்படைக்கின்றார். **அருள் நிறை**
தாகமாய் இருக்கிறேன் என்கின்றார். **அருள் நிறை**
ஒரு கள்வன் நல்லாசி பெறுகிறான். **அருள் நிறை**
எல்லாமே நிறைவேறிற்று என்கிறார். **அருள் நிறை**
தம் உயிரைத் தந்தையிடம் கொடுக்கின்றார். **அருள் நிறை**
தலைசாய்த்து உயிரை விடுகிறார். **அருள் நிறை**

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நாங்கள் நரக நெருப்புக்குள் செல்லாதவாறு எங்களைக் காப்பாற்றும். எல்லா மக்களையும் விண்ணகப் பாதையிலே வழிநடத்தும். உம் இரக்கம் அதிகம் தேவைப்படுவோருக்கு சிறப்பாக உதவி செய்யும்.


........................ **தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**
........................



**ஆக்கம் : F. ஆன் கிலேரா, தரம் 4B**
**க/இரஜவல்ல இந்து தே.க, திகன**

## மாறுபட்ட உருவத்தை கண்டு பிடியுங்கள்.





**ஆக்கம் : F. றொஷான், தரம் 7A**
**க/இரஜவல்ல இந்து தே.க, திகன**

## பழமொழிகள்


- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
- காலம் கடந்து கண்ட உண்மையே நரகம் **ற்ரேயோன் எட்வட்ஸ்**
- நேர்மை ஆரோக்கியம், துர்க்குணம் நோய். **பெற்றர்க்**
- நல்ல நகைச்சுவை சமூகத்தில் அணிய முடிந்த நல்ல ஆடைகளில் ஒன்று. **வில்லியம் தகேறாய்**
- அடக்கம் இல்லையெனில் மனித குலம் இருக்க முடியாது. **யோன் வுசான்**
- சோம்பேறித்தனத்தைவிட தூக்கத்திற்கு பெரிய காரணம் வேரேதும் இருக்க முடியாது.
- சோம்பியிருக்கும் மனம் சாத்தானின் பணி மனை.
- அறிவீனம் ஒருபோதும் பிரச்சினைக்கு தீர்வு காணாது. **நிக்கோலஸ் லிங்**
- அடிக்கடி முயற்சிக்காதவை தான் முடியாதவை ஆகும். **ஜிம் கொட்வின்.**
- கெட்ட செய்தி வேகமாக பரவுகிறது.

# பரீட்சை ஒரு மாணவனுக்கு இன்றியமையாதவை




- இச்சமுதாய அமைப்பில் தனி மனித வாழ்வுக்கும், வேலை வாய்ப்புக்கும் மதிப்பெண்கள் இன்றியமையாதவை.
- பரீட்சை என்பது வாழ்வில் தவிர்க்க முடியாத சோதனைகள்.
- எப்படியாவது கடந்துவிட வேண்டிய கட்டங்கள். திணிக்கப்படும் துன்பங்கள், சுமத்தப்படும் சுமைகள் என்றுதானே எண்ணுகின்றாய். அப்படி எண்ணாதே.

**ஏனெனில்**



- துன்பம் இன்றி இன்பம் இல்லை.
- சோதனை இன்றி சாதனை இல்லை.
- துன்பத்தின் வழிதான் இன்பம்.
- உரித்தால்தானே முரசு.

**எனவே**

- பரீட்சை ஒரு பாரம், நோவு, கஷ்டம் என நொந்து கொள்ளாதே.
- பரீட்சையைக் கண்டு பயந்துவிடாதே.
- துணிந்து நின்று முயற்சி செய்.

### இதோ பரீட்சை எழுத சில முக்கியமான விடயங்கள்



**பரீட்சை என்பது,**

- அது உன் திறமைகளை வெளிப்படுத்த உதவும் தருணம்.
- "நான் யாரெனக் காட்டுகிறேன் பார்? என்று வரிந்து கட்டிக் கொண்டு சாதிக்க உனக்கு கிடைக்கும் அரியதொரு வாய்ப்பு.

### இயேசுவே காப்பாற்றும்!

பரீட்சைக்காக இறைவனிடம் வேண்டுவது நல்லது. அவ்வாறு செய்வது உன் மனதை ஒருமுகப்படுத்தும்.

**அதற்காக**

முழு பாரத்தையும் கடவுள் மேல் போட்டுவிட்டு படிக்காமல் அலையலாமா? கூடவே கூடாது.



பாடசாலை போகாமல்
பாடத்தைப் படிக்காமல்
பரீட்சையும் எழுதாமல்
என்னைப் பாசாக்கும் இயேசுவே
நான் பூசைக்கு வருவேன்.
பூ வைப்பேன்.
காணிக்கை செலுத்துவேன்
என்று இறைவனிடம் பேரம் பேசாதே'

**மாறாக**

- பரீட்சை எழுத தேவையான துணிச்சல்
  - விடாமுயற்சியுடன் கூடிய படிப்பு
  - நினைவாற்றல், இதற்காக மன்றாடு
  - பரீட்சைக் காலங்களில் நல்ல உடல் - உள
  - நலத்தைக் கேள்
  - புரியாதவற்றை புரிந்து படிக்கும் அறிவாற்றலைக் கேள்.
  - படித்தவற்றை திறம்பட பரீட்சை தாளில் எழுதும் திறமையைக் கேள்.

### பரீட்சை எழுதுவதற்கு முந்தினநாள் செய்ய வேண்டியது.

- பரீட்சைக்கு முந்தின நாள் எதையும் புதிதாகப் படிக்காதே.
- புதிதாக எதையும் மனப்பாடம் செய்ய முயலாதே. மாறாக திருப்பிப் பார்.
- முந்திய மூன்று ஆண்டுகளில் கேட்டகப்பட்ட கேள்வித்தாள்களை பார்த்துக் கொள்.
- குழப்பமான வினாக்களுக்கு விடையைத் தேட முயலாதே.




### பரீட்சைக்கு போகும் முன் சாப்பாடு



- பரீட்சை எழுத உடல் நலம் மிக மிக முக்கியம்.
- நிறைய தண்ணீர் குடிக்க வேண்டாம்.
- காய் கறிகள், பழங்கள், கீரைகள் அதிகம் சாப்பிட வேண்டும்.
- நொறுக்குத் தீனிகளை தாறுமாறாக சாப்பிடக் கூடாது.
- பரீட்சைக்கு முன் வயிறு முட்டச் சாப்பிடக் கூடாது.

### தேர்வு நேரத்தைத் திட்டமிட...



- கேள்வித்தாளின் அமைப்பு பற்றி நன்கு தெரிந்துகொள்.
- கேள்வித்தாளின் ஒவ்வொரு பகுதிக்கும் எவ்வளவு நேரம் ஒதுக்க வேண்டும் என்பதை முடிவு செய்!
- ஒவ்வொரு கேள்விக்கும் எவ்வளவு நேரம் கொடுக்க முடியும் என்பதில் தெளிவாய் இரு!

**அதற்காக**

ஆசிரியரின் உதவியை நாடு!
100 மதிப்பெண் தேவை
100 நிமிடத்தில் எழுதி முடிக்கப் பழகு!

### தேர்வுக்குச் சற்று முன்... "மனசே ரிலாக்ஸ் ப்ளீஸ்!"



- அமைதியான ஒரு மனநிலையை வரவழைத்துக் கொள். அமைதி கொள். ஆரவாரம் செய்யாதே.
- மிக முக்கியமான பதில்களை நினைவுபடுத்திக் கொள்.
- மனத் திரையில் குறிப்புகளை சரி பார். தேவைப்பட்டால் முக்கியக் குறிப்புகளை எடுத்துப் பார்.

### தேர்வு நேரத்தில்... ஆரம்ப வேலைகள்...

- தேர்வுக்கு அணிந்து செல்லும் உடையை ஏற்கனவே எடுத்து வைத்துக் கொள்.
- அதில் உனக்குத் தெரிந்தோ தெரியாமலோ ஏதாவது குறிப்புச் சீட்டுகள் (Bits) இருந்தால் அவற்றை இரகசியமாக எடுத்து எறிந்துவிடு.
- அடுத்தவன் கொண்டு வரும் குறிப்புச் சீட்டுக்களையும் நம்பிப் போகாதே.



- அடுத்தவனைப் பார்த்தோ கேட்டோ எழுதிவிடலாம் என்று போகாதே!
- தேர்வுக்குத் தேவையான அடிப்படைப் பொருட்களை எடுத்துச் செல்ல மறவாதே.
- அறை அனுமதிச் சீட்டு (Hall tickit), உனக்கு மிகவும் பழக்கப்பட்ட பேனை, அடிக்கோடிட இன்னொரு நல்ல பேனை, பென்சில், ரப்பர், பிளேடு, ஜோமென்ட்ரி பாக்ஸ், ரூலர் ஸ்கேல், கைக்கடிகாரம் போன்றவற்றை எடுத்துக் கொள்ள மறவாதே.
- தேவையற்ற பொருள்களை தெரியாமல்கூட எடுத்துப் போகாதே!
- குறிப்பிட்ட நேரத்திற்கு ஐந்து நிமிடம் முன்னதாகவே தேர்வு அறைக்குச் சென்று அமர்ந்துவிடு. அந்தப் புதிய சூழலுக்கு உன்னையே சகஜமாக்கிக் கொள்.
- விடைத்தாளைப் பெற்றவுடன் உனது இருக்கை எண், பதிவு எண், பாடத்தின் பெயர், நாள்... போன்ற தேவையான தகவல்களைத் தேவையான இடத்தில் குறிக்க வேண்டும்.
- விடைத்தாளில் சிலுவை போன்ற மதச் சின்னங்கள் வேண்டாமே! அது உன் மதிப்பெண்களைப் பாதிக்கலாம்.
- விடைத்தாளின் இடதுபுறம் மிகவும் அகலமான பக்கக் கோடுகளை (மார்ஜின்) வரைந்து கொள். அது விடைத்தாளைத் திருத்துவோரின் வேலையை எளிதாக்கும், உன்னைப் பற்றிய நல்ல எண்ணத்தையும் உண்டாக்கும்.

### கேள்வித் தாளை வாங்கியவுடன்:

#### முதல் பத்து நிமிடங்களில்...



- கேள்வித்தாள் கிடைத்தவுடன்... அதில் உன் தேர்வு எண்ணை தெளிவாக பேனாவால் எழுதுங்கள், பென்சிலால் அல்ல!
- முழுவதையும் ஒருமுறை நிதானமாக வாசி!
- ஒட்டுமொத்தமாகக் கேள்வித்தாள் எப்படி இருக்கிறது என்று உணர்ந்துகொள்.
- கேள்வித்தாள் எப்படி இருந்தாலும், ஓர் உற்சாகமான மனநிலையை வரவழைத்துக் கொள்!
- தெரியாத வினாக்களைப் பார்த்து அதிர்ந்து போகாதே! வியர்த்து விறுவிறுக்காதே!
- உனக்கு நன்கு தெரிந்த கேள்விகளை மனதளவில் குறித்துக்கொள்!
- கேள்வித் தாளில் எதையும் குறிக்காதே, பிரச்சனை வரும்!

### அடுத்த ஐந்து நிமிடங்களில்....

**விடைத்தாளை வாங்கியவுடன்**


- உன் தேர்வு எண்ணை பெரிதாக, தெளிவாக எழுது, நுணுக்கி நுணுக்கி அதை எழுதாதே!
- ஆசிரியர்கள் அறிவுறுத்தியுள்ளபடி, இதரக் குறிப்புகளை மறக்காமல் குறி!



- தெரிந்த கேள்விகளுக்கு முதலில் பதில் எழுது!
- யோசித்து யோசித்து எழுதிவிடலாம் என்பது போன்ற கேள்விகளை முதலில் எழுத ஆரம்பிக்காதே! நேரம்தான் விரயமாகும்.
- விடைத்தாளில் அழித்தல், திருத்தல் இல்லாமல் பதில் எழுது!
- அழகாக இடைவெளி விட்டு எழுது!

### தேர்வு எழுதும்போது...

- நெருக்கி நெருக்கி, நுணுக்கி நுணுக்கி எழுதாதே!



- அடுத்தவன் எப்படி எழுதிக் கொண்டிருக்கிறான் என்பது பற்றி கவலைப் படாதே!
- அடுத்தவன் என்ன உதவி கேட்டாலும் செய்யாதே, அங்கு அது உன் வேலை அல்ல!
- எழுத எடுத்துக் கொண்ட கேள்விக்கான எண்ணை இடப்பக்கக் கோட்டில் (மார்ஜின்) கட்டாயமாக எழுது, பெரிதாக எழுது!
- கேள்வி எண்களை கேள்வித்தாள்களில் உள்ளது போல் எழுது (உ.தா. 1, அ,ஆ போன்றவை) இவற்றை மாற்றி எழுதுவது விடைத்தாள் திருத்துபவரையும் குழப்பும், மதிப்பெண் குறையும்!

### கடைசி ஐந்து நிமிடங்கள்...

- கடைசி ஐந்து நிமிடங்களுக்கு முன் எழுதுவதை நிறுத்து!
- அந்த நேரத்தில் கேள்வி எண்களை கவனமாக சரி பார்!



- அனைத்து கேள்விகளுக்கும் விடையளித்துள்ளனவா என்றும் பார்!
- தலைப்பு, துணைத்தலைப்பு, முக்கியமான கருத்துக்கள் போன்றவற்றிற்கு அடிக்கோடிட மறந்திருந்தால் செய். அதற்காக சிவப்பு, பச்சை போன்ற நிறங்களைப் பயன்படுத்தாதே.
- கடைசி நிமிடம் வரை தேர்வு அறையில் இரு! சூத்திரங்களைச் சரி பார்!
- இறுதியில் விடைத்தாள்களை பக்கம் அடுக்கிக் கட்ட மறக்காதே.
- பொறுப்பாசிரியர் வந்து விடைத்தாளை பெறும்வரை காத்திரு. கொடுத்துவிட்டு வா, வைத்துவிட்டு வராதே!

### தேர்வு முடிந்த பின்...

- 'நிறைவாகவே செய்திருக்கிறேன்' என்று உன்னையே நீ பாராட்டிக் கொள்!
- அங்கேயே பிறமாணவர்களைச் சுற்றி நின்றுகொண்டு ஐயோ, அத விட்டாச்சே.. இதச் செய்யலேயே..! என்று நொந்து கொள்ளாதே! அது உன்னுடைய மனநிலையைத்தான் பாதிக்கும், அடுத்த தேர்வுக்குச் சரிவர தயாரிக்க விடாமல் புலம்பித் திரிய வைக்கும்.
- வினாத்தாளில் மதிப்பெண் போட்டுப் பார்க்காதே! 'அவ்வளவுதான் வரும்! இவ்வளவுதான் வரும்! என்று பதறாதே!



ஒரு தேர்வு முடிந்தவுடன் வீட்டுக்குப் போ. சிறிது நேரம் ஓய்வெடு, காலாற நட, அடுத்த தேர்வுக்கு தயாரிக்கத் தொடங்கு!




# “மனித வாழ்வு என்ற திருமடலின் பிறப்பு” புதிய நூல் வெளியீடு

**50 ஆண்டுகளுக்கு முன் புனித திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள், Humanae Vitae திருமடல் வழியே, மனித உயிர்களுக்கு வழங்கிய மதிப்பு, இன்றும் பொருள் மிக்கதாய் உள்ளது – கர்தினால் பரோலின்**

குடும்பம் என்ற அடித்தளமின்றி, மனித சமுதாயமோ, திருஅவையோ இருந்திருக்க முடியாது என்று திருப்பீடச் செயலர், கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள், வத்திக்கானில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழா ஒன்றில் கூறினார்.

“மனித வாழ்வு” என்று பொருள்படும் "Humanae Vitae என்ற திருமடலின் பிறப்பு” என்ற தலைப்பில், வத்திக்கான் பதிப்பகம் உருவாக்கியுள்ள ஒரு நூலின் வெளியீட்டு விழாவில் உரை வழங்கிய கர்தினால் பரோலின் அவர்கள், 50 ஆண்டுகளுக்கு முன் புனித திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள், தன் திருமடல் வழியே, மனித உயிர்களுக்கு வழங்கிய மதிப்பு, இன்றும் பொருள் மிக்கதாய் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

குடும்பங்கள் மற்றும், மனிதர்கள் நடுவே நிலவவேண்டிய உன்னதமான பாலியல் உறவுகள் குறித்து, புனித திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள், தன் திருமடலில் வெளியிட்ட கருத்துக்கள், அவரது காலத்தில் மட்டுமின்றி, நாம் வாழும் இன்றைய உலகிலும், பெரும் விவாதங்களை உருவாக்கி வருகின்றன என்று, கர்தினால் பரோலின் அவர்கள், தன் உரையில் எடுத்துரைத்தார்.

திருஅவை வாழ்வின் மையமாகவும் அடித்தளமாகவும் குடும்பங்கள் இருக்கவேண்டும் என்ற கருத்தை, புனித திருத்தந்தை 6 பவுல் தொடங்கி, புனித திருத்தந்தை 2ம் ஜோன்போல், முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் மற்றும் இன்றைய்த் திருத்தந்தை பிரான்சிஸ் ஆகிய அனைவரும் வலியுறுத்தி வருகின்றனர்.




1968ம் ஆண்டு, ஆடி 25ம் திகதி, புனித திருத்தந்தை 6ம் பவுல் அவர்களால் வெளியிடப்பட்ட “மனித வாழ்வு” என்ற திருமடலுக்கு பின்னணியாக அமைந்த கருத்துக்களை ஆய்வு செய்யும் வகையில், ஜில்.்.பிரெத்தோ மரெங்கோ (Gilfredo Marengo) அவர்கள் எழுதிய "Humanae Vitae என்ற திருமடலின் பிறப்பு” என்ற நூல், ஐப்பசி 18, அன்று வெளியிடப்பட்டது.

# “காலத்தின் ஞானத்தைப் பகிர்ந்துகொள்ளுதல்”

ஐப்பசி 23ம் திகதி மாலை, உரோம் நகரில் அமைந்துள்ள புனித அகுஸ்தீன் உயர் கல்வி மையத்தில், இயேசு சபையினரால் நடத்தப்படும் “லொயோலா அச்சகம்” வடிவமைத்துள்ள “காலத்தின் ஞானத்தைப் பகிர்ந்துகொள்ளுதல்” என்ற நூல் வெளியிடப்பட்டது.

உரோம் நகரில் இயங்கிவரும் Civiltà Cattolica மையத்தின் இயக்குனர், அருள்பணி அந்தோனியோ ஸ்பதாரோ அவர்கள், 30 நாடுகளைச் சேர்ந்த 250 முதியோருடன் மேற்கொண்ட நேர்காணல்களின் தொகுப்பாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

முதியோர் என்ற நிலத்தில் வேரூன்றி வளர்வது, இளையோரின் வாழ்வுக்கு மிகவும் அவசியம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறிவந்துள்ள எண்ணம், இந்நூல் அமைய வழிவகுத்தது என்று, இந்நூலின் தொகுப்பாசிரியர் ஸ்பதாரோ அவர்கள், நூல் வெளியீட்டு விழாவில் கூறினார்.

வேலை, போராட்டம், அன்பு, மரணம், நம்பிக்கை என்ற ஐந்து பிரிவுகளாக அமைந்துள்ள இந்நூலில், ஒவ்வொரு பிரிவிலும் அந்தந்த கருத்தைக் குறித்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ள எண்ணங்கள் முதலில் பதிவாகியுள்ளன என்றும், அவற்றைத் தொடர்ந்து, முதியோரின் நேர்காணல்கள் இடம்பெற்றுள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது.



இந்நூலுக்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஓர் அணிந்துரையும் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இயேசுவின் பாடுகளை இதயத்தில் கொண்டு இளையோர் வளர



பரிவுடன் பேசுதல், கண்டனம் செய்யாமல் செவிமடுத்தல், கருணையுடன் வரவேற்றல் என்ற குணங்களைக் கொண்ட அருள்பணியாளர்கள் இன்றையத் திருஅவைக்குத் தேவைப்படுகிறார்கள் என 22ம் திகதி கூறினார்.

Passionist துறவு சபையின் பொது அமர்வில் கலந்துகொண்ட ஏறத்தாழ 100 அங்கத்தினர்களை இத்திங்களன்று திருப்பீடத்தில் சந்தித்து உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அச்சபையினர் மேற்கொள்வதற்கென பரிந்துரைக்கப்பட்டிருக்கும் புதிய பாதை குறித்து தன் பாராட்டுக்களை வெளியிட்டார்.

இளைய தலைமுறைக்கு நெருக்கமாக இருக்கும் வகையில் திட்டங்களை தீட்டியுள்ளது குறித்தும், தினசரி வாழ்வின் அனுபவங்கள் வழியாக துறவு சமூகத்திற்கு பயிற்சி வழங்குவது குறித்தும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், “மறைப்பணியை புதுப்பித்தல்: நன்றியுணர்வு, இறைவாக்குரைத்தல், நம்பிக்கை” என்று, இப்பொது அவைக் கூட்டத்திற்கு எடுக்கப்பட்ட தலைப்பு பொருத்தமானது என்று கூறினார்.

“இயேசுவின் பாடுகள் உங்கள் இதயங்களில் என்றும் இருக்கட்டும்” என, இச்சபையைத் தோற்றுவித்த சிலுவையின் புனித பவுல் எடுத்தியம்பிய வார்த்தைகளையும் மேற்கோள்காட்டி உரையாற்றிய திருத்தந்தை, இன்றைய காலத்தில் தூய ஆவியாரின் செயல்பாடுகளையும், இருப்பையும் உணர்ந்தவர்களாக, காலத்தின் அறிகுறிகளை கண்டுகொள்ள முயல்வோம் என்ற அழைப்பையும் முன்வைத்தார்.

கடவுளைத் தேடிக்கொண்டேயிருக்கும் இன்றைய இளைய சமுதாயத்திற்கு, இயேசுவின் பாடுகள், இறைவன் அவர்களை தனிப்பட்ட விதத்தில் இறுதி வரை அன்புகூர்கிறார் என்பதை கற்றுக் கொடுத்து, ஊக்கம் மற்றும் நம்பிக்கையின் ஆதாரமாக இருக்கமுடியும் என Passionist துறவு சபையினரிடம் மேலும் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# இளையோருக்கும் முதியோருக்கும் இடையே உடன்படிக்கை




இன்றைய சமுதாயம் தாத்தா, பாட்டி ஆகியோரின் குரல்களை அடக்கிவிட்டது என்றும், அவர்களது அனுபவம், ஞானம் ஆகியவற்றிற்கு தகுந்த இடம் வழங்கப்படவில்லை என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒரு புதிய நூலுக்கு எழுதிய அணிந்துரையில் கூறியுள்ளார்.

ஐப்பசி 23, மாலை, வெளியிடப்பட்ட “காலத்தின் ஞானத்தைப் பகிர்ந்துகொள்ளுதல்” என்ற நூலுக்கு, திருத்தந்தை வழங்கியுள்ள இந்த அணிந்துரையைக் குறித்து, வத்திக்கான் நாளிதழ் L’Osservatore Romano, “ஒரு புதிய அரவணைப்பு - இளையோருக்கும் முதியோருக்கும் இடையே உடன்படிக்கை” என்ற தலைப்பில் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

தான் பிலிப்பீன்ஸ் நாட்டுக்குச் சென்ற வேளையில் அங்கிருந்த இளையோரும் குழந்தைகளும் தன்னை Lolo Kiko அதாவது, “தாத்தா பிரான்சிஸ்” என்று அழைத்தது தனக்கு மிகவும் மகிழ்வை அளித்தது என்று தன் அணிந்துரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வுலகில் பெருகிவரும் தூக்கியெறியும் கலாச்சாரத்திற்கு ஒரு நேர்மறையான மாற்றாக, முதியோரை தூக்கியெறிந்துவிடாமல் போற்றி வளர்ப்பது, இளையோரின் கடமை.

முதியோரை ஒதுக்கிவைப்பது, இளையோரின் தவறு என்று கூறும் திருத்தந்தை, மனக்கசப்பில், முதியோர் பலர், இளையோரை புரிந்துகொள்ளாமல் கண்டனம் செய்வதும் தவறு என்று கூறியுள்ளார்.

முதியோரின் அனுபவம் மற்றும் ஞானம் ஆகியவை, இளையோரின் கனவுகள் மற்றும் ஆர்வம் ஆகியவற்றுடன் இணையும்போது, நல்லதொரு உலகம் உருவாகும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்நூலின் அணிந்துரையில் வலியுறுத்தியுள்ளார்.

# கத்தோலிக்க வலைத்தளங்கள் ஒருங்கிணைப்பு அலுவலகம் தேவை

**நவீன கால தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, இளையோரை ஒன்றிணைத்து, நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டியதன் தேவை வலியுறுத்தப்பட்டது.**

இளையோர் ஒவ்வொருவரும், கணனி வலைதளத்தில், கிறிஸ்தவ இருப்பின் முக்கிய கதாபாத்திரமாகச் செயல்பட வேண்டும் என, ஆயர் மாமன்ற அமர்வில் விவாதிக்கப்பட்டதாக, பத்திரிகையாளர் கூட்டத்தில் கூறப்பட்டது.

கணனி வலைத்தளம் வழியாக இளையோரை நெருங்குவதற்கு மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, அதற்கென வலைத்தள அலுவலகம் ஒன்று வத்திக்கானில் நிறுவப்பட வேண்டும் என, ஆயர் மாமன்றக் கூட்டத்தில் அழைப்பு விடப்பட்டுள்ளதாக பத்திரிகையாளர்களுடன் உரையாடிய லெபனான் நாட்டு ஆயர் Joseph Naffah அவர்கள் கூறினார்.

லெபனானிலிருந்து வெளியேறி, பல்வேறு நாடுகளில் வாழும் அந்நாட்டு இளையோரை, வலைத்தளம் வழியாக ஒன்றிணைக்க, தலத்திருஅவையால் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் தொடக்கப்பட்ட அலுவலகம், இதற்கு ஒரு முன்னோடியாக இருக்கலாம் என்றார் ஆயர் யேகயா.

கத்தோலிக்க நிலைப்பாடுகளை வலியுறுத்தும் பல்வேறு வலைத்தளங்கள அங்கீகரிக்கப்பட்டு, அவற்றை ஒருங்கிணைக்கும் அலுவலகம், வத்திக்கானில் திறக்கப்பட வேண்டும் என்ற விண்ணப்பத்தையும், ஆயர் யேகயா அவர்கள், திருத்தந்தையிடம் முன்வைத்தார்.

டிஜிட்டல் கணனி உலகில் உள்ள வாய்ப்புக்களைப் பயன்படுத்தி, நற்செய்தி அறிவிப்புப் பணியை வலைத்தளங்கள் வழியே எடுத்துச் செல்ல இளைஞர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய காலம் இது என São Paulo கழகத்தின் அதிபர், அருள்பணி Valdir José De Castro பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

விவிலிய மறைப்பணிகளை இளையோருக்கு கொண்டு செல்ல, டிஜிட்டல் கணனி உலகை பயன்படுத்த வேண்டிய தேவை குறித்து கானா நாட்டு ஆயர் Emmanuel Kofi Fianu அவர்கள் விளக்கமளித்தார்.



இதே பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் கருத்துக்களை முன்வைத்த அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆய்வாளரும், குடிபெயர்வோர் மத்தியில் பணிபுரிபவருமான, Yadira Vieyra அவர்கள், இளம் வயதிலேயே குடிபெயர வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் குறித்து எடுத்துரைத்தார்.



# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்

[மத் 6:9]

பகுதி – 7

## தூய ஆவியாரைப் போற்றுவோம்

திருத்தூதர் பணிகள் நூலின் 19ஆம் அதிகாரத்தில் ஒரு விசித்திரமான நிகழ்ச்சி சொல்லப்பட்டிருக்கிறது. பவுல் எபேசு நகருக்குச் சென்றிருந்தபோது, அங்கே சில சீடர்களைச் சந்தித்தார். அவர்களது வழிபாட்டிலும், பேச்சிலும் அவருக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கவேண்டும். எனவே, அவர்களிடம் "நீங்கள் தூய ஆவியைப் பெற்றுக்கொண்டீர்களா?" என வினவுகிறார். அவர்களோ திகைப்பான ஒரு பதிலைச் சொல்கிறார்கள். "தூய ஆவி என்னும் ஒன்று உண்டு என்று கூட நாங்கள் கேள்விப்பட்டதில்லையே?" (தி.ப 19:2).

இந்தப் பதில் பவுலுக்கு அதிர்ச்சியை அளித்தது. பின்னர் அவர் அவர்களுக்குத் தூய ஆவியாரைப் பற்றி எடுத்துரைத்து, இறைவேண்டல் செய்ய அவர்களும் தூய ஆவியாரைப் பெற்றுக்கொண்டார்கள். இந்த அனுபவத்திலிருந்துதான் கிறிஸ்துவின் ஆவியைப் பெறாதவர் கிறிஸ்தவரே அல்ல. (உரோ 8:9) என்று துணிந்து மொழிந்தார் பவுல். இன்றும் நம்மிடையே இத்தகையோர் இருக்கக்கூடும். இவர்கள் தூய ஆவியாரைப் பற்றி அறிந்திருக்கின்றார்கள். உறுதிப்பூசுதல் அருளடையாளமும் பெற்றிருப்பர். ஆனாலும் தூய ஆவியாரின் முழு ஆற்றலோடும், அன்போடும் இவர்கள் இயக்கப்படுகிறார்களா என்பது கேள்விக்குறியே.

தூய ஆவியானவர் நமக்குள்ளே வாழ்கிறார், உள்ளுயிராய்த் திகழ்கிறார் என்பதை உணர்ந்து அவரோடு நெருக்கமான அன்புறவு கொண்டால்தான் நாம் தூய ஆவியாரின் ஞானத்தோடும், ஆற்றலோடும் இயங்கி, இயேசுவின் சான்றுகளாக வாழமுடியும்.

எனவே, நாம் தூய ஆவியானவரோடு நாள்தோறும் உறவாட வேண்டும். உரையாடவேண்டும், அவரைப் போற்றித் தொழவேண்டும். பொதுவாக, எந்தப் பணியையும், ஏன் வழிபாட்டையும்கூட, தூய ஆவியானவரை நோக்கி மன்றாடித் தொடங்குகின்ற பழக்கம் நம்மிடையே இருக்கிறது. அது நல்லது. அதேவேளையில், தூய ஆவியானவரைத் உதவிக்குத் தேடுபவராக மட்டுமல்லாது, நம்மோடு உறவாடும் ஓர் ஆளாகவும் பார்க்கவேண்டும். எனவே, நாள்தோறும் தூய ஆவியானவரைப் போற்றுவது, புகழ்ந்து பாடுவது இன்னொரு பழக்கமாக மாறவேண்டும்.

தூய ஆவியாரைப் போற்றுகையில் அவரது இயல்புகள், செயல்பாடுகளைப் பட்டியலிட்டு அவரைத் தொழலாம். புதிய ஏற்பாடு தூய ஆவியானவரின் பல்வேறு பெயர்களை, இயல்புகளை நமக்குத் தருகிறது. அவற்றுள் முதன்மையான சில இதோ,



1. அருள்பொழிவு செய்பவர் (1யோவா 2:20)
2. சான்று பகர்பவர் (1யோவா 5:6)
3. உண்மை (1யோவா 5:6)
4. துணையாளர் (யோவா 14:16)
5. உண்மையை வெளிப்படுத்துபவர் (யோவா 14:17)
6. நமக்குள் இருப்பவர் (யோவா 14:17)
7. கற்றுத் தருபவர் (யோவா 14:26)
8. வாழ்வுதரும் தண்ணீர் (யோவா 7:37)
9. அனைத்தையும் துருவி ஆய்பவர் (1கொரி 2:10)
10. கடவுளின் ஆழ்ந்த எண்ணங்களை அறிபவர் (1கொரி 2:10)
11. அருள்கொடைகள் அருள்பவர் (1கொரி 12:1)
12. வாழ்வைத் தருபவர் (2கொரி 3:6)
13. உன்னத வல்லமை (லூக் 24:49)
14. தந்தையால் வாக்களிக்கப்பட்டவர் (லூக் 24:49)
15. வல்லமை தருபவர் (உரோ 15:13)
16. உள்ளுயிரானவர் (உரோ 8:10)
17. அனைத்திலும் ஒத்துழைப்பவர் (உரோ 8:28)
18. கடவுளின் உயிர் மூச்சு (திவெ 11:11)
19. கனிகளைத் தருபவர் (9) (கலா 5:22)
20. வழிகாட்டுபவர் (கலா 5:25)
21. வரங்களைத் தருபவர் (7) (எசா 11:2)
22. ஞானமும் வெளிப்பாடும் தருபவர் (எபே 1:17)
23. முத்திரையிடுபவர் (எபே 1:13)
24. உறுதிப்படுத்தும் அடையாளம் (எபே 1:13)
25. என்றும் உள்ளவர் (எபி 9:14)

இவை தவிர, திருச்சபையின் மரபு மன்றாட்டான தூய ஆவியே எழுந்தருள்வீர் என்னும் செபத்தில் தூய ஆவியானவரை இன்னும் பல சிறப்புப் பெயர்களால் அழைத்துப் பெருமைப்படுத்துகிறோம்.

- பேரொளியின் அருட்சுடர்
- எளியவர் தந்தாய்
- நன்கொடை வள்ளல்
- இருதய ஒளி
- உன்னத ஆறுதலானவர்
- ஆன்ம இனிய விருந்தினர்
- உழைப்பில் களைப்பைத் தீர்ப்பவர்
- வெம்மை தணிக்கும் குளிர்நிழல்
- அழுகையில் ஆறுதலானவர்
- மாசு கொண்டதைக் கழுவுபவர்
- வறட்சியுற்றதை நனைப்பவர்
- காயப்பட்டதை ஆற்றுபவர்
- வணங்காதிருப்பதை வளைப்பவர்
- தவறிப் போனதை ஆண்டருள்பவர்

இத்தகையப் பெயர்களைச் சொல்லி அழைத்து, நாம் தூய ஆவியாரைப் போற்றுவோம், ஆற்றல் பெறுவோம்.

மூவோர் கடவுளின் மூன்றாம் ஆளான தூய ஆவியாரின் தனித் தன்மையை மறந்துவிடாமல், அவரே நம்மை இயக்குகிறார். ஆளுகிறார், ஆற்றுப்படுத்துகிறார், நமது மீட்பைத் தொடரச் செய்கிறார் என்னும் உண்மையை அனுபவமாக மாற்றுவோம். தூய ஆவியாரைத் தொழாத நாளே இல்லை என்னும் வகையில் நாள்தோறும் நாம் அவரைப் போற்றுவோம். தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவியாருக்கும் சரிநிகர் ஆராதனையும், புகழ்ச்சியும் வணக்கமும் செலுத்துவோம். விசுவாச, இறையியல் தெளிவு கொள்வோம்.

தொடரும்

## மனசாட்சி

### மனச்சான்றின் வகைகள்

**அ. முன்னோக்கு அல்லது பின்னோக்கு மனச்சான்று**

முன்னோக்கு மனச்சான்று என்பது நாம் ஓர் செயல் செய்யும் முன்பே நமக்கு உணர்த்துவது, பின்னோக்கு மனச்சான்று என்பது நாம் ஓர் செயல் செய்தபிறகு நமக்கு உணர்த்துவது. மனச்சான்று என்பது நடைமுறைக்குரிய மதிப்பீடாகும். நாம் என்ன செய்ய வேண்டும் என்ன செய்யக்கூடாது என்று உணர்த்தக்கூடியவை என்று நம் முன்னாள் திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் கூறுகிறார்.

**ஆ. உண்மையான மனச்சான்று**

நம் மனச்சான்று எப்போதும் நம் சமுதாய ஒழுங்குமுறைக்கு நீதிநெறிமுறைக்கு கட்டுப்பட்டே இருக்கும்.

**இ. பொய்யான மனச்சான்று**

உண்மைக்கு எதிராக புறனாக மனச்சான்று போவதுதான் பெய்யான மனச்சான்று. இது இரண்டு வகையில் நடைபெறுகிறது.

1. அறியாமையால் நாம் செய்யும் தவறு.

2. அதிக ஆசைகொண்டு அல்லது உணர்ச்சிவசப்பட்டு செய்யக்கூடிய தவறு. (எ.கா. கோபத்தில் பிறரை திட்டுவது அடிப்பது)

**ஈ. கண்டுகொள்ள [அ] எதிர்மறையான மனச்சான்று**

நாம் செய்த தவறை செயலை அல்லது பிறர் செய்தவற்றை கண்டுகொள்ளாமல் இருக்கும் மனநிலையாகும். இந்நிலை எப்போதும் பிறரை அழித்துவிடும்.

**உ. உறுதியான மற்றும் உறுதியற்ற மனச்சான்று**

நாம் அல்லது பிறர் செய்யும் செயலை எந்த ஒரு பயமும் இல்லாமல் மதிப்பீடுவது உண்மையான மனச்சான்றாகும். ஒரு செயல் செய்யும்போது ஒன்றைப் பற்றி மதிப்பீடு செய்யும்போது இது சரி அல்லது தவறு என்று புரியாத நிலைதான் உறுதியற்ற மனச்சான்றாகும்.

**ஊ. அலட்சிய மனச்சான்று**

நாம் செய்யும் தவறுகளை ஓர் பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல், நாம் செய்வது தவறு என்று தெரிந்தும் அதை செய்வது அலட்சிய மனச்சான்றாகும். எ.கா வகுப்புக்களை கட்டடிப்பது, தீயபழக்கங்களில் ஈடுபடுவது.

**எ. குழப்பமான மனச்சான்று**

நாம் செய்வது சரியா அல்லது தவறா என்று தெரியாமல் குழம்பி இருப்பதாகும். எ.கா கோவிலுக்குச் செல்வதா? அல்லது படத்துக்குச் செல்வதா?

**ஏ. குற்றமுள்ள மனச்சான்று**

இது ஓர் மனஞ்சார்ந்த நிலையாகும். நாம் செய்த செயல் தவறாக இருக்குமோ என்கிற குற்றப்பழி நம் மனதில் இருக்கும் நிலைதான் குற்றமுள்ள மனச்சான்றாகும். இதை தீர்க்க இதனுடைய உண்மையான காரணியை கண்டுகொள்ள வேண்டும்.

**ஐ. எல்லாவற்றையும் கடந்த இறைமையுள்ள மனச்சான்று**

ஒருவர் எல்லாவற்றையும் கடந்து தமக்காக இல்லாமல் பிறருக்காக தம்மையே முழுமையாக அர்ப்பணிப்பதாகும். இங்கு சுயநலத்திற்கு இடமில்லை. மாறாக பிறரை பிறரின் நலனை மையப்படுத்தியே வாழ்வது.

இதில் நீங்கள் எந்த வகையைச் சார்ந்தவர்கள் என்று உங்கள் மனசாட்சியைக் கேளுங்கள்.



# புனிதர்கள் அனைவரின் பெருவிழா



கார்த்திகை 1

திருச்சபையின் முதல் நூற்றாண்டுகளில் திருச்சபையால் வந்திக்கப்பட்ட புனிதர்கள் அனைவரும் வேத சாட்சிகளே. வேதசாட்சிகளிலும் அனைவரது விழாக்களும் தனித்தனியாக கொண்டாடப்படுவதில்லை. வேதசாட்சிகளைத் தவிர ஏராளமான புனிதர்களும் மோட்சத்தில் புனிதர்களாக பேரின்ப பாக்கியம் அனுவித்து வருகிறார்கள்.

இன்று நாம் மோட்சத்தில் இருக்கும் புனிதர்கள் அனைவரையும் நினைவு கூர்கின்றோம். அவர்களது மகிமையையும் மாட்சிமையையும் திருச்சபை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. புனிதர் பட்டம் பெற்றவர்கள் மட்டுமல்ல, எண்ண முடியாத வேறு நீதிமான்களையும் நாம் காண்கிறோம். அவர்கள் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் வாழ்ந்தவர்கள். அவர்கள் கடவுளைப் புகழ்கிறார்கள். கடவுளுடைய செம்மறியானவரையும் அவர்கள் வாழ்த்துகிறார்கள். இந்த நம் சகோதரர்களுடன் நாமும் கூடி மகிழ்வோம். புனிதரின் சமூக பிரயோசனத்தால் இவர்களுடன் நாம் தொடர்பு கொண்டிருக்கிறோம்.

மோட்சத்திலிருக்கும் புனிதர்களுடன் தேவபயத்துடன் வாழ்வதுடன் கடவுளது கட்டளைகளை அனுசரித்து நடக்க வேண்டும். எளிய மனத்தோராய் சாந்த குணம், வேதனைகளில் பொறுமை, நீதி, அனுதாபம், கற்பு, துன்பங்களில் சகிப்பு என்னும் புண்ணியங்களை அனுசரிக்க வேண்டும். நமது உழைப்புகளிலும் பிரச்சனைகளிலும் இயேசுவிடமே இளைப்பாற்றி காணவேண்டும்.

***சிந்தனை:***

**இறந்த முன்னோர் அனைவரும் மோட்சத்தில் புனிதர்களாகத் திகழ்கிறார்கள். புனிதர்களின் சமூக பிரயோசனத்தினால் நாம் அவர்களோடு உறவு கொண்டிருக்கின்றோம். இந்த உறவைப் பயன்படுத்துவோம். அடிக்கடி அவர்களது உதவியைத் தேடுவோம்.**

# லாத்தரன் பேராலய அபிசேகம்



கார்த்திகை 09

நீரோ மன்னன் நாட்டை ஆண்டு வந்த காலத்தில் அவனுக்கு விரோதமாக ஒரு சதி நடைபெற்றது. அதில் சம்பந்தப்பட்டவர்கள் யார்யாரெண்டு நிச்சயமாக யாருக்கும் தெரியாது. மன்னன் பிளவுத்துஸ்லாத்தரானுஸ் என்பவரை சந்தேகிக்கலானான். அவரை சாவுக்குத் தீர்ப்பிட்டான். அவரது சொத்தைப் பறித்துக்கொண்டான். 312 ஆம் ஆண்டில் கொன்ஸ்தாந்தின் என்னும் பேரரசர் அந்த சொத்தை உரோமை ஆயருக்கு அன்பளிப்பாக கொடுத்தார். புனித சில்வெஸ்தர் என்னும் திருத்தந்தை அந்த இடத்தில் ஓர் ஆலயம் அமைத்தார். நம் இரட்சகருக்கு அதனை அர்ப்பணம் செய்தார். (904-911) திருச்சபையை ஆண்டு வந்த 3ஆம் செர்ஜியுஸ் என்னும் திருத்தந்தை அந்தக் கோயிலைத் திரும்பக்கட்டி இரட்சகருடைய பெயருக்கு புனித திருமுழுக்கு யோவான், நற்செய்தியாளரான புனித அருளப்பர் இவர்களது பெயர்களையும் சேர்த்துக் கொண்டார். உரோமையிலுள்ள கோயில்கள் அனைத்துக்கும் இது தாய்க்கோவிலாகும்.

இறைவனது ஆலயத்தை நாம் வந்திப்பது தகுதியே. ஏனெனில் அது மோட்சத்தின் வாசல், கடவுளின் உண்மையான வீடு, செபத்தின் இடம், கடவுள் அதில் வசிக்கிறார். வசித்து நமது கண்ணீரைத்துடைக்கின்றார். துன்பம், வேதனை சாவினின்று நம்மைக்காக்கிறார். கோவிலானது கிறிஸ்தவனது ஆன்மா.

நம் ஆண்டவர் சக்கேயு என்பவரது இல்லத்துக்குச் சென்று அங்கு தங்கி இரட்சணியத்தை அவ்வீட்டாருக்கு அளித்ததுபோல் தமது வீடாகிய கோவிலில் சகல வரங்களையும் நமக்கு அளிக்கிறார்.

# நீர் என்னோடு இருக்கின்றீர்



இயேசுவே எனக்கு இங்கு
யாருமே இல்லை
நான் இன்று தனிமையில்
வாடுகின்றேன்
நாலா பக்கங்களிலும்
இன்னல்கள்
நான்கு திசைகளிலும் தூ
ற்றல்கள்
நாளும் கேட்டு என் மனம்
வாடி நிற்கின்ற கோலங்கள்

அன்னை தந்தை என்னை
புரிந்துக் கொள்ளவில்லை
எனக்கோ.....
ஆருயிர் நண்பர்கள் கூட இல்லை
உறவுகள் என்னை வெறுக்கின்றது
உளமெலாம் வெந்து
புண்ணாகின்றது
இயேசுவே,
யாரிடம் நான் செல்வேன்
என் மன வேதனை யாரிடம் போய்
சொல்வேன்.

என் மனதிலோ ஆயிரம்
ஆசைகள்
எதையுமே நிறைவேற்ற முடியாத
அவலமான நிலமைகள்
வெளியில் சிரிக்கின்றேன்
உள்ளே தினம் அழுகின்றேன்
எனை சுற்றி எல்லாம் இருக்க
தனிமையை மட்டுமே
உணர்கின்றேன்
இயேசுவே, அன்பான தெய்வமே

உம் அன்பால் எனை தேற்ற
வாருமே
யார் என்னை வெறுத்தாலும்
நீர் என்னை அன்பு செய்கின்றீர்
இயேசுவே,

யார் என்னை விட்டு விலகிச்
சென்றாலும்,
யார் என்னைப் பார்த்து
நகைத்தாலும்
நீர் என்னை அன்பு செய்கிறீர்
எனவே இன்று நான்
தனிமையாக இல்லை
இனி என்றுமே எனக்கு
தனிமையும் இல்லை.
ஏனெனில், 'இயேசுவே'
நீர் என்னோடு
இருக்கின்றீர்.

P.M. மேரி பெனடிக்கா
பென்றித், அவிசாவளை

# புனித மார்டின் தெபொரெஸ்

கார்த்திகை 03



இவர் தென் அமெரிக்காவின் பெரு நாட்டில் உள்ள லீமா நகரில் பிறந்தார். இவருடைய தந்தை ஸ்பெயின் நாட்டை சேர்ந்தவர். இவருடைய தாய் விடுதலையடைந்த நீக்ரோ பெண். இவர் பிறந்ததும் தந்தை தன் மனைவியையும் மகளையும் கைவிட்டுச் சென்றார். மார்ட்டின் தரித்திரத்தில் வளர்ந்தார். ஏழைகள் மீதும் துன்புற்றோர் மீதும் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார். பன்னிரண்டு வயதில் ஒரு வைத்தியரிடம் வேலைக்குச் சென்றார். தமது சம்பளத்தில் ஒரு பகுதியை மருத்துவமனைகளிலும், சிறைகளிலும் இருந்த ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பார்.

பதினைந்தாவது வயதில் இவர் புனித சுவாமிநாதரது சபையில் சேர்ந்து பிறர் மீது அன்பு, கீழ்ப்படிதல், தாழ்ச்சி என்னும் புண்ணியங்களில் சிறந்து விளங்கினார். இதைக் கண்ட குருக்கள் இவரைத் துணைச் சகோதரராக்கினார்கள். இரவில் பல மணி நேரமாக இவர் ஞான நூல்களைப் படிப்பார். செபிப்பார், தவமுயற்சிகள் செய்வார். புதுமைகள் செய்யும் வரத்தை கடவுள் இவருக்கு அளித்திருந்தார். இதை மறைக்க முயன்ற போதிலும் இவர் புனிதரென மக்கள் வெகு சீக்கிரம் அறிய வந்தார்கள். "சமாதானத்தின் தூதன்" "இரக்கத்தின் சம்மனசு" என இவரை அழைப்பார்கள். நோயாளிகளைத் தொட்டு அவர்களுக்காக செபித்து அவர்கள் மீது சிலுவை அடையாளம் வரைவார். உடனே சுகம் கிடைக்கும். வரும் காரியங்களை முன்னறிவிப்பார். சில சமயங்களில் இவர் ஓர் இடத்தில் இருந்தும் பிறர் கண்ணுக்குத் தென்பட மாட்டார். மனிதரின் உள்ளங்களின் இரகசியத்தை அறிவார். தொலைவில் இருப்பவர்களின் வெளிப்படாத விருப்பங்களையும் அறிந்து கொள்வார். லீமா நகரை விட்டு அவர் ஒரு போதும் கிளம்பியதே இல்லை என்றாலும் மெக்சிகோ, அல்ஜியேர்ஸ், பிரான்ஸ், பிலிப்பைன்ஸ் தீவுகள், சீனா, ஜப்பான் முதலிய இடங்களில் இவர் தோன்றி நோயாளிகளுக்கும் துன்புற்றோருக்கும் துணை புரிந்திருக்கிறார். இவர் அருகில் வானதூதர்கள் இருப்பதை சன்னியாசிகள் பார்த்திருக்கிறார்கள். இவர் பரவசத்தில் இருக்கையில் ஓர் அபூர்வ ஒளி இவரைச் சூழ்ந்திருப்பதை கண்டிருக்கிறார்கள். குருக்களிடம் திரு அருட்சாதனங்களை பெற விசுவாசிகளை இவர் நன்கு தயாரிப்பார். ஸ்பெயின் நாட்டினர், நீக்ரோக்கள், இந்தியர்கள் ஆகியோர் அனைவருக்கும் சேவை செய்தார். ஒவ்வொரு நாளும் ஏறக்குளைய 160 ஏழைகளுக்கு உணவு கொடுப்பார். பணக்காரர்களிடமிருந்து உதவி பெற்று வாரந்தோறும் 20,000 ரூபாய் பெறுமதியுள்ள பொருட்களை ஏழைகளுக்கு வழங்குவார். சிலுவைப் பள்ளி இவரது முயற்சியால் தொடங்கப்பட்டது. இவர் தமது 60வது வயதில் இறந்தபோது லீமாநகர் மக்கள் அனைவருமே துக்கம் கொண்டாடினார்கள். இரு ஆயர்களும் பெருநாட்டின் வைஸ்ராயும், அரசாங்க உயர் அதிகாரி ஒருவரும் இவரது பிரேதப்பெட்டியை தூக்கிச் சென்றார்கள். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு பின்னும் இவரது உடல் அழியாமல் இருந்தது.

***சிந்தனை:***

**பிறருக் சேவை செய்வதில் எல்லையற்ற ஆனந்தம் காணவேண்டும்.**

## 01 இறைப்பணியாளரான...

கடந்த 27ம் திகதி தேவத்தை இலங்கை அன்னை தேசியத் திருத்தலத்தில் இடம்பெற்ற திருப்பலியின் உரையில் குறிப்பிட்டிருந்தார். கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை இந்நிகழ்வில் தலைமைத் தாங்கியதுடன், துணை ஆயர்களான மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை, மேதகு ஜெ.டீ. அந்தனி ஜெயகொடி ஆண்டகை, இறைப்பணியாளரான கர்தினால் குறே ஆண்டகையை புனித நிலைக்கு உயர்த்தும் ஆணைக்-குழுவின் செயலாளரான அருட்பணி. ப்லெசிடஸ் டீ சில்வா அடிகளாரும் கலந்து கொண்டனர். ஓய்வுபெற்ற பேராயரான அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை உள்ளிட்ட ஏனைய ஆயர்களும், குருத்துவ, துறவறத்தினர்களும், பொதுநிலையினரும் இதில் பங்குபற்றியதுடன் பாடசாலை பிள்ளைகள் 100க்குத் தேவையான பாடசாலை பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

**தகவல் : C.R. டிக்சன் என்டனி, ஹோஷான் பிரதீப்**

## 01 தேவமாதா

தேவத்தை இலங்கை அன்னை திருத்தலத்தில் இடம்பெற்ற உயர்மறைமாவட்ட செபமாலை ஒன்றுகூடலின்போது தெரிவித்தார். இந்நிகழ்வில் உயர்மறைமாவட்ட துணைஆயர் மேதகு. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை தலைமை தாங்கினார். "எமது கத்தோலிக்க திருச்சபையானது எமது விசுவாசம், குடும்பம், பிள்ளைகள், எமது குருவானவர்கள் ஆகியோரை சீர்குலைக்கும் அலகையின் செயல்களில் இருந்து எம்மை பாதுகாக்க எம் தேவ அன்னையே இறைவனிடம் பரிந்துரை செய்கின்றார். கொழும்பு உயர்மறைமாவட்ட மரியாயின் சேனையின் சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கில மொழிபேசும் மரியாயின் சேனைக்குழு அங்கத்தவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வில் இச்சபையின் இயக்குனர் அருட்பணி. பொன்சியூஸ் டோனி பெரேரா அடிகளாரின் வழிநடத்தலின் கீழ் இடம்பெற்றது. தேவத்தையில் புனித யோசேவ்வாஸின் சுரூபத்தின் அருகில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இப்பவனி தேவ அன்னையின் திருச்சுரூபத்தின் அண்டை வரைக்கும் பவனி சென்றதுடன் அதன்பின் இடம்பெற்ற திருப்பலியில் கிடைக்கப்பெற்ற காணிக்கைகள் களுத்துறை மார்க்ஸ்ரீ நிறுவனத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

**தகவல் : T. சுனில் பர்னாந்து, ஹோஷான் பிரதீப்**

## 01 புனித அக்குவைனாஸ்...

மேலும் கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் பீடாதிபதியாக இயங்கும் இந்நிறுவனத்தின் மூலம் வருடாந்தம் உயர்கல்விகளைப் பெற்றுக்கொள்வதற்கு மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லாமல், எம் இலங்கை நாட்டிலேயே இவ் உயர்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை எம் கர்தினால் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் எனவும், இந்நாட்டின் சமாதானம் மற்றும் ஒருமைப்பாட்டை நிலைநாட்டும் சிறந்த தலைவராக செயற்படும் அவரது உயரிய பணிக்கு பாராட்டுவதாகவும் குறிப்பிட்டார். கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் டிப்ளோமா சான்றிதழ்களை கர்தினால் ஆண்டகை வழங்கியதோடு உபபீடாதிபதியாகிய அருட்பணி. சுசித் சில்வா அடிகளார் வருட அறிக்கையை சமர்ப்பித்தார்.

**தகவல் : T. சுனில் பர்னாந்து, ஹோஷான் பிரதீப்**

## 01 கொழும்பு...

### 2019 – புதிய மறைப்பணியாளர் விண்ணப்பப்படிவம்

2019ம் ஆண்டில் மறைப்பணியில் இணையவிருக்கும் புதிய பணியாளர்களுக்கான விண்ணப்பப்படிவத்தை நடுநிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவம் ஒப்படைக்கப்படும் இறுதி நாள் 2019 தை மாதம் 10ம் திகதி. புதிய மறைப்பணியாளர்களுக்காக பரீட்சைக்குரிய பாடத்திட்டமானது விரைவில் பங்குகளுக்கு அனுப்பி வைக்கப்படும். இப்பரீட்சைக்கான வகுப்புக்களை மறைக்கல்வி பணியகம் ஒழுங்கு செய்யும். பரீட்சை தை மாத இறுதியில் நடைபெறும்.

**அதி. வண. மனோகுமாரன் நாகரட்ணம்**
**மறைக்கல்வி இயக்குனர், ஆயர் இல்லம்.**

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com

## 09 இறந்தோர் வாழ்வு...

என்றாலும், இறைவனோடு ஏற்கனவே இருக்கிறார்கள் என்பதைத்தான் திருச்சபை நமக்குச் சொல்கின்றது. "இயேசு இறந்து உயிர்த்தெழுந்தார் என நாம் நம்புகிறோம். அப்படியானால், இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார்" (1தெச 4:14) "எனவே, இவ்வார்த்தைகளைச் சொல்லி ஒருவரை ஒருவர் தேற்றிக் கொள்ளுங்கள்" (1தெச 4,18) என்ற பவுலடிகளாரின் போதனை, நம்மை அன்பு செய்தவர்களை இழந்து தவிக்கும் நம் நெஞ்சங்களுக்கு ஆறுதலாக இருக்கிறது.

### முடிவாக இறப்பினும் வாழ்வோம்.

கிறிஸ்தவ நம்பிக்கையில், ஒருவருக்கு அவரது இறப்பினால் அவருடைய வாழ்வு மாறுபடுகிறதேயன்றி முடிவடைவதில்லை. இதற்கு அடிப்படையாக இருப்பது கிறிஸ்து நிகழ்வே. கிறிஸ்து ஆண்டவர் சிலுவையில் இறந்தார். ஆனால் இறந்த மூன்றாம் நாள் அவர் கூறியபடியே உயிர்த்தெழுந்தார் (லூக் 24, 5-7). எனவே கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்ட நம் அனைவரையும் அவரே இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வார். (யோவா 6:44) என்ற நம்பிக்கையில் மகிழ்ச்சியோடும், அன்போடும், எதிர்பார்ப்புகளோடும் இவ்வுலகில் நாம் வாழ்ந்து வருகிறோம்.

## XVIII இலத்தீன், அமெரிக்க...

பெற்றுவருகின்றனர் என்றும், திருத்தந்தைக்கு அனுப்பப்பட்டுள்ள இச்செய்தி கூறுகிறது. தீமையையும், வன்முறையையும் அகற்றி, சுயநலம், பகைமை, சகிப்பற்ற நிலை போன்ற சுவர்களைத் தகர்த்து, புதிய உலகைக் கட்டியெழுப்பும் பயணத்தில், இயேசு தங்களுடன் இணைந்து நடக்கிறார் என்ற உறுதிப்பாட்டுடன் தாங்கள் செயல்படுவதாக, இளையோர் இச்செய்தியில் கூறியுள்ளனர். செபத்தாலும், அருள் அடையாளங்களாலும் சக்தி பெற்றவர்களாக, அச்சமின்றி, வறியோர் மீது அன்பு கொண்டவர்களாக, அமைதி, மற்றும் ஒற்றுமையின் தூதர்களாக அவரவர் சமுதாயத்தில் செயல்படுவோம் என்று, இலத்தீன் அமெரிக்க, மற்றும் கரீபியன் இளையோர், இச்செய்தியின் வழியே, திருத்தந்தைக்கு உறுதியளித்துள்ளனர்.

## XVII மார்க்ஸ்ரீ இல்லம்..

அனைவருக்கும் இறையாசீர் உரித்தாகுக!
அருட்பணி பிரசன்ன கிறிஸ்டோபர் பெரேரா.
தொ.பே. 0777922009 - 0342223363 /
Email:marcsrihomes@gmail.com

ஹெட்டியாராய்ச்சிகே ஜூலியன் பீட்டர் திசேரா
பிறந்த நாள் - 1946-02-16
கிராமம் - கம்பஹா, ஜா-எல, மாகவிட
பாடசாலை - மாகவிட றோமன் கத்தோலிக்க பாடசாலை
குருமட வாழ்க்கை
பொரளை புனித அலோசியஸ் குருமடம்
அப்புத்தலை, ஹாவடன் குருமடம்
அம்பிட்டிய தேசிய குருமடம்
குருத்துவ திருநிலைப்படுத்தல்

ஹல்பே பங்கின் உதவிப் பங்குத் தந்தையாக தம் குருத்துவப் பணியை ஆரம்பித்த அருட்பணி ஜூலியன் திசேரா அவர்கள் ஆறு மாதம் பணியாற்றினார். பின்பு தோப்பு பங்கில் பங்குத் தந்தையாகவும், புதிய சிங்கள மொழி பாடசாலையை ஆரம்பிப்பதற்கும் முன்னின்றார். அதனைத் தொடர்ந்து களுத்துறை வட்டாரத்தில் களமுல்ல பங்கில் பணியாற்றினார். அத்தருணத்தில் திருமதி. ரீட்டா பெரேரா அவர்களின் மரணத்திற்கு பின்பு "மார்க்ஸ்ரீ இல்லத்தின்" பணிகளுக்கு பங்களித்த அவர் 1989ல் இவ் இல்லத்தின் இயக்குனராக இருந்த நிலையில் மரணமடைந்தார்.

இவர் சுகதிபுர திட்டம், ஜூட்பியகம எனும் வீடமைப்பு திட்டங்களையும் 2004 சுனாமியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்து கொடுத்தும் அளப்பரிய பணியாற்றினார். களுத்துறை வட்டாரத் தலைவராகவும் பலவறான பணியில் ஈடுபட்டார். திருமதி. ரீட்டா பெரேரா அவர்களுடன் சேர்ந்து அவ் வீடமைப்பு திட்டங்களில் கடந்த 30 வருடங்கள் பங்கேற்றார். இவர் ஆன்மீகத்தில் சிறந்து விளங்கியதுடன் சகோதர அன்புடன் அனைவருடனும் செயற்பட்டார். மார்க்ஸ்ரீ குடும்பத்தை நல்ல முறையில் வழிநடத்திய இன்னார் 2017 கார்த்தகை மாதம் 06ம் திகதி காலமானார்.

## 02 மரியாயின் சேனை..

சம்பவங்கள் கவர்ச்சிகரமாகச் சித்தரிக்கப்பட்டிருந்தமையும், சிறப்பானதாகும். மேலும் அன்றையதினம் சிறுவர் இல்லங்களிற்கான பால்மா, உணவுப்பொருட்கள் பெருமளவில் வழங்குவதற்கும், திருயாத்திரையில் பங்குகொண்டவர்களுக்கான தாகசாந்தி வழங்கும் ஏற்பாடும் சேனையாளர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

**தகவல் : தங்கராஜா**

ORDER OF FRIARS MINOR
# பிரான்சிஸ்கன் சபை

**"கடவுளே நான் உமக்கு என்ன செய்ய விரும்புகிறீர்?"**




கல்விப்பொதுத்தராதரத்தில் சித்தியடைந்தவர்களும், கற்றுக் கொண்டிருப்பவர்களுமான ஆண்கள் எளிமையான குழு வாழ்வை விரும்பினால் பின்வரும் இலக்கத்துடன் தொடர்புகொண்டு பிரான்சிஸ்கன் சபையில் இணையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அழைத்தலின் இயக்குனர்: பிரானசிஸ்கன்**
**284, பகலவெலவீதி தலங்கம தெற்கு**
**பத்தரமுல்ல. தொ.பே. 0764500607**
(N 3778)

# சாரதி தேவை

வயது 50-70, கருணை இல்லம் (Home of Compassion) இரு மொழிகளும் தெரிந்தவர் விரும்பத்தக்கது.
**இல. 201/1 மஹாவத்தை வீதி, கொழும்பு 14.**
**நேரடித் தொடர்பு தொ.பேசி எண் 0112522893**
(N3637)

# பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி வேலை செய்ய பணிப்பெண் தேவை. தலவத்துகொடை, பன்னிப்பிடியில் அமைந்துள்ள வீடொன்றிற்கு 40-60 வயதிற்குட்பட்ட தங்கி வேலை செய்யும் பணிப்பெண் ஒருவர் தேவை.
**விபரங்களுக்கு : 0762391919, 0773779122**
(N 3889)

## XX பொன்விழாக்...

அருட்சகோதரிகளுக்கு மாபெரும் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் பெற்றுத்தந்துள்ளனர் எனலாம். இவ்வாறான விழாவினைக் கொண்டாடுவதனால் இளம் சந்ததி சகோதரிகளை இறைபணி புரிய இறைவன்பால் ஈர்த்துச் செல்கிறது என்பதனை மறுக்க முடியாது. அருட்சகோதரிகளின் வார்த்தைப்பாட்டை புதுப்பிக்கும் திருப்பலியினை இரத்தினபுரி ஆயர் மேதகு. கிளிட்டஸ் பெரேரா (OSB) ஆண்டகையும், முன்னைய (இளைப்பாறிய) யாழ் ஆயர் மேதகு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையும் இணைந்து ஒப்புக்கொடுத்தனர். கூடவே அருட்பணியாளர்களும், அன்பின் அருட்சகோதரிகளும், உற்றார் உறவினர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் கலந்துகொண்டு தமது ஆசியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டனர்.

அன்பின் அருட்சகோதரிகளே! பொன்விழா தியாக நாயகிகளே! தாங்கள் இன்னும் மேலான, புனிதமான சேவைகள் நிறைய புரியவேண்டும். ஐம்பது ஆண்டுகள் பணிபுரிந்த மனநிறைவுடன் இறைவனை மகிழ்வித்துள்ளீர்கள். அந்த மன மகிழ்வுடன் தொடர்ந்து இறைபணிபுரியவும், நோய்நொடியின்றி நலமுடன் வாழவும் இறையருள் வேண்டுகின்றோம். செபிக்கின்றோம்.

**"AD MULTOS ANOS"**

**தொகுப்பு : மேரி இருதயநாதன் (மறையாசிரியர்)**
**பேராலயம், இரத்தினபுரி.**

## XX சகலருக்கும்...

திருப்பலியை ஒப்புக்கொடுப்பதற்காக அருட்பணி. S. பாலேந்திரன் CR அடிகளார் விசேடமாக அழைக்கப்பட்டிருந்தார். திருநாள் திருப்பலியை ஒப்புக்கொடுக்க அருட்பணி. மரிய ஜோய் அடிகளாரும் இணைந்துகொண்டார். இறுதியாக அன்னையின் திருச்சுரூபம் தேர் பவனியாக நடைபெற்றது. பேராலய பங்குத்தந்தை அருட்பணி. எனஸ்லி சுரங்க அடிகளாரும் கலந்துகொண்டார். இரத்தினபுரி கன்னியர் மடத்தின் அருட்சகோதரிகளும் கலந்துகொண்டு திருநாளை சிறப்பித்தனர். அருட்சகோதரி ஜெனற்றா அவர்கள் பாடல் குழுவினரை வழிநடத்தி விழாவுக்கு ஊக்கமளித்தார்.

புனித சதா சகாய அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**தொகுப்பு : மேரி இருதயநாதன் (மறையாசிரியர்)**
**பேராலயம், இரத்தினபுரி.**




# குடை...! மிளகாய் ...!

## கலர்ஃபுல் டேஸ்ட்ஃபுல் ஹெல்த்ஃபுல்!



பச்சை, சிவப்பு, மஞ்சள் என விதம் விதமான நிறங்களில் கண்ணைக் கவரும் குடைமிளகாய் டேஸ்ட்டியானதும்கூட என்பது தெரியும்தான். ஆனால், அவற்றால் என்னென்ன பலன்கள் இருக்கின்றன என்று உணவியல் நிபுணர் யசோதா பொன்னுசாமியிடம் கேட்டபோது, அவர் என்ன சொல்கிறார் தெரியுமா...?

### குடை மிளகாயின் நிறத்துக்கேற்றவாறு பலன்களும் மாறுமா?

“குடை மிளகாய் பச்சை, சிவப்பு, மஞ்சள், ஆரஞ்சு, பர்பிள், பிரவுன் மற்றும் கருப்பு ஆகிய நிறங்களில் கிடைக்கிறது. இவற்றின் பலன்கள் ஏறக்குறைய ஒன்றுதான் என்றாலும் சிவப்பு குடை மிளகாயில் Lycopene என்ற கரோட்டினாய்டு உள்ளதால் ப்ராஸ்டேட், கருப்பை வாய், சிறு நீர்ப்பை மற்றும் கணையப் புற்றுநோயினால் ஏற்படும் ஆபத்தைக் குறைக்க உதவும். மேலும் சிவப்பு குடை மிளகாயில் Lutein அளவு அதிகமாக உள்ளது என்று ஓர் ஆராய்ச்சியில் கூறப்படுகிறது. லூட்டின் நமது கண் ஆரோக்கியத்துக்கு மிகவும் தேவையான கரோட்டினாய்டு, பச்சை குடை மிளகாயிலும் லூட்டின் மற்றும் Zeaxanthin தேவையான அளவு உள்ளது.”

### குடை மிளகாயில் என்னென்ன சத்துக்கள் உள்ளன?

“குடை மிளகாயில் வைட்டமின் சி, ஏ, பி6, பி2, பி1, பி3, ∴போலேட், பேண்டோதெனிக் ஆஸிட், வைட்டமின் ஈ, பொட்டாசியம், சோடியம், கால்சியம், வைட்டமின் கே, வைட்டமின் சி, பாஸ்பரஸ், மக்னீசியம் மற்றும் நார்ச்சத்துக்களும் உள்ளன.”

### குடை மிளகாயின் மருத்துவ குணங்கள் என்ன?

“குடை மிளகாய் நரம்பு தொடர்பான எல்லா பிரச்சினைகளுக்கும் பயனுள்ளதாக உள்ளது என்று சில ஆராய்ச்சிகள் தெரிவிக்கிறது. குடை மிளகாயில் இருக்கும் Capsaicinஇல் நிறைய மருத்துவ குணங்கள் உள்ளன. அவை கிருமிகள் மற்றும் புற்றுநோயை எதிர்க்கும் சக்தியைக் கொண்டுள்ளது. நீரிழிவைக் கட்டுப்படுத்துகிறது. இதில் Cayenne என்னும் வேதிப்பொருள் பலவிதமான உடல் வலியைக் குறைக்கும் நிவாரணியாகவும் இருக்கிறது. விட்டமின் சி மற்றும் பீட்டா-கெரோ இணைந்து இருப்பதால் ஆரோக்கியமான கொலஸ்ட்ராலுக்கு உதவி செய்கிறது. மேலும் வாதம் தொடர்புடைய நோய்கள், வயிற்றுப்புண், மலச்சிக்கல் போன்றவைகளுக்கு எதிராக செயல்படுகிறது. கீமோதெரபி, ரேடியோ தெரபி போன்ற சிகிச்சைகளை மேற்கொள்ளும்போது வாய்ப்புண், பல் வலி, மலேரியா, மஞ்சள் காமாலை வராமல் தடுக்கிறது.”

### குடைமிளகாய் எல்லா வயதினருக்கும் ஏற்றதா?

“குடை மிளகாயில் எரிச்சலூட்டும் கார நெடி மிகவும் குறைந்த அளவிலேயே உள்ளது என்பதால் எல்லா வயதினரும் சாப்பிடலாம். அதனுடைய விதை மற்றும் உள்பகுதியில் Capsaicin உள்ளதால் வாய், நாக்கு, தொண்டையில் எரிச்சலூட்டும் தன்மை இருக்கும். அவ்வாறு இருந்தால் தயிர் போன்ற குளுமையான பொருள்களை சாப்பிட்டால் காரத்தின் வீரியத் தன்மையை குறைத்து வயிற்றுப் புண் ஏற்படாமல் இருக்கும். போதுமான ஆராய்ச்சிகள் இல்லாததால் சிறு குழந்தைகளுக்குக் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. குறிப்பாக 2 வயதுக்குள்பட்ட குழந்தைகளுக்குக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.”

### குடைமிளகாயை எப்படி சமைக்கலாம்?

“குடை மிளகாயை அதிகம் தீயில் வாட்டினால் அதன் முழு சத்தும் போய்விடும். புலாவ், சட்னி, துவையல், சாலட், பஜ்ஜி, சாண்ட்விச் போன்ற வழிகளில் பயன்படுத்தலாம். இதன்மூலம் ருசியும் குறையாது. அதில் இருக்கும் முழு சத்தையும் பெற முடியும்.“

### குடை மிளகாய் தொடர்ந்து சாப்பிட்டால் அல்சர் வருமா?

“அல்சர்∴ வயிற்றுப் புண் உள்ளவர்கள் குடைமிளகாய் உண்ணும் அளவை குறைத்துக் கொள்ளுதல் இல்லையெனில் தவிர்த்தல் நல்லது. இதற்கு முழுக்காரணம் Capsaicin மட்டும் காரணமாக இருக்க முடியாது. வேறு சில காரணங்கள் அல்லது பழக்க வழக்கத்தினால் கூட அல்சர் வரலாம் என்று ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. மொத்தத்தில் குடை மிளகாயை தினமும் உணவில் சேர்த்துக் கொள்வது நலம்.”

நன்றி: இணையம்




# மார்க்ஸ்ரீ இல்லம்

“மார்க்ஸ்ரீ” இல்லமானது திருமதி ரீட்டா பெரேரா என்பவரின் கொடை உள்ளத்தினால் களுத்துறையில் ஸ்தாபிக்கப்பட்டது. அவரது கணவரின் மரணத்திற்குப் பின்பு இரக்கச் செயல்களில் ஈடுபட்டார். அவரிடம் உதவி கேட்டு வரும் எவருக்கும் உதவி செய்யக்கூடிய தாராள மனத்துடன் செயற்பட்டார். எனவே, இவ்வில்லம் “Macsri” இல்லம் என பெயர்கொண்டது. (கணவன் Marc மற்றும் மனைவி Rita என்பவர்களின் பெயர்களை ஒன்று சேர்த்து “Marcsri” எனும் பெயர்பெற்றது). இவர் வைத்தியசாலைகளிலுள்ள எளியவர்களை பார்வையிடச் செல்வார். நன்கொடையாளர்களின் உதவியினால் பெரும் பொருட்களைக் கொண்டு அவ் ஏழை எளியவர்களுக்கு உணவு சமைத்துக் கொடுத்தார்.

ஒரு நாள் வைத்தியசாலையில் இருந்து வந்த ஒருவருக்கு தங்குவதற்கோ, போவதற்கோ இடம் இல்லாதிருந்த போது அவரை அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். இதுவே, “MARCSRI HOME” என்பதை 1983ல் ஆரம்பிப்பதற்கான முதற் சம்பவமாக இருந்தது. அன்று அருட்பணி ஜூலியன் திசேரா என்பவர் கட்டுகுருந்த, களுத்துறை எனுமிடத்தில் பங்குத்தந்தையாக இருந்ததோடு, இவரின் இவ் இரக்கச் செயல்களுக்கு அவரது பங்களிப்பை வழங்கினார். இவ் அருட்தந்தை இளைஞர்களின் குழுக்கள் மற்றும் ஏனையோரது உதவிகள் மூலம் அப்பிரதேசத்தில் இவ்வாறான இல்லங்களை உருவாக்கப் பாடுபட்டார். இவரது இவ் அர்ப்பணச் செயல்களால் இவ் “மார்க்ஸ்ரீ இல்லத்திற்கு” பொறுப்பான அருட்தந்தையாக விளங்கினார்.

***திருமதி. ரீட்டா அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இல்லங்கள்***

- மார்க்ஸ்ரீ இல்லம்:- இல. 26 பு.செபஸ்தியார் வீதி, கட்டுக்குறுந்து, களுத்துறை (சித்த சுவாதீனமுற்ற பிள்ளைகள், வயதுவந்தோர் மற்றும் முதியோர்கள் - 63 பேர்கள்)
- கர்தினால் குறே இல்லம். புனித செபஸ்தியார் வீதி, கட்டுக்குறுந்து, களுத்துறை - சித்த சுவாதீனமற்ற இளைஞர்கள் - 19 பேர்
- புனித. தெரேசா இல்லம். இல. 38, புனித செபஸ்தியார் வீதி, கட்டுக்குறுந்து, களுத்துறை - சித்த சுவாதீனமற்ற யுவதிகள்
- மார்க்ஸ்ரீ இல்லம். அர்த்துறு குணத்திலக மாவத்தை, களமுல்ல, களுத்துறை - சித்த சுவாதீனமற்ற யுவதிகள்
- “Mama papa இல்லம்” வடுகொட வீதி, கலாமுல்லை, களுத்துறை - சித்த சுவாதீனமற்ற பிள்ளைகள்
- புனித. மரியாள் இல்லம். பு. மரியாள் வீதி, குடா பயகால்ல, வீட்டார் ஆதரவற்ற முதியோர்கள்.
- புனித எல்பிரட் இல்லம், பொல்கொட்டுவ, காலிவீதி, பேருவலை - முதியோர்கள்
- புனித அன்னம்மாள் இல்லம். மேர்வின் குறே வீதி, வாதுமை, முதியோர்
- புனித மார்ட்டின் இல்லம். கயித்தான் வீதி, கொட்டுகொட, ஜா - எல - சித்த சுவாதீனமற்ற யுவதிகள்.

இன்று இவ்வில்லங்களில் 261 பேர்கள் தங்கியிருக்கின்றனர். இவர்கள் வறுமைக் கோட்டில் இருப்போராகவும், அனைவரது அன்பையும் அரவணைப்பையும் எதிர்பார்ப்பவர்களாக இருக்கின்றார்கள். பெரும்பாலானோர் அவர்களது உற்றார் உறவினர்களால் கைவிடப்பட்டவர்கள். இவர்களது எதிர்காலத்திற்கு ஒளியூட்டுவதற்கு உங்களது பங்களிப்பு எமக்குத் தேவை. இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

- எமக்கு உதவுபவர்களின் தேவைப்பாடு நிலவுகின்றது.
- நன்கொடையாளர்களின் பங்களிப்பும் எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, பங்குத் தந்தையர்கள், உதவிப் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் குருமட மாணவர்கள் ஆகியோரின் பங்களிப்பை வழங்குமாறு நாம் பணிந்து வேண்டுகின்றோம்.

- உங்கள் நேரத்தையும், திறமையையும் எமக்காகத் தரவும்.
- உங்கள் பங்குகளிலுள்ளவர்களுக்கு இவை பற்றி தெளிவுறுத்தி, நன்கொடைகளை மற்றும் சக்கர நாற்காலிகளை பெற்றுத் தரக்கூடிய வாய்ப்பு இருப்பின், உதவுமாறு வேண்டுகின்றோம்.
- அறிவுரைகள் வழங்குவதற்கு, வந்து தரிசிப்பதற்கு, சுத்தம் செய்வதற்கு, மருத்துவ வசதிகளை பூர்த்தி செய்வதற்காக எமக்கு பங்களிக்கவும்.
- மருத்துவ சேவைகளை வழங்கக் கூடியவர்கள் உங்கள் பங்குகளில் இருப்பவர்களானால் எமக்கு உதவுமாறு வேண்டுகின்றோம்.
- உங்கள் பங்குகளிலுள்ள திரு இருதயச் சபை, மரியாயின் சேனை உள்ளிட்ட மற்றைய சபைகளிக் மூலம் இயன்ற உதவிகளை எமக்கு பெற்றுத் தரவும். அவர்களை இங்கு அழைத்து வரவும்.
- மறைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உங்களால் இயன்ற உதவிகளை எமக்கு ஆற்றும்படி வேண்டுகின்றோம்.
- அத்துடன், பங்குத் தந்தையர்களுக்கு தம்மால் முடியுமானால் உறுதிப்பூசுதல், பாவசங்கீர்த்தனம் போன்ற அருளடையாளங்களைப் பெறுவதற்கான வகுப்புக்களை நடாத்த உதவுமாறு கேட்டக் கொள்கின்றோம்.

கார்த்திகை மாதமானது அதிக இரக்கச் செயல்களில் ஈடுபடுதவற்கான காலமாகையால், எமது குடும்பங்களில் இறந்த எமது அன்புக்குரியவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக அவர்களை நினைவுறுத்தி செய்யப் போகும் இரக்கப் பணிகளை இவ் “மார்க்ஸ்ரீ இல்ல”த்து செய்ய முயற்சிக்கவும்....

# அமிர்தசரஸ் நகர் விபத்துக்கு திருத்தந்தையின் அனுதாபத் தந்தி



இந்தியாவின் அமிர்தசரஸ் நகரில் நடைபெற்ற இரயில் விபத்தில் பலியானவர்கள் குறித்து, திருத்தந்தையின் ஆழ்ந்த அனுதாபங்களை வெளியிட்டு, இரங்கல் தந்தியொன்றை அனுப்பியுள்ளார், திருப்பீடச் செயலர், கர்தினால் பியெத்ரோ பரோலின்.

இந்த இரயில் விபத்தால் பாதிக்கப்பட்ட அனைவரோடும் இதயம் நிறைந்த ஒருமைப்பாட்டுணர்வை திருத்தந்தை வெளியிடுவதாகக் கூறும் திருப்பீடச் செயலரின் செய்தி, உயிரிழந்தோர், தங்கள் நெருங்கிய உறவுகளை இழந்தோர், காயமடைந்தோர், அனைவருக்கும், திருத்தந்தை அவர்கள், தன் செப உறுதியை வழங்குவதாகவும், பாதிக்கப்பட்டோர் அனைவருக்கும், இறைவனின் குணமளிக்கும் ஆசீரையும், பலத்தையும், அமைதியையும் வேண்டுவதாகவும், எடுத்துரைக்கிறது.

இதற்கிடையே, இவ்விபத்தில் உயிரிழந்தோர், காயமடைந்தோர், மற்றும், உறவினர்களை இழந்தோர், அனைவருக்கும், செப உறுதியை வழங்கி, இந்திய ஆயர் பேரவை, அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அமிர்தசரஸ் நகருக்கருகே ஜோதா பதக் என்ற இடத்தில் நடைபெற்ற தசரா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, இராவண உருவ பொம்மை எரிக்கப்படுவதை, இரயில் தண்டவாளங்கள் அருகே நின்று பார்த்துக்கொண்டிருந்த மக்கள் மீது விரைவு வண்டியொன்று மோதியதில், 61 பேர் கொல்லப்பட்டுள்ளனர், மற்றும், 72 பேர் காயமடைந்துள்ளனர் என்று, ஊடகங்கள் கூறுகின்றன.

# மாமன்ற உறுப்பினர்களுக்கு திருத்தந்தையின் நினைவுப்பரிசு

***இயேசுவின் மார்பில் இளம் சீடர் யோவான் சாய்ந்திருப்பதைப்போன்று உருவாக்கப்பட்டுள்ள வெண்கலப் பதக்கத்தை, நினைவு பரிசாக, மாமன்ற உறுப்பினர்களுக்கு திருத்தந்தை வழங்கினார்.***



ஐப்பசி 3ம் திகதிமுதல், 28ம் திகதி முடிய, வத்திக்கானில் இடம்பெற்ற உலக ஆயர்கள் மாமன்றக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நினைவுப் பரிசு ஒன்றை வழங்கியுள்ளார். இளையோரை மையப்படுத்தி நடைபெற்றுவரும் இந்த மாமன்றத்தின் நினைவாக, திருத்தந்தை வழங்கியுள்ள இப்பரிசுப்பொருள், இயேசுவையும், அவர் அன்பு செய்த இளம் சீடர் புனித யோவானையும் சித்திரிக்கும் ஒரு வெண்கலப் பதக்கம்.

இறுதி இரவுணவில், நிகழ்ந்த ஒரு காட்சியாக சிரித்திரிக்கப்பட்டுள்ள இந்த பதக்கத்தில், இயேசுவின் இடது கரம், அவரது முகத்தின் உயரத்திற்கு உயர்த்தியிருப்பது போலவும், வலது கரம் உணவு கிண்ணத்தில் இருப்பதுபோலவும், அவ்விரு கரங்களுக்கிடையே, இளைய சீடர் யோவான், இயேசுவின் மார்பில் சாய்ந்திருப்பது போலவும், உருவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த வெண்கலப் பதக்கத்தை, இத்தாலிய கலைஞர், ஜீனோ ஜியானேத்தி (Gino Giannetti) அவர்கள் உருவாக்கியுள்ளதாகவும், இப்பதக்கத்தின் 460 பிரதிகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐப்பசி 27, மாலை நிகழ்ந்த இறுதி அமர்வின் தொடக்கத்தில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் இந்த நினைவுப் பரிசை, தனித்தனியே வழங்கினார்.

# ஒளிமயமான எதிர்காலமாய் திகழுங்கள்

***திருஅவை, உங்கள் தாய் அவர் உங்களை கைவிடமாட்டார் தூய ஆவியாரின் காற்று வீசும் திசையில் உங்களை வழிநடத்த, திருஅவையாகிய தாய் உங்களுடன் துணை வருகிறார்.***

ஐப்பசி 28ம் திகதியன்று, 15வது உலக ஆயர்கள் மாமன்றம் நிறைவுபெற்றது. இதில் பங்கேற்ற மாமன்றத் தந்தையர் இணைந்து, இளையோருக்கென ஒரு மடலை வெளியிட்டுள்ளனர். ஐப்பசி 28, நடைபெற்ற மாமன்ற நிறைவுத் திருப்பலியின் இறுதியில், கர்தினால் லொரென்ஸோ பால்திஸ்ஸேரி அவர்கள் இம்மடலை வாசித்து, இளையோரிடம் வழங்கினார். இம்மடலில், மாமன்றத் தந்தையர் வெளிப்படுத்தியுள்ள எண்ணங்கள் இதோ:

மாமன்றத் தந்தையர்களாகிய நாங்கள், நம்பிக்கை, பற்றுறுதி, மற்றும் ஆறுதல் ஆகியவற்றை வழங்கும் சொற்களுடன் இளையோரிடம் பேச விழைகிறோம். உங்கள் குரல்கள், மகிழ்வுடன் நீங்கள் எழுப்பிய ஒலிகள், மற்றும், உங்கள் அமைதியான தருணங்கள் வழியே, "என்றும் இளமையான கிறிஸ்து"வின் குரலை, இந்நாள்களில், நாங்கள் கேட்டோம்.

இப்போது உங்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல விழைகிறோம். வாழ்வின் மீது நீங்கள் கொண்டிருக்கும் ஆர்வம், உங்கள் கனவுகளை நனவாக்கி, உங்கள் வரலாற்றை வடிவமைக்கும் என்பதை உறுதியாய் நம்புகிறோம்.

எங்களுடைய பலவீனம், தவறுகள், பாவங்கள் ஆகியவை, திருஅவைமீது நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்குத் தடையாக இருக்கக்கூடாது. திருஅவை, உங்கள் தாய் அவர் உங்களை கைவிடமாட்டார் தூய ஆவியாரின் காற்று வீசும் திசையில் உங்களை வழிநடத்த, திருஅவையாகிய தாய் உங்களுடன் துணை வருகிறார்.



தன் ஒரே மகன் இயேசுவை அளிக்கும் அளவுக்கு கடவுள் அன்புகூர்ந்த இவ்வுலகம், பொருள்கள், குறுகிய கால வெற்றிகள், இன்பம் ஆகியவற்றிலேயே கருத்தாய் இருக்கும்போது, வலுவிழந்தோரை இவ்வுலகம் நசுக்கும் போது அன்பு, அழகு, உண்மை, நீதி ஆகியவற்றின் மீது, இவ்வுலகின் கவனத்தைத் திருப்பும்வண்ணம், அதை நீங்கள் உயர்த்தவேண்டும்.

உங்களில் ஒரு சிலருடனும், இன்னும், உங்கள் செபம் மற்றும் அன்பு ஆகியவற்றோடும் நாங்கள் ஒருமாத காலம் இணைந்து பயணித்தோம். உங்களோடு இணைந்து, உலகின் ஒவ்வொரு பகுதியிலும், மறைபரப்புப் பணியாளர்களாக செல்ல விழைகிறோம்.

திருஅவைக்கும், இவ்வுலகிற்கும், உங்கள் ஆர்வம் மிக அவசரமாகத் தேவைப்படுகிறது. மிகவும் வலுவிழந்தோர், வறியோர், மற்றும் வாழ்க்கையில் காயமடைந்தோர், ஆகியோரை, உங்கள் பயணத்தின் துணையாளர்களாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

**நீங்களே நிகழ்காலம் ஒளிமயமான எதிர்காலமாய் திகழுங்கள்.**




திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அருகாமை, அவர் கூறும் சொற்கள் மற்றும் எடுத்துக்காட்டான வாழ்வு ஆகியவற்றின் வழியாக, இறைவன் திருஅவைக்கு வழங்கியுள்ள கோடைக்கு நன்றி கூறுவதாக, இலத்தீன் அமெரிக்கா, மற்றும் கரீபியன் தீவுகளின் இளையோர் இணைந்து, திருத்தந்தைக்கு ஒரு மடலையும், காணொளிச் செய்தியையும் அனுப்பியுள்ளனர்.

2013ம் ஆண்டிலிருந்து இறைவன் வழங்கியுள்ள இந்த ஆசீருக்காக நன்றி நவிலும் அதே வேளையில், எந்த ஒரு சூழலிலும் இறைவனின் நற்செய்தியை எடுத்துச் செல்லும் ஆர்வத்தையும், சக்தியையும், அர்ப்பணத்தையும் இளைய தலைமுறையினர்... 15



## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

"எல்லாச் சூழல்களிலும், வெளிப்படையான தோல்வியின் மத்தியிலும் கூட இறைவனால் செயல்பட முடியும்"

"அனைத்து கேள்விகளுக்கும், திருஅவையிடம், ஏற்கனவே தயாரிக்கப்பட்ட "ரெடி-மேட்" பதில்கள் கிடையாது என்பதை ஆயர்கள் மாமன்றம் உணர்த்துகிறது"

"ஒருமைப்பாட்டைக் காக்க, "ஒருவரையொருவர் அன்புடன் தாங்கிக்கொள்ளுங்கள்"

"இறைவன் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார் என்ற உண்மையைப் புரிந்துகொள்ள, புனிதர்களோடு நாம் கொள்ளும் உறவு உதவியாக உள்ளது. இதன் விளைவாக, நாம் இவ்வுலகில், நம்பிக்கைக்கு சான்று பகர்பவர்களாக வாழமுடியும்"

"நாம் பாவிகளாக இருக்கின்றபோதிலும், நம் அருகே எப்போதும் இருக்கும் இயேசுவைப்போல், நாமும், அவர் மீது கொண்ட அன்பினால், நம் அருகிருப்போருக்கு புதிய வாழ்வை கொணர்பவர்களாக மாறுவோம்"

"தூய ஆவியார் சொல்வதை செவிமடுக்க நாம் அழைப்புப் பெற்றுள்ளோம். தூய ஆவியார் எப்போதும் புதியவற்றையேக் கொணர்கிறார்"




"மென்மைத்தனத்தின் புரட்சி"யை முன்னின்று நடத்தக்கூடியவர்கள் பெண்களே என்பதை, கத்தோலிக்கத் திருஅவை உணர்ந்து ஏற்றுக்கொண்டுள்ளது - பேராயர் அவுசா

இவ்வுலகிற்கு இன்று மிகவும் தேவையான "மென்மைத்தனத்தின் புரட்சி"யை முன்னின்று நடத்தக்கூடியவர்கள் பெண்களே என்பதை, கத்தோலிக்கத் திருஅவை உணர்ந்து ஏற்றுக்கொண்டுள்ளது என்று, திருப்பீட உயர் அதிகாரி ஒருவர், ஐ.நா. அவையில் உரையாற்றினார்.

நியூயார்க் நகரில் அமைந்துள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெறும் கூட்டங்களில் திருப்பீடத்தின் பிரதிநிதியாகப் பங்கேற்கும் பேராயர் பெர்னார்தித்தோ அவுசா அவர்கள், "பெண்கள், அமைதி மற்றும் நீதி" என்ற தலைப்பில், ஐப்பசி 25, அன்று, நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில், இவ்வாறு கூறினார்.

"வாழ்வு, மென்மை, அமைதி, மற்றும் மகிழ்வு என்ற கொடைகள் அனைத்தையும் வழங்கும் பெரும் பேறு பெற்றவர்கள் பெண்கள்" என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறிய சொற்களை, பேராயர் அவுசா அவர்கள் தன் உரையின் தொடக்கத்தில் மேற்கோளாகக் குறிப்பிட்டார்.

செவிமடுத்தல், வரவேற்றல், மற்றும் தன்னையே தாராளமாக வழங்குதல் என்ற அடிப்படை பண்புகள் பெண்களிடம் காணப்படுவதால், இவ்வுலகிற்குத் தேவையான உரையாடலுக்கு அவர்கள் பெரும் பங்களிக்க முடியும் என்று பேராயர் அவுசா அவர்கள் தன் உரையில் சுட்டிக்காட்டினார்.

அன்பு ஒன்றே இவ்வுலகை வாழ்வதற்குரியதாக மாற்றக்கூடும் என்பதில் பெண்கள் பெரும் நம்பிக்கை கொண்டிருப்பதால், வாழ்வைப் பேணுதல், குறிப்பாக, வலுவிழந்தோரைப் பேணுதல் என்ற சவால்களை எதிர்கொள்ளும் பக்குவம் அவர்களுக்கு உண்டு என்று பேராயர் அவுசா அவர்கள் எடுத்துரைத்தார்.

மோதல்களும், போர்களும் நிறைந்துள்ள இடங்களில், பெண்கள் மிகப் பெரும் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்பதைக் குறித்து கவலை வெளியிட்ட பேராயர் அவுசா அவர்கள், பாலியல் கொடுமைகளை, போரின் கருவியாகப் பயன்படுத்துவதை, திருப்பீடம் மிக வன்மையாகக் கண்டனம் செய்கிறது என்பதை வலியுறுத்திக் கூறினார்.

# மாணவர்கள் இலவசக் கல்வியின் தார்ப்பரியத்தை உணர்வது காலத்தின் தேவையாகும்



கல்வியின் முக்கியத்துவம் பற்றி அறியாதவர்கள் அகிலத்தில் மிக அரிது. பொதுவாக அனைத்து நாடுகளிலும் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. சமயங்களும் கல்வி கற்பது ஆண் - பெண் ஆகிய இருபாலருக்கும கட்டாயக் கடமை என்கின்றது. தற்போது கல்வியைக் காசு கொடுத்து வாங்கக் கூடிய அளவில் ஒவ்வொரு கல்விக்குமென தனித்தனியான மதிப்பீடுகளை அரசாங்கமும் நிர்ணயித்துள்ளது. அது போன்றே காசுக்காக பட்டங்கள் வழங்கவும் பல்வேறு பல்கலைக்கழகங்களும் தோன்றியுள்ளன. இவ்வாறு அரசும், தனியார் நிறுவனங்களும் கல்வியைத் தாராளமயமாக்கி விட்டதால் கற்றவர்களின் எண்ணிக்கையும் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கின்றன.

கல்வி என்ற சொல்லுக்கு பலராலும் பல அர்த்தங்கள் முன்வைக்கப்படுகின்றன. அந்த அர்த்தங்களின் அடிப்படையில் நோக்கின்றபோது, ஒருவர் இந்த உலகில் பெறுகின்ற அறிவு, ஆற்றல், அனுபவம் என்பவற்றின் தொகுப்பே கல்வி எனச் சுருக்கமாக் கூற முடியும். ஒருவர் பெறுகின்ற கல்வி அவரது ஆளுமைக்கும், ஆற்றலுக்கும் திறனுக்கும் அடித்தளமாக இருந்து அவரது ஒவ்வொரு செயற்பாட்டையும் சிறப்புற மேற்கொள்ள வழி வகுக்கும். இவ்வாறான கல்வியை கல்வி கற்கும் வயதெல்லையைக் கொண்ட ஒவ்வொரு பிள்ளையும் கற்றுக்கொள்வதும் கற்றுக்கொள்ள வழி ஏற்படுத்தப்படுவதும் அவசியமாகும். இன்று எத்தனை மாணவர்கள் இலவச கல்வியின் தார்ப்பரியத்தை உணர்கின்றனர். அதேநேரம் அது தொடர்பாக பாடசாலை அதிபர், ஆசிரியர், பெற்றோர்கள் தெளிவுபடுத்துகின்றனர் என்பது ஆராயப்படவேண்டிய விடயமாகும்.

அந்த அவசியத்தை இலக்காகக் கொண்டே ஒவ்வொரு பிள்ளையும் கல்வி கற்பதற்கான உரிமை உலகளாவிய ரீதியில் வழங்கப்பட்டிருக்கிறது. இலங்கையின் அரசியமைப்பில்கூட கல்விக்கான உரிமை வழங்கப்பட்டிருகிறது. அந்த அடிப்படை உரிமையை உரிமையோடு பெற்றுக்கொள்ளும் உரிமை இந்நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரித்தானது.

உலகளாவிய ரீதியில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் பல வடிவங்களில் முறைமைப்படுத்தப்பட்டிருக்கிறது. உலகின் சில நாடுகளிலேதான் இலவசக் கல்வி முறைமை நடைமுறையில் காணப்படுகின்றது. ஒரு சில ஐரோப்பிய நாடுகளில் ஆரம்பக்கல்வி பாடசாலை மாணவர்களுக்கு இலவசக் கல்வி முறைமை உள்ளபோதிலும் இடைநிலைப் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் கொடுப்பனவு செலுத்தியே கல்வி கற்கும் நிலை காணப்படுகிறது. இருந்தபோதிலும் ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்விவரை இலவசமாக வழங்கும் பிரேசில், மொறிசியஸ், டென்மார்க், கிறீஸ், துருக்கி, கியுபா,ஆஜன்டினா, பிலிப்பைன்ஸ் போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய நாடுகளின் வரிசையில் இலங்கையும் காணப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இலங்கையும் இலவசக் கல்வியும் ஏறக்குறைய 2300 வருடங்களுக்கு முற்பட்ட கல்வி வரலாற்றைக் கொண்டதொரு நாடாக இலங்கை விளங்குகிறது. இலங்கையை ஆண்ட மேற்குலகினர். இருந்தபோதிலும் அவர்களின் கொள்கைகளுக்கு இணங்காத பலர் கல்வி வாய்ப்பை இழந்தமையை இலங்கையின் கல்வி வரலாற்றில் காணக் கூடியதாகவுள்ளது. இருப்பினும் 1836ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கோல்புறூக் ஆணைக்குழுவின் ஊடாக பாடசாலைக் கல்வி முறைமை என்ற நவீன கல்வி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட முதலாவது பாடசாலையாக கொழும்பு றோயல் கல்லூரி திகழ்கிறது. இதன் பின்னர் பல பாடசாலைகள் உருவாக்கப்பட்டன.
1931ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கைக் கல்வி முறைமையானது இலவசக் கல்வி என்ற நிலைக்கு மாற்றப்படுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த முயற்சியின் பயனாக காலணித்துவ காலத்து இலங்கை நிர்வாகப் பேரவையின் முதல் கல்வி அமைச்சரான கிறிஸ்டோபர் வில்லியம் விஜயகோண் கன்னங்கராவினால் 1940ஆம் ஆண்டு இலவசக் கல்வி முறைமை இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை இலவசக் கல்வி வாய்ப்பைப் பெறவேண்டும் என்ற இலக்குடன் அந்தப் பெருந்தகையால் இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் இலவசக் கல்வியின் தந்தையென இதுவரை கன்னங்கரா அழைக்கப்படுகின்றார். மத்திய மகா வித்தியாலயங்கள் அவரினாலேயே உருவாக்கப்பட்டது. முதலாவது உருவாக்கப்பட்ட மத்திய மகா வித்தியாலயமாக விளங்குவது மத்துகம மத்திய மகா வித்தியாலயமாகும். நகர்ப்புறங்களில் வாழ்ந்த சமூகத்தின் உயர் வர்க்கத்தினர்கள் மாத்திரம் பெற்று வந்த கல்வி வாய்ப்பை கிராமப்புற மக்களுக்கும் கிடைக்கச் செய்த பெருமை C.W.W.கன்னங்கராவையேய சாரும் என்பதை அனைவரும் மனதில் கொள்ள வேண்டும்.

அவரினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வி வாய்ப்பின் மூலமே இலங்கை மக்கள் எழுத்தறிவு மிக்கவர்களாக உள்ளனர். தென்கிழக்காசிய நாடுகளின் சனத்தொகையில் 98.1 வீதம் எழுத்தறிவு கொண்ட மக்களைக் கொண்ட நாடாக இலங்கை திகழ்கின்றது. அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களின் கடமையுணர்வும் கற்பித்தல் உணர்வும் இந்த நிலையை அடையச் செய்திருக்கிறது. பாடசாலைக் கல்வியின் தாக்கம் இலங்கையை ஆசியாவிலேயே எழுத்தறிவுடையோரை அதிகம் கொண்ட நாடு என்ற நிலைக்கு உயர்த்தியிருக்கிறது என்றால் அதற்குக் காரணமாக அமைவது பாடசாலை முதல் பல்கலைக்கழகங்கள் வரை உள்ள இலவசக் கல்வி முறைமை எனக் குறிப்பிட முடியும்.

இன்று இலவசக் கல்வியின் உன்னதத் தன்மையை எத்தனை மாணவர்கள் உணர்கின்றனர் என்பது கவலைக்குரிய விடயமாகும். இலவச புத்தகம், இலவச சீருடை, இலவச உணவு, இலவச பண உதவி, குறைந்த தொகையிலான பயணச்சீட்டு என்ற பல்வேறு இலவச சலுகைகள் மாணவர்களுக்கு வழங்கின்ற போதிலும் இதில் முழுமையான பயனை அடையாத மாணவர்கள் கற்றலில் பின்னடைகின்றனர். அதேநேரம் அனைத்தும் இலவசமாக கிடைப்பதால் கல்வியின் தார்ப்பரியத்தை உணர மறுக்கின்றனர். இதுவே பணத்திற்கு அனைத்தையும் பெற்றுக்கொள்ள நேரிடுமானால் கல்வியின் அருமை புரியும் என்ற நிலைக்கு இன்று மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆனால், சமகாலத்தில் பாடசாலை இலவசக் கல்வி முறைமையானது மேலதிக வகுப்பு அல்லது டியூசன் வகுப்புக்கள் அல்லது கல்வி முகாம்கள் என்ற பெயர்களில் பணம் தேடலுக்கான கல்வி வியாபார முறைமையாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு சில சந்தர்ப்பங்களில் 13 வருட இலவச கல்வியை முழுமையாக அனுபவித்து கஸ்டத்தின் மத்தியில் கல்வியை தொடரும் மாணவர்கள் சிறந்த வெற்றியடைகின்ற அதேவேளை, பணத்தை இரைத்து கால, நேரத்தை வீணடிக்கும் செல்வந்த மாணவர்கள் கல்வியில் தோல்வியடையும் நிலை அதிகமாகவே காணப்படுகின்றன. ஆகவே இலவச கல்வி தொடர்பாக பாடசாலை தொடங்கி பல்கலைக்கழகங்கள் வரை முறையான தெளிவூட்டல் அளிப்பது அவசியமாகும். அரசாங்கத்தினால் பெருந்தொகை பணம் செலவிடப்படுகின்றமை பற்றி மாணவர்களுக்கு சரியான விதத்தில் தெரியப்படுத்த வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும்.

1940ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இலவசக் கல்வி முறையினூடாக ஏழை மாணவர்களும் பாடசாலைகளில் அனுமதி பெற்று கல்வி வாய்ப்பைப் பெற்றுக்கொண்டனர். கன்னங்கராவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்விப் போதனை மாத்திரமன்றி இலவச பாடநூல்களும் வழங்கப்படுகின்றன. அத்தோடு நடைமுறையில் பண வவுச்சர் முறையிலான இலவச சீருடை வழங்கும் திட்டம் மற்றும் இலவச மதியவுணவு வழங்குவதிலும் ஆங்காங்கே ஒருசில முறைகேடுகளும் மோசடிகளும் இடம்பெறுவதையும் அறியக்கூடியதாகவுள்ளது. இவற்றில் ஈடுபடுகின்றவர்களும் கல்வித்துறையில் அங்கம் வகிப்பவர்களேதான் இவர்களும் கல்வி வியாபாரத்தின் பங்குதாரர்களாககச் செயற்படுபவர்களாக உள்ளனர்.
இவை தவிர பாடசாலைகளில் மாணவர்களை தரம் ஒன்று முதல் 12 வரை சேர்த்துகொள்வதற்கு எவ்வித கட்டணங்களும் பெறக்கூடாது என்று கல்வி அமைச்சினால் சுற்றுநிருபத்தினூடாக அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும் ஒரு சில தேசிய, மாகாணப் பாடசாலை அதிபர்கள் அவற்றைப் பொறுப்படுத்தாது நேரடியாகவும் மறைமுகமாகவும் பணம் பெறும் கல்வி வியாபாரிகளாகச் செயற்படுவதைக் காணமுடிகிறது. இந்நாட்டின் எதிர்கால சந்ததியினர் இலவசக் கல்வியின் முழுப் பயனையும் அடைந்துகொள்ள வேண்டுமென்பதற்காக வழங்கப்படுகின்னற அனுகூலங்களை முறையாக நிறைவேற்ற ஒரு சில ஆசிரியர்களும் அதிபர்களும் தயங்குவது அல்லது அவற்றைப் புறக்கணித்துச் செயற்படுவது அவற்றை வழங்க மறுப்பது அங்கீகரிக்கப்பட முடியாதவை.

பெற்றோர்களும் இலவசக் கல்வியின் பாதுகாப்பும் இலவசக் கல்வியின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி கல்வி வியாபாரம் கலைகட்டுவதற்கு பெற்றோர்களும் காரணகர்த்தாக்களாக இருக்கிறார்கள் என்பதையும் இங்கு சுட்டிக்காட்டுவது பொறுத்தமாகும். பெரும் போட்டித்தன்மை கொண்ட பரீட்சைகளாகவுள்ள ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கல்விப்பொதுத்தராதர சாதாரண தர, உயர்தர தேசிய பரீட்சைகளுக்குத் தோற்றும் தமது பிள்ளைகள் நல்ல பெறுபேற்றைப் பெற வேண்டும் என்பதற்காகப் பெற்றோர்கள் படும்பாடே பெரும்பாடாகும்.

இலங்கை நாட்டைப் பொருத்தவரையில் பல இனங்கள் வாழ்ந்தாலும் கல்வி என்பது பொதுவான ஒன்றாகும். அதனை இலவசமாக அனுபவிக்கும் மாணவர்கள் முழுமையான பயனை அடைகின்றார்கள் என்பதிலும் பார்க்க கிடைத்ததைக்கொண்டு திருப்தியடையாமல் தேவைக்கு அதிகமாக எதிர்ப்பார்ப்பதால் பல்வேறு உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர். எந்த துறைசார்ந்தவர்களாக இருந்தாலும் அதில் முழுமையான கவனத்தை செலுத்தும் போது சரியான இலக்கை அடைய முடியும் என்ற நம்பிக்கையை மாணவர்களுக்கு பெற்றோர்கள், ஆசிரியர்கள் வழங்க வேண்டும். எல்லாம் இலவசம் என்ற சிந்தனையில் இன்று அநேகமான மாணவர்கள் பாடசாலை தொடங்கி பல்கலைக்கழகம் வரை இடைவிலகல், முறையற்ற கல்வி வளர்ச்சியுடையவர்களாக காணப்படுகின்றனர். காரணம் இலவசக் கல்வியின் பெறுமதியை உணராமல் இருப்பதால் ஆகும்.


பெற்றோர்கள் மத்தியிலும் கௌரவப் பிரச்சினையை உருவாக்கி விடுகின்றது. இக்கௌரவப் பிரச்சினையானது சில பெற்றோர்களை பொருளாதார நெறுக்கடிக்குள்ளும் தள்ளிவிடுவதை சமூகத்தின் மத்தியில் சாதாரணமாக அவதானிக்க முடிகிறது. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொள்ளும் பெற்றோர் பாடசாலை மட்டத்தில் பிள்ளைக்கான பாட அலகுகள் நிறைவு செய்யப்படுகின்றதா? பாடசாலையில் பிள்ளையின் கல்வி அடைவு எந்த நிலையில் உள்ளது. பிள்ளைக்கு பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகள் எவ்வாறு காணப்படுகின்றது போன்ற விபரங்களை பாடசாலை மட்டத்திலிருந்து பெற்றுக்கொள்வது அவர்களின் பொறுப்பாகும்.

தொழிநுட்ப ரீதியாக வளர்ச்சியடைந்துள்ள இக்காலக்கட்டத்தில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், மாணவர்கள் அனைவரையும் அது தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதோடு சிறந்த தேடுநர்களாக மாற வேண்டும். அனைத்தும் இலவசமாக கிடைக்கும் என்ற எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வினைத்திறனாக்கப்படுவதுடன் அவற்றில் பாதகங்களை உருவாக்கும் காரணிகளும் அடையாளம் காணப்பட வேண்டும். பாடசாலைச் சூழல், ஆரோக்கியமிக்க கல்வி நடவடிக்கைக்கான தளமாக மாற்றப்பட்டு மாணவர்களின் சிறப்பான அடைவுகளுக்கு பாடசாலைகளின் சிறப்பான அடைவுகளுக்கு பாடசாலைகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளே முக்கிய காரணமென்ற மனப்பதிவுகள் ஏற்படுத்துப்படுகின்ற போது கலைக்கட்டிக்கொண்டிருக்கும் கல்வி வியாபாரம் மட்டுப்படுத்தப்பட்டு இலவசக் கல்வி பாதுகாகப்பட வேண்டும் இல்லையேல் இலவசமாக கல்வியின் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறிவிடும்.

ஆகவே, இலவசக் கல்வியினை இலவசகமாக பெறுவதிலும் பார்க்க அதனை பெற்றுக்கொள்வதில் முயற்சி செய்து சிறந்த வெற்றியை அடைவதற்கு மாணவர்களுக்கு இலவசக் கல்வியின் உன்னத நிலைப்பற்றி தெளிவுபடுத்த வேண்டும். ஏனைய உலக நாடுகளில் காணப்படுகின்ற கல்வியின் இறுக்கமான தன்மை, கல்வியைப் பெற்றுக்கொள்வதன் கடின நிலையை உணர்த்தி இலங்கைக் கல்வியின் உயர்தரத்தை நன்றாக உணர்ந்து மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு கிடைத்த வாய்ப்பை எல்லாவித சவால்களையும் கலைத்து முறையாக பயன்படுத்துவதற்கும் சிறந்த புத்திஜீவிகளாக மாறுவதற்கு முன்வர வேண்டும்.

**சி. அருள்நேசன்**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**

# விவிலிய வாசிப்பு




### 3. விவிலியத்தை கொண்டு எப்படிச் செபிப்பது.

**இரண்டாம் நிலை வாசித்தல் (Meditation / Reflection)**

இந்த நிலை இறைவனோடு உள்ள உறவை இன்னும் ஆழப்படுத்துவதாகும். முந்தைய நிலை இறைவனை அதிகமாக அறிந்து கொள்ளுதல். இறைவனை நம் வாழ்க்கைக்குள் அழைத்து நம் வாழ்வின் எல்லா அந்தரங்கங்களையும், நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் எடுத்துக் கூறுதல். அதோடு அவர் எனக்கு என்ன கூற விரும்புகிறார், வெளிப்படுத்த விரும்புகிறார் என்பதை அறிய விரும்புதல்.

வாசித்தப் பகுதி எனக்காகவே சொல்லப்பட்டது என எண்ணிக் கொள்ளுதல். (சான்று நீங்கள் உங்கள் பெயரை இங்கு நிரப்பிக் கொள்ளலாம்) போய் குருவிடம் காண்பியுங்கள். மற்ற ஒன்பது பேர் (உங்கள் பெயர்) எங்கே? (உங்கள் பெயர்) எழுந்து செல்லும் (பெயர்) உமது நம்பிக்கை (உங்கள் பெயர்) உமக்கு நலமளித்தது. இது இயேசு சொல்வதைத் தன் வயப்படுத்திக் கொள்வது (Interiorizing) ஆகும். அல்லது வாசித்தக் கதாப்பாத்திரத்தில் என்னை ஏதாாவது ஒன்றாக நினைத்து, அதன் வழியாக நான் என்ன கற்றுக்கொள்ளலாம் என யோசிப்பது. (சான்று: திரும்பி வந்த சமாரியன், திரும்பி வராத நலம் பெற்றவர் - இயேசு)

அல்லது நான் நிகழ்ச்சிகளையெல்லாம் அருகில் இருந்து பார்ப்பதுபோல (நாடகம் பார்ப்பது போல) வெளியில் இருந்து பார்ப்பது, அதிலே லயித்துப் போய்விடுவது நடப்பது அனைத்திலும் ஒன்றித்துப் போய்விடுகிறது. முக்கியமான, மனதைத் தொட்ட, எனக்காகவே சொல்லப்பட்டதாக நினைக்கின்ற வார்த்தைகளைப் பொறுமையாக, மீண்டும் மீண்டும் உள்ளத்தின் ஆழத்தில் சொல்லுதல், தியானித்தல்.

**மூன்றாம் நிலை – உணர்வுமயமாகுதல் (Gration)**

கடந்த நிலை நமது அறிவிலே செயல்பட்டது, கற்பனைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தோம். அது அறிவிலேயே நின்று விட்டால் அதை உண்மையான செபம் என்று சொல்ல முடியாது. ஏனெனில் செபம் என்பது கடவுளைப்பற்றி (Know about) அறிவது அல்ல, மாறாக இறைவன் என்னுள் எனும் நிலையை நோக்கிப் போவது. எனவே இந்த நிலை அறிவிலிருந்து (Intellect) இதயத்திற்குச் செல்லவேண்டும். இனி என்ன செய்ய வேண்டும் என்று சொல்ல முடியாது. மாறாக இந்த நிலை எப்படி இருக்கும், எப்படி உணரலாம் என்று மட்டுமே சொல்ல முடியும். அகுஸ்தீனாரைப் போல், "ஆண்டவரே என் இதயம் உனக்காக படைப்பப்பட்டது, அது உன்னிலே அமைதி கொள்ளும்வரை அமைதி அடையாது" எனும் மனநிலை. இங்கு இறைவனுக்கு நமது இதயத்தைத் திறந்து வைத்து, அவர் செயல்பட அனுமதிக்கும் நிலை. நாம் செயலை வாங்குபவர்களாக இருந்து, இறைவனைச் செயல்படுபவராக இருக்க, செயல்பட அனுமதித்தல்.

இவ்வாறு கொஞ்சம் கொஞ்சமாக அறிவுப்பூர்வமான சிந்தனை குறைந்து இதயம் செயல்பட ஆரம்பித்து விடுகிறது. இப்போது இறை அன்பும், இறைவன் மீது ஆசையும் தலைதூக்கி, நம்மை ஆக்கிரமித்துவிடும். பேசுவது அல்ல. இது ஆழ்ந்த உண்மையான காதலர்கள், தம்பதியர்கள் அருகருகே அமர்ந்து வார்த்தைகள் செய்கைகள் ஏதுமின்றி அடுத்தவரின் அன்பை, இருப்பை, பிரசன்னத்தை உணர்வுப்பூர்வமாக அனுபவிப்பது போன்றது. நம் உள் (உள் உணர்வுகளில்) இருக்கும் இறைப்பிரசனத்தோடு ஒன்றிப்போய்விடுகிற ஒன்று. இது காந்தத்தை நோக்கி இரும்புத் துகள்கள் ஈர்க்கப்பட்டு ஒட்டிக்கொள்வது போல.

"அவர் வளரவேண்டும், நானோ குறையவேண்டும்" என திருமுழுக்கு யோவான் சொன்னது போல, கலைமான் நீரோடையை ஆர்வமாய் நாடுவதுபோல (தி.பா 42), காதல் வயப்பட்டுக்கிடப்பது போன்றதொரு அனுபவம். இதை அடைந்தாலே போதும், இறுதியில் இந்த அனுபவம் என்னை, என் உணர்வை, வாழ்வை எப்படிப் பாதிக்கப் போகிறது என உணர்ந்தாலே போதும். இதுதான் இந்தச் செபப் பயணத்தின் உச்சம்.

**நான்காம் நிலை ஆழ்நிலை (Contemplation)**

இந்த நிலையில் ஒன்றும் செய்வதில்லை. மாறாக ஒருவன் தன் பயணத்தை அடைந்துவிட்டநிலை. அங்கே நின்று அமர்ந்துவிட வேண்டும். மேலும் ஏதாவது செய்ய நினைத்தால், மலை உச்சியில் தொடர்ந்து நடந்தால் கீழே வருவதுபோல, இலக்கை விட்டு தூரப்போவது போல போய்விடுவோம். இது செயல்படா நிலை. அமைதியில் இருப்பது. இது நமது கவனம் முழுவதையும் இறைவனுக்கும், அவரது அன்புக்கும் கொடுத்துவிட்டு, இறைவனை உணர்தல், சுவைத்தல், இது பெற்றுக்கொள்ளும் நேரம் (Receptive, Passivity). அமைதியாய் அமர்ந்திருக்க ஏதும் செய்யாமலிருக்க, நீரோடை வந்து பாய, புல்வெளியும் பூக்களும் தானாய்ப் பூத்துக் குலுங்கும் தருணம். அருள் தன் பாட்டுக்குச் செயல்படும் நேரம்.

இது உடனடியாக, அடுத்த கட்டம் என நிகழ்ந்துவிடாது. மற்ற மூன்று நிலைகளையும் நாம் திரும்பத் திரும்பச் செய்தால் என்றாவது, எப்போதாவது நாம் நினையாத நேரத்தில் திடீரென இந்த அனுபவம் கிடைக்கலாம். அதற்காக ஏங்கலாம். ஆனால் துணிந்து முயலக்கூடாது. பட்டாம் பூச்சியைப் பிடிக்கவேண்டும் என அலைந்து கொண்டிருக்காமல், தோட்டத்தின் ஓர் அங்கமாக நம்மை நாம் மாற்றிக்கொள்ளும்போது, அது தானாக வந்து நம்தோள்மீது அமர்வது போன்ற ஓர் அனுபவம்தான் இந்த நிலை.

**தொடரும்**

## பொன்விழாக்காணும் இயேசு மரியின் அன்பின் அருட்சகோதரிகள்.



துறவற வாழ்வின் ஐம்பதாவது பொன் விழாவினை இயேசுவுக்கு அர்ப்பணிக்கும் அன்பின் அருட்சகோதரிகளான : அருட்சகோதரி. நயோமி இராஜநாயகம், அருட்சகோதரி. மெஜல்லா பர்னாந்து, அருட்சகோதரி. நிக்கோலா இம்மானுவேல், அருட்சகோதரி. அமாலி கந்தையா, அருட்சகோதரி. குளோரியா பர்னாந்து, அருட்சகோதரி. மாரி சமரநாயக்க, அருட்சகோதரி. மில்ரட் இலியனகே ஆகியோர் ஐம்பது ஆண்டுகளாக இயேசு மரியின் துறவிகளாக, தியாகிகளாக வாழ்ந்து தங்களது வாழ்வில், வழியில் வாழ்ந்துவரும் இளம்...

15

## சகலருக்கும் சகாயம் புரியும் புனித சதா சகாய அன்னையின் ஆண்டு விழா



இரத்தினபுரி பேராலய பங்கிற்குச் சொந்தமான சகோதர ஆலயமான புனித சதா சகாய அன்னையின் ஆண்டு விழா கடந்த 11ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. கலபொட பங்கு புனித சவேரியார் ஆலய பங்குத்தந்தையான அருட்பணி. றொமேஸ் அடிகளார் கொடியேற்றி வைத்ததுடன் நவநாள் திருப்பலி அனைத்தையும் தொடர்ந்து மேற்கொண்டார். மாலை ஆராதனையை அருட்பணி. கேப்ரியல் நிக்கலஸ் அடிகளாரால் நற்கருணை ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. பேராலய பங்குத்தந்தை அருட்பணி. என்ஸ்லி தரங்க அடிகளாரும், உதவி அருட்பணி. மரிய ஜோய் அடிகளாரும் இணைந்துகொண்டனர். ஆண்டு விழா விசேட...

15

## கண் பார்வை குறைந்தோர் கவலைப்பட வேண்டாம். கால் கடுக்க நிற்க வேண்டாம்.



ஆமாம்! இரத்தினபுரி மறைமாவட்ட பெருந்தோட்ட பணியன இயக்குனரான கலபொட பங்கு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய பங்குத்தந்தை அருட்பணி. றொமேஸ் அடிகளார் கண்பார்வை குறைந்தோருக்கு உதவி புரிய எண்ணி அவ்வாறான கண்பார்வை குறைந்தோரை தேடி இனங்கண்டு பிராய்ன் ஹோல்டன் விஷன் இன்ஸ்ட்டியூட் அனுசரனையுடன் கண் பார்வை பெற்றுக்கொடுத்து வருகின்றார். கடந்த ஐப்பசி மாதம் 19ம் திகதியன்று ஹெமிங்போட் தோட்ட புனித அந்தோனியார் ஆலயத்தில் அப்பிரதேச வாழ் மக்களுக்கு இன மத - சாதி வேறுபாடின்றி அறுபத்திமூன்று பேருக்கு மூக்குக் கண்ணாடியும், முப்பத்திமூன்று பேருக்கு கண் வில்லை (காச்சி) **INTRA OCCLUR LENSE** பெற்றுக்கொடுத்தார். விசேடமாக மலையக மக்களின் நலனில் கண்ணுங்கருத்தும் கொண்டு, மூலை முடுக்குகளில் வாழ்ந்தாலும் மலையத்தான் என முத்திரை குத்துவதை மாற்ற வேண்டும். உண்பதிலும், உடுப்பதிலும் மட்டுமல்லாமல் கல்வியிலும், கலையிலும் களைகட்ட வேண்டும். சுத்தத்தோடு, சுகாதாரமாய் வாழவேண்டும். மலையகவாசிகள், நகரவாசிகளாக மாறவேண்டும். கலாசாலைக்குச் சென்று கல்விமானாக திரும்பவேண்டும். எட்டாம் வகுப்போடு நின்றுவிடாமல் என்ஜினியராக வேண்டும். பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியாக வேண்டும், சர்வகலாசாலை சென்று சட்டத்தரணியாக வேண்டும் என்றெல்லாம் மலையக மாணவர்களைக் கொஞ்சலோடும், கோபத்தோடும் கூறி ஊக்கப்படுத்துகின்ற அருட்பணி. றொமேஸ் அடிகளாரே தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் வெற்றிபெற, பயன்பெற வேண்டுகின்றோம்.

**தொகுப்பு : மேரி இருதயநாதன்**
**(மறையாசிரியர்) பேராலயம், இரத்தினபுரி.**

## சமதான நீதவான்



கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட கொட்வின் ஜோன்பிள்ளை அவர்கள் கொழும்பு மாவட்ட சமாதான நீதவானாக நீதியரசர் சந்துன் விதான அவர்களின் முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்துகொண்டார். இவர் புனித லூசியாள் கல்லூரியின் பழைய மாணவரும், கல்லூரியின் அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினரும், புனித லூசியாள், கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய சபை அங்கத்தவரும், கொட்டாஞ்சேனை புளுமென்டால் பிரஜா பொலிஸ் சங்க தலைவரும், கொட்டாஞ்சேனை வட்ட லயன்ஸ் கழக உறுப்பினருமாவார்.

**தகவல் : கொட்வின்**

# அக்குவைனஸ்

## உயர் கல்வியியல் கல்லூரி

அனைவர்க்கும் கல்வி

**64** ஆண்டுகள் சிறப்புமிக்கது

# பட்டமளிப்பு விழா 2018












## விருது வழங்கும் நிகழ்வு விழா 2018
















1954ஆம் ஆண்டு அக்குவைனஸ் கல்லூரி சர்வதேச ரீதியிலான புகழ்பெற்ற அறிஞர் மற்றும் கல்விமானான வணக்கத்திற்குரிய அருட்திரு. கலாநிதி. பீட்டர் பிள்ளை, அ.ம.தி அவர்களால் நிறுவப்பட்டது. பல தகுதி வாய்ந்த மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு செல்லமுடியாமல், எதிர்காலத்திற்கான வழி தெரியாமல் தவித்த காலப்பகுதியில் அருட்தந்தை. பீட்டர் பிள்ளை, மாணவர்களின் உயர் கல்வித்தராதரத்தை உயர்த்த அக்குவைனஸ் கல்லூரியை நிறுவியமை வரலாற்று நிகழ்வாகப் பதிவாகியது. அக்காலத்தில் ACHS, லண்டன A/L, லண்டன் பட்டப்படிப்பு பரீட்சை மற்றும் வெளிவாரிப் பட்டப்படிப்பு பரீட்சைகள் என்பன உள்ளூர் பல்கலைக்கழகங்கள் மூலம் மாணவர்களின் கல்விப்பசிக்குஉணவூட்டியது. அக்குவைனஸ் கல்லூரி தற்போது பட்டப்படிப்பினை நிறைவு செய்பவர்களுக்கு பட்டம் வழங்கும் ஓர் உயர் கல்வியகமாக மிளிர்கின்றது. அக்குவைனஸ் கல்லூரி இலங்கை பல்கலைக்கழக மாநியங்கள் ஆணைக்குழுவினால்(UGC) உயர் கல்விக்கான பட்டம் வழங்கும் கல்வியகமாக 2004ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 22ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் கல்வி அமைச்சரினால் 2005ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

**சுமார் 700 பட்டதாரிகள் மற்றும் 30,000 ற்கும் மேற்பட்ட மாணவர்கள் டிப்ளோமா பட்டத்தினைப்பெற்று வெளியேறியுள்ளனர்.**

**2 கிளை கல்வியகங்கள்**
வாதுவ / வாக

WEB: WWW.AQUINAS.LK

**3 இணை கல்வியகங்கள்**
ஜெசுயிட் அக்கடமி, காலி
யோசவ்வாஸ் கத்தோலிக்க கல்வியகம், குருநாகல்
ஞானோதயம் அ.ம.தி கல்வியகம், மன்னார்

**6 பிரதான கற்கை பீடங்கள் 20**
அக்குவைனஸ் கல்லூரியின் வலையமைப்பானது விரிவான உயர்கல்வி நிகழ்ச்சிநிரலை கொண்ட பிரதான கல்விபீடங்களை உள்ளடக்கி பரந்தநோக்குடன் நிறுவப்பட்ட ஒரு கல்லூரியாகும்.

(Q18N5391)


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்